Price 2 As 30th AUGUST 1936 Regd. No. 2514

VOL. 7 NO. 31

சுதேசமித்திரன்

SWADESAMITRAN
ILLUSTRATED WEEKLY

18718



ஜினிவா ஏரியின் அழகிய தோற்றம்.

வாரப்பதிப்பு



அடைவதற்கு இயற்கையான
விருப்பம்

வுட்வர்ட்ஸ்
கிரைப் வாடர்

குழந்தைக்கு
ஆரோக்கியத்தை தரும்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND

பிரபஞ்ச வர்த்தமானம்

ஸ்பெயின் நிலைமை

ஸ்பெயினிலிருந்து வரும் செய்திகள் அங்குள்ள உண்மை நிலைமையை விளக்குவதாக வில்லை. வடக்கே சர்க்கார் துருப்புகள் வெற்றியடைந்திருக்கின்றன. கலகக்காரர் தலைவர் ஜெனரல் மோலா தமது தலைமை ஸ்தானத்தை வல்லடோலிட் எனுமித்திலிருந்து மாற்றிக்கொண்டிருக்கிறார். பாஸ்டில் கைப்பற்றப்பட்ட பிறகு பாரிஸ் நகரம் என்ன நிலைமையிலிருந்ததோ அதே நிலைமையில் இப்பொழுது மாட்ரிட் நகரமிருப்பதாகக் கூறப்படுகிறது. பல ஸ்பானிஷ் பிஷப்புகள் கலகக்காரர்களால் கொல்லப்பட்டிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது ஸ்பெயின் விஷயத்தில் அந்நிய நாடுகள் தலையிடாதிருப்பது பற்றிப் பிரான்ஸ் தயாரித்திருந்த நகல் ஒப்பந்தத்தை இத்தாலி அங்கீகரித்திருக்கிறது. ஸ்பெயினுக்கருகிலுள்ள பொதுவான கடலில் செல்லும் பிரிட்டிஷ் கப்பல்களைச் சோதனை போடும் உரிமையைத் தாங்கள் பிரயோகிக்க உத்தேசிக்கவில்லையென ஸ்பானிய சர்க்கார் பிரிட்டிஷ் சர்க்காருக்குத் தெரிவித்திருக்கின்றனர்.

தென்னாப்பிரிக்காவில் குடியரசு ஸ்தாபிக்க வற்புறுத்து

தென்னாப்பிரிக்காவில் குடியரசை ஸ்தாபிக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தி டாக்டர் மலான் பிரிடோரியாவில் 2,000 பேர்களடங்கிய ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார். தேசியவாதிகள் குடியரசை ஸ்தாபிக்க வேண்டுமென்றும், அவ்வாறு செய்வது முற்றிலும் சாத்தியமென்றும் அந்த லக்ஷியத்தை அடைய சட்டத்திறகுட்பட்ட வகையில் பின்வரும் முறைகளைக் கையாளலாமென்றும் அவர் தெரிவித்தார். அதாவது:—



கந்தூரி உத்ஸவத்தின்போது நாகூர் தர்கா மின்சார விளக்குகளால் தீபாலங்காரம் செய்யப்பட்டிருந்த காட்சி.

(1) பிரிட்டிஷ் குடிகள் என்ற பெயரை நீக்கிவிடுதல். (2) ஏகாதிபத்திய மகாநாடுகளுடன் எத்தகைய சம்பந்தமும் வைத்துக்கொள்ளாதிருத்தல் (3) மன்னர் மகுடாபிஷேகத்திற்குச் செல்ல மறுத்துவிடல் (4) வெளி நாட்டைச் சேர்ந்தவர்களைக்கவர்னர்ஜெனரல்களாக நியமிக்கும் வழக்கத்தை ரத்து செய்யல். (5) மன்னருக்குப் பதிலாக ஒரு தலைவர் பதவி ஏற்படுத்துதல். (6) புதிய அரசியல் முறையின்படி அரசாங்கத் தலைவரை ஜனங்களே தெரிந்தெடுக்கவேண்டும். அவர் ஜனங்களுக்கு ஜவாப்தாரியாக இருக்கவேண்டுமேயன்றி மன்னருக்கு ஜவாப்தாரியாக விருக்கக்கூடாது. (7) தேசிய சட்டங்களிலும், சட்ட புத்தகங்களிலும் "மன்னர்" என்ற பதத்திற்குப் பதிலாக "தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்" என்ற பதங்களைச் சேர்க்கவேண்டும். இம்முறைகளெல்லாம் அயர்லாந்தில் கையாளப்பட்டதன் பலனாக, அந்நாடு பூர்ண சுதந்திரத்துடன் கூடிய குடியரசை அடையும் நிலையிலிருந்து வருகின்றது.

பாலஸ்தீன நிலைமை

பாலஸ்தீன நிலைமை நெருக்கடியானதாகவே இருப்பதாகத்தெரிகிறது. ஜாபாவில் இரு

(40-ம் பக்கம் பார்க்க)

பொருளடக்கம்

விஷயம்.
பிரபஞ்ச வர்த்தமானம
இந்திய வர்த்தமானம்
நாட்டு நடப்பு-சித்திர
கண்ணாடி
விநோதக்கொத்து 5
விமலாவின் மணம
(சிறுகதை) 6
ஜம்புலிங்கத்தின்
திருவிளையாடல்கள்
(புதிய தொடர்கதை) 8
ஸங்கீதப்பகுதி 10
தையல்வேலை 12
ஷாஜஹானின் மயிலாஸனம் 13
தென்னிந்தியப் பிரமுகர்கள் 5
நவநாகரீகம் 17
நூதன வைத்தியம்
(ஹாஸ்யக்கதை) 23
கண் இழந்த கண்ணன்
(சிறுவர் பகுதி) 25
அதிசயம்-ஆனால் உண்மை 28
பண்டைக் காலத்துப் பள்ளிக்
கூடங்கள் 29
ஐயோ போய்விட்டதே! 36
மகாபாரதம் 37
கண்ணோட்டம் - பிரமுகர்கள்
(படங்கள்) 39

சூதக கோளாறுகள் தீர்ந்துவிட்டன!

ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் சூதக வியாதிகளை வென்று சந்தான பாக்யத்தையடைந்தனர்.

"வேலன்ஸ் ஸ்திரீ ஸோதரி"

(அபூர்வ மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.)

சூதகக் கோளாறுகளை நீக்கி, மலட்டுப் பூச்சிகளைக் கொன்று, கருப்பைக்கு பலந்தந்து, சந்தான பாக்யத்தையளிக்கும் சிறந்த ஔஷதம். அநேக நற்சாக்ஷிகள் பெற்றது.

ஸெட் விலை ரூ. 5. விவரத்திற்கு எழுதவும்.

திருச்சி சம்பவம்பற்றிக் காரியக்கமிட்டி முடிவு

பம்பாயில் நடந்த காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் திருச்சி சம்பவத்தைப்பற்றி ஆலோசனை நடந்தது. தேசத்தின் பெருநலம் கருதி ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் தமது ராஜிநாமாவைப் புனராலோசனை செய்யவேண்டுமெனக் காரியக்கமிட்டி முழுதும் வேண்டிக்கொண்டும் ஸ்ரீமான் ஆச்சாரியார் தமது முடிவைப் புனராலோசனை செய்ய மறுத்துவிட்டதன் பயனாகக் காரியக்கமிட்டி அவரது ராஜிநாமாவை மிகுந்த வருத்தத்துடன் அங்கிகரித்தது. திருச்சி தேர்தல் தகராறு பற்றிக் காரியக்கமிட்டி நீண்டதோர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. இதன்படி டாக்டர் ராஜனின் செய்கை அனுமதிக்கக்கூடியதில்லையென்பதாக அவர் செய்கை கண்டிக்கப்பட்டிருக்கிறது. டாக்டர் ராஜன் எக்காரணங்கள் கொண்டு செய்திருந்தாலும் உறுதிமொழிக் கெதிராக அவர் நடப்பது சரியில்லையென்பது கமிட்டியின் அபிப்ராயம்.

வகுப்புத் தீர்ப்பு

காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு வகுப்புத் தீர்ப்பு சம்பந்தமாக வங்காள காங்கிரஸ் கமிட்டி காரியதரிசிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர், பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:—காங்கிரஸ் வகுப்புத்தீர்ப்பை வெறுக்கிறது அதை ஏற்கவில்லை; நிராகரிக்கிறது அது நமது தேச முன்னேற்றத்திற்கும் சுதந்திரத்திற்கும் இடையூறாகவிருப்பதாலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆதிபத்தியத்தில் அது சேர்ந்தாலும் அதைக் காங்கிரஸ் சரியென ஒருக்காலும் சொல்ல முடியாது.

கும்பகோணம் தாலூகா முதல் அரசியல் மகாநாடு. கும்பகோணத்தில் ஸ்ரீமான் கே. சந்தானம் தலைமையில் நடைபெற்றது.

தூங்க வழி சொன்னால் ரூ. 20,000 இனம்

4 வருஷகாலமாகத் தூக்கம் பிடிக்காமல் கஷ்டப்பட்டுவந்த கல்கத்தா வாசியான ராய்பகதூர் ராம்ஜீதாஸ் பஜோரியா தமக்குத் தூங்கும் பாக்கியம் சித்திக்குமாறு செய்கிறவர்களுக்கு 20,000 ரூபாய் இனம் கொடுப்பதாக அறிவித்திருந்

காக உலகின் பல பாகங்களிலிருந்தும் பல துறைகளிலுமுள்ளவர்கள் அவருக்கு ஆலோசனைகளைக் கூறவும் ஆரம்பித்தனர். ஆனால் மிக்க வைதீகரான ராய்பகதூர் பஜோரியா அவற்றில் எதையும் உபயோகிக்க முடியவில்லை. பல வைத்தியர்கள் இந்தியாவுக்கு வந்து அவரைச் சொஸ்தப்படுத்தத் தயாராக இருப்பதாகத் தந்தியடித்தனர்.

பலர் தங்களுக்கு வெகுமதி வேண்டாமென்றும், கஷ்டப்படுகின்ற ஒரு சகோதரப் பிரஜையின் கஷ்டத்தை நீக்கினேம் என்ற திருப்தியே தங்களுக்குப் போதுமென்றும் சொல்லி ராய்பகதூருக்கு யோசனைகளைக் கூறினர்.

லண்டனைச் சேர்ந்த மின்சார வைத்தியக் கருவிகளைச் செய்யும் ஒரு கம்பெனியார் கூறியபடி ராய்பகதூருடைய சிகிச்சை செய்யப்பட்டது. ஒருவர் யோசனைப்படி 4 வருஷமாகத் தூங்காதராய்பகதூர் தற்போது தூங்க ஆரம்பித்திருக்கிறார்.

கணவனைக் கொல்ல மனைவியின் பரிசு

25 வயதுடைய சீக்கிய ... தலையை வாங்கிவிடுவோருக்கு ரூ 600 கொடுப்பதாகக் கூறினளென்று லாகூர் ஹைகோர்ட்டில் விசாரிக்கப்பட்ட ஒரு வழக்கினின்று வெளியாகிறது பிரஸ்தாப சீக்கிய மாது தனது கணவனை விரும்பவில்லையென்றும் அவனைக் கொன்று

(4-ம் பக்கம் பார்க்க)

கவலைவேண்டாம்.

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்லமருந்து வேண்டுமானல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினல் நிவர்த்திக்கத் தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி,
வைத்தியசாலை,
பழநி, S. I. R.

TEA BEST & CHEAPEST
GIVE US A TRIAL & BE CONVINCED. LOOSE 56 & PACKETS 48 LBS PER BOX, FREE DELIVERY PER LB. LOOSE: O.P -/8/-, BROKEN -/7/-, DUST -/7/6. FLAVOURY DARJEELING BROKEN -/9/6, P.F. -/10/-. 1 LB LEAD PKT (LEAF): RED (DARJEELING) -/11/-, BLUE -/8/6. 1 LB YELLOW PAPER PACKETS: LEAF -/8/-, DUST -/8/6. DELEARS' REBATE 3 PIES PER LB. BOXES AVAILABLE WITHOUT REBATE. ADVANCE
G.T.CO. 185 MANICKTOLLA ST, CALCUTTA

வாசனை எண்ணெய்கள் நீங்களே தயாரித்து பணத்தை மீதி செய்யலாம்!

கீழ்க்கண்ட ஏதாவது ஒரு ரக மோஹினி எஸன்ஸை 16 அவுன்ஸ் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய், கடலை எண்ணெயில் கலந்தால் உங்களுக்கு சிறந்த வாசனை எண்ணெயாகும். விலைகளோ மிகவும் குறைவு. இத்துடன் வெகுமதிகள்:—1 பாக்கெட் ஆல்கனெட் ரூட் (எண்ணெய்க்கு கலர் கொடுக்க) வாசனை திரவியம் தயாரிக்கும் விதம் 1936ம் வருஷத்திய ஒரு பாக்கட் காலண்டர் இவைகள் தரப்படும்.

சுத்தமான மோஹினி எஸன்ஸுகளின் பெயர்களும் விலைகளும்.

சாம்பாக்	ரூ. 2-0	போகுல்	ரூ. 1-8
காஷ்	,, 2-0	ஹினு	,, 1-8
கொயிரோ	,, 2-0	வல்லி	,, 1-0
மஸ்க்	,, 2-0	தாமரை	,, 1-0
கதம்பம்	,, 1-8	கோலாபீ	,, 1-0
மல்லிகை	,, 1-8	மோடியா	,, 1-0
ரோஸ்	,, 1-8	ஸ்வீட்	,, 1-0

அரை அவுன்ஸ் பாட்டல்களாக கிடைக்கும். பாக்கிங், தபால் சார்ஜ், வி. பி. செலவு வேறு.

S. PAUL & Co, Perfumers,
(Dept. S. W.) 4, Hospital Street,
Dharamtola, Calcutta.

நாட்டு நடப்பு - சித்திரக் கண்ணாடி



சென்னை ஆக்டிங் கவர்னர் ஸர் கே. வி. ரெட்டி சென்ற ஞாயிற்றுக்கிழமை உதகமண்டலத்திலிருந்து சென்னை வந்து சேர்ந்தார்.

காலஞ்சென்ற மிஸ்டர் ஜி. டி. எச். போல்டன் ஞாபகார்த்தமாக சைதாப்பேட்டை ஒய் எம். வி. ஏ. காலேஜில் திவான் பகதூர் எஸ் குமாரசாமி ரெட்டியார் ஒரு ஹாஸ்டலைத் திறந்து வைத்தார்.

(வலது பக்கப் படம்)

செஞ்சிலுவைச் சங்க இந்தியக் கிளையின் தலைவர் ஸர் எர்னஸ்ட் போர்டன் சென்னைக்கு விஜயம் செய்தபோது ஆம்புலன்ஸ் படையைப் பார்வையிட்டார்.



இந்திய வர்த்தமானம்

(2-ம பக்கத் தொடர்ச்சி)

விட்டால் ரூ 600 கொடுப்பதாக அவள் தன் ஆசை நாயகனிடம் தெரிவித்தாளென்றும் பகசிங் என்ற அவன் மற்றும் இருவரைச்சேர்த்துக்கொண்டு தன் ஆசை நாயகியின் கணவனைக் கொன்றுவிட்டானென்றும் இவ்வழக்கில் சாக்ஷியமிருந்தது.

கடும் வெயிலில் நிற்கும் தண்டனை

காசூர் தாகிலிலுள்ள (லாகூர்) ஆமத் பாரா என்ற கிராமத்தைச் சேர்ந்த 3 கிழ ஜமீந்தார்கள் ஜலசெஸ்

சென்னை புதிய பிரஸிடென்ஸி போஸ்ட்மாஸ்டர் ஸ்ரீமான் ரெஜினல்ட் விங்.

கொடாததற்காகத் தங்களை ஒரு ரெவின்யூ உத்தியோகஸ்தர் அவமானப்படுத்தித் துன்பப்படுத்தியதாக டிப்டி கமிஷனரிடம் புகார் செய்திருக்கின்றனர். அதில் அவர்கள் அந்த உத்தியோகஸ்தர் தங்களைக் கடும் வெயிலில் பல மணி நேரம் சூரியனை அண்ணாந்து பார்த்தவண்ணம் நிற்கும்படி நிர்ப்பந்தித்ததாகவும் தங்களை அசைவதற்கோ இஷ்டப்படி நிற்பதற்கோ விடவில்லையென்றும் தாங்கள் வயோதிகர்களானபடியால், வெயில் தங்காமல் களைப்பு மேலிட ஆரம்பித்தபோது மாறி நிற்க ஆரம்பித்ததாகவும் இதற்காகத் தங்களை அந்த உத்தியோகஸ்தர் நையப்புடைத்ததாகவும் குறிப்பிட்டிருக்கின்றனர்.

முதலாவது செங்குந்தர் ஸ்திரீகள் மகாநாட்டிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமதி மீனாக்ஷி அம்மாள்.

மகனைக் கொன்ற தாய்

பாட்டியாலா சமஸ்தானத்தில் ஒரு கிராமத்தில் 14 வயதுள்ள சிறுவனை அவனது தாயே கொன்றுவிட்டதாகக் கூறப்படுகிறது

இச்சிறுவனுக்குத் தகப்பனில்லை இவனது பள்ளித்தோழர்கள் இவனது தாய் வேறொருவருடன் கள்ள நட்புக் கொண்டிருப்பதுபற்றி இவனைக்கேலி செய்து ஏசினராம். இந்த ஏசலைப் பொறுக்காமல் அச்சிறுவன் தனது தாயைத் தூஷித்தானாம். மறுநாட் காலை அவனைப் பள்ளிக்கு அழைத்துப் போக அவனது தோழர்கள் சென்றபோது அவன் கொல்லப்பட்டிருப்பது தெரியவந்தது. போலீஸார் அவனது தாயையும் அவளது ஆசை நாயகனெனப்படும் நபரையும் கைது செய்தனர்.

காஸ்டரால் மகச்சிறந்த கூந்தல் தைலம்; உங்கள் கூந்தலுக்கு அழகூட்டும்; எவ்வளவு உஷ்ணப்பத்திலும் பண்டைக்குக் குளிர்ச்சியளிக்கும்.

CASTOROL

வாசனைமிகுந்த விளக்கெண்ணெயில் விசேஷ சேர்க்கை. இதையே கேட்டு வாங்குங்கள்.

தயாரிப்பவர்கள்:—
கல்கத்தா கெமிக்கல் கம்பெனி, லிமி.

எ து ?

தமிழ் நாட்டில் குறைந்த சந்தாவில் அதிக பக்கங்களோடு வெளிவரும் தமிழ் மாதப் பத்திரிகை.

"சித்தன்"

ஒன்றே. இனிய கதைகள், ஹாஸ்யம், உலகச் செய்தி, வைத்தியக் குறிப்பு, சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன நிறைந்தது

வருட சந்தா அணா (8) எட்டே. வெளிநாடு ரூ. 1.

மாதிரிப் பிரதி இனம். விளம்பர விகிதம் மிகவும் குறைவு,

விபரங்களுக்கு எழுதவும். மானேஜர் "சித்தன்" பழனி, S. I

ஸோல்ஜர் உருவம் இல்லாத டின் பிளிட் அல்ல.

தென்னிந்தியாவிற்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 11-14, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

இனம்! இனம்!! இனம்!!!

விலையின்றி பெற்றுக்கொள்ளுங்கள்

'ரூவ்ஸ் டெவலப்பர்'

தேகமுழுவதையும் விருத்திசெய்யக்கூடிய
ஓர் உத்தம சாஸ்திரீக உபகரணம்.
பன்னிரண்டு வயது முதல் எழுபதுவரை யாவருக்கும்
உபயோகிக்கக்கூடியது.

ஆரோக்கியமும் பலமும் அதிகரிப்பதற்காக பிரப். எம், வி. கிருஷ்ண ராவ் நூதனமாய்க் கண்டுபிடித்த இவ்வுபகரணம் நெடுங்கால உபயோகத்திற்காக, உத்தம இந்தியரப்பரினால் செய்யப்பட்டுள்ளது எந்த அவயவத்தையும் பழுதுபடுத்தாமல் மிக பலவீன மனிதனுக்கும், ஆரோக்யமும் பலமும அளிக்கக் கூடியதாக உத்தம சாஸ்திரீகமுறையில் நிருமிதமாயிருக்கின்றது.

இப்போதே எழுதுங்கள்

உங்கள் விலாசத்தை உடனே அனுப்புவீர்களானால் ஓர் ரூவ்ஸ் டெவலப்பர் விலை இன்றி பெற்றுக் கொள்ளலாம்.

நம் நாட்டு மக்களின் தேகாபிவிருத்தியை மட்டும் நோக்கமாகக் கொண்டு, பல புஸ்தகங்களும், பல தேகாப்பியாச உபகரணங்களும் விலை இன்றி பரப்பி வருகிற எங்கள் சங்கம், இப்போது மிக்க சந்தோஷத்துடன் ஆயிரக்கணக்கான ரூவ்ஸ் டெவலப்பர்களை இனமாக கொடுக்கின்றது. ஆகையால் ஓர் போஸ்ட் கார்டில் இப்போதே உங்கள் அபேக்ஷையை அனுப்பி ஓர் டெவலப்பரை பெற்றுக் கொள்வீர்கள்.

பாரத ஆரோக்ய விருத்திமண்டபம்,
திருவனந்தபுரம், (தென்னிந்தியா.)

சமையற்காரன்:—முன்னிருந்த வேலைக்காரன் சாப்பிட்டதைப்போல் நீ இரண்டு பங்கு அதிகம் சாப்பிடுகிறாய்.

வேலைக்காரன்:—அதற்குப் பதிலாக முன்னிருந்த வேலைக்காரன் எவ்வளவு நாட்கள் இருந்தானோ அதில் பாதியிலேயே நின்றுவிடுகிறேன்.

———

சிறுவன்:—நான் ஒரு புஸ்தகம் வாங்கிவரப் போகிறேன்.

தாய்:—நீயா?

"ஆம்; அப்பா இன்று காலை ஒரு அழகிய விளக்கு வாங்கி வந்திருக்கிறார். அதை வீணாக்காமல் ஒரு புஸ்தகத்தை வாங்கி வந்து படிக்கப் போகிறேன்.

———

பையன் ஏதோ யோசனை செய்துகொண்டே உள்ளே நுழைந்தான். தகப்பனார் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார். தன்னைக் கவனிக்க வேண்டுமென்று எண்ணி, பையன் முயற்சி செய்து பார்த்தான். ஆனால் தகப்பனார் கவனிக்காமலிருக்கவே பையன், "அப்பா! நீங்கள் பள்ளிக்கூடத்திலிருந்து துரத்தப்பட்டதைப்பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள் அல்லவா?" என்றான்.

தகப்பன்:—ஆம்.

பையன்:—அதையே நான் இப்பொழுது சொல்ல வந்திருக்கிறேன்.

———

முதல் கைதி:—உனக்கு எவ்வளவு காலம் தண்டனை விதிக்கப்பட்டது.

இரண்டாவது கைதி (சலிப்புடன்):—99 வருஷம்

"அதுவாவது பரவாயில்லை"

'ஏன்?"

"எனக்கு ஆயுள் பரியந்தம் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது"

———

இரண்டு திருடர்கள் ஒரு கிராமத்திற்குச் சென்று இரண்டுதினங்கள் வசித்தனர். மறுநாள், முதல் திருடன் "இந்த வாஸம் எனக்குப் பிடிக்கிறது. லக்ஷ ரூபாய் கொடுத்தால் கூட நான் இனிமேல் திருடப் போவதில்லை. என் பணத்தை வைத்துக்கொண்டு இங்கு சௌக்கியமாக வசிக்கப் போகிறேன்" என்றான்.

இரண்டாவது:—இரண்டு லக்ஷத்திற்குத் திருடுவாயா?

"முடியாது"

"ஐந்து லக்ஷம்"

"ஐந்து லக்ஷமா? ஆகா! அப்படியானால் சரி. ஐந்து லக்ஷமென்றால் சுலபமா?"

———

ராமு:—என் மனைவிக்கு ஒன்றும் ஞாபகமிருப்பதில்லை.

கிருஷ்ணன்:—அதற்குப் பரிகாரமிருக்கிறது. எதை அவள் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டுமோ, அதை ஒரு கடிதத்தில் எழுதி நிலைக் கண்ணாடியில் ஒட்டி விடு.

———

ஒருவர் வக்கீலிடம் சென்று கொலைக் குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஆஜராகி விடுதலையடையும்படிச் செய்ய எவ்வளவு பணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்.

வக்கீல்:—ஆயிரம் ரூபாய்.

வந்தவர் உடனே ஆயிரம் ரூபாயைக் கொடுத்துவிட்டு "இதோ என் எதிரியைக் கொன்றுவிட்டு வருகிறேன்" என்று சொல்லி வெளியே சென்றார்.

———

புதிதாகப் பணக்காரரான ஒருவர் மோட்டார் வாங்கி அதில் ஏறி உட்கார்ந்து கொண்டார்.

டிரைவர்:—எங்கே போக வேண்டும்?

அபசகுனம். எங்கே, போக வேண்டுமென்று கேட்க உனக்கு என்னடா தைரியம்?"

நமது சிறு கதை.

விமலாவின் மணம்

——:[o]:——

(ஆர். ஏ. சேஷாத்ரி)

சென்னைக்கருகிலுள்ள மாம்பலத்தில் அனேக தனவந்தர்கள் தமது சொந்த பங்களாக்களைக் கட்டிக்கொண்டு சுகமே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இவ்விடம் பார்ப்பதற்கு மிகவும் மனோரம்மியமாயிருப்பது யாவருமறிந்ததே.

மேற்குறிப்பிட்ட இடத்தில் ஓர் பங்களாவின் தோட்டத்தில் ஒரு சலவைக்கல் ஆசனத்தில், அழகே உருவெடுத்து வந்ததென, சுமார் பதினைந்து வயது மதிக்கக்கூடிய ஒரு வனிதை உட்கார்ந்துகொண்டு யார் வரவையோ எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அடக்கம், தைரியம், நாணம் இவற்றின் அவதாரமாய் விளங்கின இம்மடமங்கையின் பெயர் விமலா.

கதிரவன் மறைந்து இருள் சூழ்ந்தது. விமலாவின் மனமும் விசனத்திலாழ்ந்தது. சுற்றிலும் அடிக்கடி நோக்கிக் கவலைப்படலானாள். ஓர் பணியாளன் இறைக்க ஓடிவந்து கையில் கொடுத்துவிட்டு மறைந்தான். தோட்டத்திலிருந்த ஓர் விளக்கருகில் சென்று, வெகு ஆவலுடன், மறைவாகக் கடிதத்தைப் படித்தாள். சூரியன் முன்கண்ட பனிபோல் அவள் விசனக்குறி மறைந்து அவள் முகம் மலர்ந்தது.

சிறு வயது முதல் நேசித்து வந்த தனது அத்தான் கமலகாந்தனின் கடிதமே அவள் கையில் இப்பொழுது இருப்பது. அதுவே அவள் மலர்ந்த முகத்திற்குக் காரணம். தான் காதலித்த கமலகாந்தனுக்குத் தன்னை விவாகம் செய்யாமல், தன்னைத் தனது தந்தை துர்கபிரசாத் என்பவரை மணக்கும்படிச்சொன்னதில் அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

தன் தாயிடம் சொல்லிப் பார்த்தாள். ஒன்றும் பயன் படவில்லை. தன் காதலன் கமலகாந்தனுக்கும், தன் தந்தைக்கும் சிலகாலமாய் மனஸ்தாபம் ஏற்பட்டிருந்ததாலும், இன்னும் சில காரணங்களா தந்தை நடக்கமாட்டாரென்று தெரிந்துகொண்ட விமலா, ஒருவருமறியாவண்ணம் தன் காதலனுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினாள். அதற்கு பதில்தான் இப்போது அவள் கையில் இருப்பது. அதனால் ஒருவாறு திருப்தியடைந்த விமலா தன்னறைக்குச் சென்று கடிதத்தை மறைத்து வைத்துத். தன் தந்தையின் மூடத்தனத்திற்கு வருந்தினாள்.

அதே சமயத்தில் அவளிருக்கும் பங்களாவின் மற்றொரு பாகத்தில் வேலைகள் வெகு சுறுசுறுப்பாய் நடந்துகொண்டிருந்தன. கலியாண ஏற்பாடுகள் மிகவும் தடபுடலாய் நடந்துகொண்டிருந்தன. மறுநாள் பொழுது விடிந்தது. விமலாவின் வீட்டில் அநேகம் விருந்தினர் வந்திறங்கினர். விமலாவின் தந்தை தயாநாதர் விருந்தினரை உபசரித்து வரவேற்றார். அவர் பத்தினி சாந்தாதேவி ஸ்திரீகளை வர

சென்னை கே. எஸ். ஷிவ்ஜி கம்பெனி சொந்தக்காரரான ஜனாப் கே. எஸ். ஷிவ்ஜி ஜப்பான் முதலிய கீழ் நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு சென்னை திரும்பி வந்தார். சென்ட்ரல் ஸ்டேஷனில் அவர் வரவேற்கப்பட்ட காட்சி.

ரூ. 500 இனாம்!

திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும்,

உலகக் கியாதி வாய்ந்த எனது மருந்துகளை 15 தினங்களுக்கு உபயோகித்தால் எல்லாவிதமான திமிர் குஷ்டமும், வெண்குஷ்டமும் நிரந்தரமாக நிவர்த்தியாகிவிடும். பற்பல டாக்டர்கள், கவிராஜர்கள், ஹக்கீம்களும் கைவிட்டதானாலும்கூட பரவாயில்லை. எனது அற்புத மருந்துகளை உபயோகியுங்கள். பலனில்லை என நிரூபிப்பவருக்கு ரூ. 500 இனாம். 7 நாள் மருந்து ரூ. 2—8; 15 நாள் மருந்து ரூ. 4. தபால் செலவு தனி.

SRI SWAMI & Co,
(34) Panchpota, Bengal.

நரைமயிரை அகற்றுங்கள்

உங்களது தலைமயிர் வெகுகாலமாகவோ, மிக அதிகமாகவோ நரைத்திருந்தால் விவலேன் ஹேர் ஆயிலை உபயோகித்தால் நரை நீங்கித் தலைமயிர் கருகருவென்று பழையபடிப் பிரகாசிக்கும். இன்றே விவலேன் எண்ணெயை உபயோகியுங்கள். அதிக நரையில்லாவிடில் சிறிய பாட்டில் ரூபா 1-12. நரை முற்றியிருந்தால் பெரிய பாட்டில் ரூ. 3. ஏககாலத்தில் 3 பாட்டில்கள் வாங்கினால் தபால் செலவு இனாம்.

சயண்டிபிக் பப்ளிஷிங்கம்பெனி,
(மெடிகல் டிபார்ட்மெண்டு, S. 15)
பவானிப்பூர், — கல்கத்தா.

மதராஸ் ஸ்டாக்கிஸ்டு:—
ஜே. ஹஸாரிமால் & கம்பெனி, 260, சைனாபஜார் ரோட்,

ஸப் ஸ்டாக்கிஸ்டு:—
தாதா & கம்பெனி, மருந்து வியாபாரிகள், 52, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி. மதராஸ்.

செகந்தராபாத் ஸ்டாக்கிஸ்டு:—
பம்ரக் பிரதர்ஸ், ஜம்மா மஸ்ஜித்

மியூச்சுவல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ் :
187, மவுண்ட் ரோட், மதராஸ்.

நவீன, சாஸ்திர பூர்வமான, தாராளத் தன்மை கொண்ட பாலிஸி ஒப்பந்தங்கள் எம்மிடம் கிடைக்கும். எல்லோரையும் திருப்தி செய்விப்பவை குறைந்த பிரீமிய விகிதங்கள்

டி. வி. ராமமூர்த்தி,

நிறைந்திருந்த யாவர் முகத்திலும் சந்தோஷமும் குதூகலமும் நிரம்பியிருந்தன. ஆனால் ஓர் உருவம் மாத்திரம் பொங்கியெழுந்த மனவேதனையுடன் தவித்துக்கொண்டிருந்தது. அதுவே நம் கதாநாயகி விமலா.

விமலா தனக்குள், "ஏன் என் அன்பர் இன்னும் ஒருவிதமான ஏற்பாடும் செய்யவில்லை? இன்னும் அரைமணியில் அச்சண்டாளர்கள் வந்துவிடுவார்களே! பிறகு நான் என்ன செய்வது? இதுவரை அவர் கடிதத்தை நம்பியல்லவோ மோசம் போய்விட்டேன். இல்லையேல் தற்கொலை செய்து உயிரைப் போக்கிக் கொண்டிருப்பேனே!" என்று வருந்திக்கொண்டிருந்தாள். ஒவ்வொரு நிமிஷமும் கமலகாந்தனின் வரவை எதிர்பார்த்தாள். எல்லாம் வீணாயிற்று. என்ன செய்வாள் அபலை. கடைசியாக ஒருவிதத் தீர்மானத்துடன் தன் அறையை விட்டு வெளியில் வருகையில், அவள் மேல் ஒரு கடிதம் விழுந்தது. அதைச் சட்டென்று எடுத்துத் தன் அறைக்குள் சென்று படித்தாள். அதில், "உன் தந்தையின் இஷ்டப்படி நட; நன்மையுண்டு. தவற வேண்டாம். கமலகாந்தன்" என்று எழுதியிருப்பதைப் பார்த்து ஒன்றுந் தோன்றாமல் அசைவற்றுப் போனாள். ஒருவிதத் தீர்மானத்திற்கு வந்தவள்போல் உட்கார்ந்திருக்கும் சமயத்தில் அவள் தோழிகளான சுந்தரி, கமலா இருவரும் ஒரு நிமிஷங் கூட அவளைத் தனியாக விடாமல் தொடர்ந்துகொண்டிருந்தனர். குறித்த நேரம் வந்ததும், துர்க பிரஸாத்துக்கும், விமலாவுக்கும் நிச்சயதார்த்தம் நடந்துவிட்டது.

மறுநாள் விவாகமும் வெகு விமரிசையாய் நடந்தது. இதுவரையில் எல்லாவற்றையும் மனக்கசப்புடன் சகித்துவந்த விமலா, அதற்கு மேலும் தாங்கமாட்டாமல், துர்க பிரசாத் இருக்கும் அறைக்குச் சென்று, ரௌத்ராகாரமான கோபத்துடன், "ஏ மானிடப் பதரே! நீயும் ஓர் ஆடவனா? அநியாயமாய் ஸ்திரீஹத்திக்கு ஆளானதைத் தவிர உனக்கு என்னால் ஒருவிதச் சுகமும் கிடைக்கப்போகிறதில்லை. என் வாழ்நாளைப் பாழ்படுத்திய துன்மார்க்கா! உன் ஜன்மமும் ஓர் ஜன்மமா?" என்று கடிந்து கூறினாள்.

விமலாவின் கோபாவேசத்தைக் கண்ட துர்கபிரஸாத், புன்சிரிப்புடன் எழுந்துவந்து, "கண்மணி! ஏன் உனக்கு இவ்வளவு கோபம்? நான் ஓர் ஆடவனாய் இருக்கக் கொண்டுதான் உன்னை மணந்தேன். இதல் தப்பிதமென்ன கூறு" என்றான்.

விமலா முன்னிலும் அதிக வாழ்க்கையைத் துன்பத்திற்குள்ளாக்கிய பாபம் உன்னை விடுமா? என்னருமை அத்தானும் நானும் விவாகம் செய்துகொள்ள எண்ணியிருந்ததில், மண்ணைப் போட்டுத் திடீரென்று முளைத்த பாபியல்லவோ நீ! இனி வீணில் வார்த்தையாடுவதில் பயனில்லை. ஏதோ மூடநம்பிக்கையால் இதுவரை சும்மா இருந்துவிட்டேன். இன்றுடன் என் வாழ்நாள் முற்றிவிட்டது. இனிமேலாவது, நீ மறுமணம் செய்து கொண்டால், உனக்கு மனைவியாய் வரும் பெண்மணி உன்மேல் பூர்ண அன்புடையவளா அல்லது வேறுயாரையாவது அவள் காதலிக்கிறாளாவென்று தீர விசாரித்து மணந்துகொள். வீணாய் ஸ்திரீகளின் வதைக்கு ஆளாகாதே" என்று கூறி, அவ்வறையை விட்டுப் புறப்படும் சமயத்தில், துர்கப் பிரஸாத் அவளைத் [illegible]த்து, சற்றுப் பொறுமையுடனிருந்தால் எல்லாம் கூறுகிறேன். உனக்கே என்மேல் தயை பிறக்கும். இல்லையேல் உன்னைத் தொடர்ந்து நானும் இறக்கவேண்டியதுதான்" என்றான்.

விமலா மிகவும் வெறுப்புடன் உம்முடைய கதையை கூறுமென்றாள்.

துர்க்கப்பிரஸாத் சொன்னதாவது:—"விமல! உன் தந்தை எனக்கு ஐம்பதாயிரம் ரூபாய் கடன் கொடுக்க வேண்டும். அதை அவரால் இப்போது கொடுக்க முடியாததினால், தன் ஒரே மகளை எனக்குக் கலியாணம் செய்து கொடுப்பதாயும், பிறகு தன்னால் முடிந்தால் பணம் கொடுப்பதாயும், இல்லாவிட்டால் எல்லாவற்றிற்கும் பதிலாய் உன்னையே வைத்துக்கொள்ள 'வேண்டுமென்றும் எனக்கு எழுதினார். நான் பம்பாயில் ஏராளமான திரவியத்தை வைத்து வியாபாரம் செய்பவன். உன் தகப்பனார் கொடுக்க வேண்டிய ஐம்பதாயிரம் ரூபாய் ஒரு பொருட்டல்ல. நீயே எனக்கு முக்கியமாய்த் தோன்றியபடியால், இவ்வேற்பாட்டிற்கிணங்கி உன்னையடைந்தேன். இதில் என் மேல் தவறு உண்டா? கூறு" என்றான்.

விமலா சற்று யோசித்து, ஏளனமாய் நகைத்து, "தந்தையின் கடனுக்காகப் புத்திரி கண்டவரை மணப்பது நன்றாயிருக்கிறது உலக நியாயம்! சரி நல்லது! என் தந்தையின் இச்சைப்படிக் கடனுக்காக பெண்ணை உம்மிடம் கொடுத்தார். எனக்கு உம்மிடம் அன்பு இல்லை; நான் தற்கொலை செய்துகொண்டு இறக்கப் போகிறேன் இவ்வளவுதான் நம் விதி உமக்குப் பணமும் போய், பெண்ணும் போய், பிணம் ஒன்றுதான் கிடைக்

As A Gift from the Gods
Peachlike Complexions

சந்தன வாசனையைக் கலப்பதில் நாம் உபயோகிக்கும் முக்கியமான எண்ணெய்களிலெல்லாம் ஆரோக்கியமூட்டும் சாக்குகள் நிறைந்துள்ளன. மைசூர் சந்தன ஸோப்பு குழந்தைகளின் துல்லிய சருமத்திற்கு கந்தவை கல்வியிற் சிறந்த பல்லாயிரக் கணக்கான இந்தியத் தாய்மார்கள் இதை அனுபவத்தில் அறிந்திருக்கிறார்கள்.

எங்கும் கிடைக்கும்

கவர்ன்மெண்ட் ஸோப்பு தொழிற்சாலை,

பெங்களூர்.

டோங்ரே

அவர்களின்

பாலாம்ருதம்

பலஹீனமான குழந்தைகளுக்கு பருமனையும், வலுவையும், ஆரோக்யத்தையும் தரும்.

எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:—

K. T. DONGRE & CO, Bombay, 4.

மதராஸ் ஏஜண்டுகள்:—

ஏ. பி. பரேக்,

268, சைனாபஜார் ரோட், மதராஸ்.

கையிலிருந்த சிறு காகிதத்தைப் பிரித்து, சட்டென்று வாயில் போட்டுக் கொண்டு விழுங்கி, மறு நிமி

மறுநாள் காலையில் அவள் கண்களை விழித்துப் பார்க்கையில் தன் அன்பன் கமலாகாந்தன் தன் பக்கத்தில்

நமது புதிய தொடர் கதை.

ஜம்புலிங்கத்தின் திருவிளையாடல்கள்

(ஸ்ரீமான் வ. தே. வரதன் எழுதியது)

I

மணி சுமார் ஏழரையிருக்கும்! சென்னை அரண்மனைக்காரன் தெருவிலிருக்கும் கோகலே ஹாலாவில், ஸ்ரீ அரியக்குடி ராமானுஜய்யங்காரின் சங்கீதக் கச்சேரி முடிந்து, கச்சேரிக்கு வந்திருந்தவர்கள் தத்தம் வண்டிகளில் எறி, வீடு செல்ல ஆயத்தப்பட்டுக்கொண்டிருந்தனர்.

சுமார் பன்னிரண்டு வயது மதிக்கத் தகுந்த ஓர் பையன் அப்பொழுது புறப்படத் தயாராயிருந்த ஒருமோட்டார்வண்டியை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தான். ஆனால், அதற்குமேல் செல்ல முடியவில்லை. தள்ளாடிக்கொண்டே திடீரென்று தரையிற் சாய்ந்தான். அம்மோட்டாரைச் செலுத்த ஆயத்தப்பட்டுக்கொண்டிருந்த கனவான், கீழே விழுந்த பையனைக் கண்டதும், சட்டென்று வண்டியை

இதற்குள் ஜனங்கள் பையனைச் சூழ்ந்துகொண்டனர். அவர் கூட்டத்தை விலக்கி, பையனுக்குச் சற்றுக் காற்றை விட்டு நிற்கும்படி எல்லோருக்கும் சொல்லிக்கொண்டே, பையனைக் கவனித்தார். பையனுடைய அரையில் நல்ல விலையுயர்ந்த வஸ்திரமே காணப்பட்டாலும், அது மிகவும் அழுக்குப்பட்டிருந்தது. பையனின் தேக அமைப்பு, முகம், முதலியவற்றை நோக்க, நல்ல ஆந்தஸ்துள்ள குடும்பத்தைச் சேர்ந்தவன்போலவே காணப்பட்டான். திரேகம், மிகவும் மெலிவடைந்திருப்பதையும், மூர்ச்சையடைந்திருப்பதையும் காண, ஆகாரமில்லாததாலேயே அந்த நிலைமையையடைந்திருக்க வேண்டுமென்று ஊகித்தார். பையனை அப்படியேயெடுத்து, தன் வண்டியில் வைத்துக் கோமளவிலாசத்

அங்கு காலியாயிருந்த அறைக்குப் பையனையெடுத்துச் சென்று, அந்த அறைக்கு ஏதாவது கொஞ்சம் பலகாரமும் காபியும் அனுப்பி வைக்கும்படிக்கு மானேஜரிடம் சொல்லிவிட்டு, தான் அவ்வறைக்குச் சென்றார்.

பையனைக் கட்டிலில் படுக்க வைத்தார். தன் கைக்குட்டையை நனைத்துப் பையன் முகத்தை மெதுவாய்த் துடைத்து மெல்ல விசிறினார். சற்று நேரத்தில் பையன் களை தெளிந்து மெல்லக் கண்களைத் திறந்தான். இதற்குள் கீழேயிருந்து காபியும் பலகாரமும் வந்தது. ஒரு டம்ளரில் கொஞ்சமாய் காபியை ஊற்றி, பையனைக் குடிக்கும்படிச் சொன்னார். பையன் முதலில் இவரைச் சற்று சந்தேகமான பார்வையுடன் பார்த்தான். அவர் மிக்க சாந்தமான குரலில், அன்புடன் சாப்பிடும்படிச் சொன்னதால் கலவரம் நீங்கி, காபியைக்குடித்தான். பின்னர், மெதுவாய் அவனை உட்காரச் செய்தார். பலகாரத்தைக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார். அவன் பலகாரத்தைச் சாப்பிட்டு மீதியாயிருந்த காபியையும் குடித்தான்.

அவர்:—(பையனைப் பார்த்து) பையா, உன் பெயர் என்னப்பா?

பையன்:— என் பேர் தவமணி, நீங்க— ஆரு?

அவர்:—தவமணியா! பேஷ்! நல்ல பெயர்; நீயும் நல்ல பையனாகத்தானிருக்க வேண்டும்.— சரி; நீ மிகவும் அலுத்திருக்கிறாய். அப்படியே படுத்துக்கொள். பிறகு பேசிக்கொள்ளலாம்.

பையனும் படுத்துக்கொண்டான். அன்றெல்லாம் ஆகாரமில்லாமல், அப்பொழுதே கொஞ்சம் ஆகாரம் வயிற்றில் விழுந்ததாகையால் பையன் கண்ணயர்ந்தான். அக்கனவான், கீழே சென்று மானேஜரைக் கண்டு அறைக்காகவும், பலகாரத்திற்காகவும் சேர நாளையும் கூடச்சேர்த்து முன்னதாகவே கொடுத்தார். பையனுடைய அறையில் ஒருவனைக் கூடத் துணையாகப் படுத்துக்கொள்ள ஏற்பாடு செய்துவிட்டுத் தான் மறுநாட் காலையில் வருவதாகச்சொல்லிப் போய்விட்டார்.

மறுநாட் காலை சுமார் எட்டு மணியிருக்கும். கோமளவிலாஸ் ஹோட்டலின் மேன்மாடியில், ஓர் அறையில் தவமணி உட்கார்ந்துகொண்டிருந்தான். கையில் ஒரு சிறிய பொட்டலத்தோடு ஒரு கனவான் அவனறையில் நுழைந்தார். அவரைக் கண்டதும், இன்னாரென்று அடையாளம் கண்டுகொள்ளக் கூடாமல், மிரள மிரள விழித்துக்கொண்டே எழுந்து நின்றான். வந்தவர் மிகவும் இனிமையான குரலில், "தவமணி! காப்பி சாப்பிட்டாயா? நேற்று வந்திருந்தேனல்லவா? உட்கார் அப்பா. இப்படிவா" என்று பையனை அன்போடும் ஆதரவோடும் தன்னருகில் அழைத்தார். அவன் சற்று சங்கோசப்பட்டு எட்டி நிற்பதைக் கண்டு,

"நீ எங்கிருப்பது? உங்கள் வீடெங்கேயப்பா?" என்று கேட்டார்

தவ:—என்னை மறுபடி கொண்டுபோய் விட்டுவிடவா? நான் மாட்டேன். அதையேன் கேட்கிறீர்கள்?

அவர்:— அதற்கில்லை. நீ வீட்டிற்குப் போகப் பிரியமில்லையானால் போகவேண்டாம். நான் அதற்காகக் கேட்கவில்லை பயப்படாதே. உனக்குப் பிரியமானவரை இங்கேயேயிருக்கலாம்.

தவ:—பணம் இல்லையே! பணம் இல்லாமல் இங்கிருக்க முடியுமா?

அவர்:—நான் அவர்களிடம் சொல்லுகிறேன். காலையில் உன்னைக்காபிக்குப்பணம் கேட்டார்களா? இல்லையே, அது போல்தான். உன்னைப் பணமென்று கேட்கவே மாட்டார்கள். அது கிடக்கட்டும். உன்

தவ:—எங்கப்பா சக்கிரபாணி முதலியார்.

அவர்:—எங்கிருக்கிறாரப்பா அவர்?

தவ:—புரசவாக்கத்திலே இருந்தோம்.

அவர்:—இப்பொழுது எங்கிருக்கிறார்?

இதைக் கேட்கும்போதே, பையனுடைய கண்கள் கலங்கி, கண்ணீர் முத்து முத்தாய் உதிரவாரம்பித்தது.

"பையா! அழாதே. உன்னை அங்கு திரும்பக்கொண்டுபோய் விட்டுவிடமாட்டேன். பயப்படாதே. அழாதேயப்பா!" என்று தேற்றினார்.

தவமணி:—இல்லை.—இல்—உம்—உம்—எங்கப்பா—செத்துட்டாரே—உம்—

என்று தேம்பித்தேம்பியழவாரம்பித்தான். அதைப்பார்க்க அவருக்கு மிக்க பரிதாபமாயிருந்தது. அவனுடைய தகப்பனாரைப்பற்றிய நினைவை மூட்டி, பையனுக்கு அழுகையை உண்டாக்கிவிட்டதற்கு வருந்தி, அவன் அழுகையை மாற்ற, "தவமணி! அழாதேயப்பா; இந்தா!" என்று தான் கொண்டு வந்த சிறிய மூட்டையைப் பிரித்து இந்தா! இந்தத் துணியைக் கட்டிக்கொள். பார்த்தாயா; எவ்வளவுவெளுப்பாயிருக்கிறது! இந்தா! இந்தச் சட்டையைப்போட்டுக்கொள், சரியாயிருக்கிறதா பார்ப்போம்" என்று பேச்சுகொடுத்தார். அன்றையதினம் அதற்கு மேல் அவனைப்பற்றிய விவரங்களை அறிந்துகொள்ள எதையாவது கேட்டால், மறுபடியும் அழத் தொடங்கிவிடுவானோ என்றெண்ணி, அவனை உற்சாகப்படுத்த அன்று சாயந்திரம் அவனைப் படக்காட்சிக்கு அழைத்துப் போகப் போவதாகவும், குளித்துச் சாப்பிட்டுவிட்டுத் தயாராயிருக்கும்படிக்கும் சொல்லிச் சென்றார்.

இப்படியாகத் தவமணியுடன் சில நாட்கள் பட்சமாய்ப் பழகி, அக்கனவான்கீழ்க்கண்ட விவரங்களை அவனிடம் கேட்டும், அக்கம்பக்கத்தில் விசாரித்தும் தெரிந்துகொண்டார்:-

புரசைவாக்கம் ஹைரோட்டில் இருக்கும் 'இந்திர நிலய'த்தில் சக்கிரபாணி முதலியார் தமது குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார். முதலியாரின் முன்னோர்கள் பரம்பரையாகவே திரண்ட செல்வவந்தர்களாயிருந்திருந்தாலும், முதலியாரின் கைக்குச் சொத்து கிடைப்பதற்குள், முதலியாரின் தந்தையாரால் பெரும்பாகம் அழிக்கப்பட்டு, 'இந்திர நிலயமும்,' வில்லிவாக்கத்திற்கருகாமையில் சுமார் ஏழெட்டு ஏகரா விஸ்தீரணமுள்ளநஞ்சை நிலமும் மட்டுமே மிஞ்சியிருந்தது. நல்ல வேளையாய் இவரது பெற்றோர்கள், இவரைச் செலவைக் கவனியாமல் படிக்க வைத்திருந்தார்களாகையால், ஹைக்கோர்ட்டில் வேலைக்கமர்ந்து, உத்தியோகத்தில் படிப்படியாய் உயர்ந்து, இறக்கும் தருவாயில் உதவி ரெஜிஸ்டிராராக வேலை பார்த்துக் கொண்டிருந்தார். இவருடைய சிநேகிதர்களின் கட்டாயத்தின்பேரில், இவர் ஸ்ரீரங்கம் ரெங்கநாதஸ்வாமி தர்ம கைங்கர்ய லாட்டரியில் ஒரு அதிர்ஷ்டச் சீட்டு வாங்கியிருந்தார். அதில் இவருக்கு முதல் பிரைஸ் விழுந்து ரூபாய் ஐம்பதினாயிரம் கைக்கு வந்தது. முதலியார் பணத்தின் அருமையை நன்கு அறிந்துகொண்டிருந்தாராகையால், தனக்கு அதிர்ஷ்டவசமாய் கிடைத்த பணத்தை வீண்விரயஞ் செய்யாமல், நல்ல பெறுமானமுள்ள சொத்துக்களின்பேரில் கடன் கொடுத்து முதலை விருத்தி செய்து வந்தார்.

முதலியார் மனைவியின் பெயர் கமலம்மாள். கல்யாணம் நடந்த நாள் முதல் ஒரு சிறிதும் தன் கணவன் மனம் கோணாதபடி நடந்துவந்தாள். ஒரு ஆண் குழந்தையைப் பெற்றுவிட்டு உயிர் துறந்தாள். முதலியாருக்குத் தம் மனைவியின் மீது அளவு கடந்த பிரியமாதலால், எவ்வளவோ பேர்கள் மறுமுறை விவாகஞ் செய்து கொள்ளும்படிச் சொல்லியும் அதை ஏற்றுக் கொள்ளாது, தன்னுடைய ஒரே குழந்தை தவமணியைப் பார்த்து ஒருவாறு தேறிக் காலம் கழித்து வந்தார்.

குழந்தைக்கு ஒன்பது வயது பூர்த்தியாயிற்று. ஒரு நாள், வழக்கம்போல வெளியிற் சென்றுவந்த முதலியார் திடீரென்று மார்பு வலிக்கிறதென்று படுத்தார். எத்தனையோ டாக்டர்கள் வந்து சிகிச்சை செய்தும் பயன்படவில்லை. முதலியாருக்கு வேறு சுற்றத்தார் ஒருவருமில்லை. தான் அதுவரை மிக்க அன்னியோன்னியமாய்ப் பழகிவந்த வேலாயுத முதலியாரை அழைத்து, தன் குழந்தை தவமணியையும், தன் சொத்தையும் அவரிடம் ஒப்புவித்தார். பொழுதுவிடியுமுன் அவர் உயிர் நீத்தார்.

சக்கிரபாணி முதலியாரின் பிரேதச் சடங்குகளைச் செய்த மறுநாளே குழந்தை தவமணியை அழைத்துக்கொண்டு வண்ணாரப்பேட்டையிலிருந்த தன் பங்களாவிற்குச் சென்றுவிட்டார் வேலாயுதமுதலியார்.

சக்கிரபாணி முதலியாரின் ஆஸ்தியில் பங்களாவையும் நிலத்தையுந் தவிர, பெரும்பாகம் ரொக்கமாகவேயிருந்ததாலும், தவமணியைப் பராமரிக்கக்கூடியவர்கள் தன்னைத் தவிர வேறு ஒருவருமில்லாததாலும், வேலாயுத முதலியாரின் மனதில், நாளடைவில் கெட்ட எண்ணம் புகத் தலைப்பட்டது. முதலில் சிறிது சிறிதாகத் தவமணியின்பணத்தை

அவரை இன்னாரென்று அடையாளம் கண்டுகொள்ளக் கூடாமல் மிரள மிரள விழித்தான். வந்தவர், "தவமணி! காப்பி சாப்பிட்டாயா? நேற்று வந்திருந்தேனல்லவா?........." என்று பையனை அன்போடும் ஆதரவோடும் அழைத்தார்.

தன்னுடைய அவசரமான சில செலவுகளுக்கு உபயோகித்துக் கொள்ளவாரம்பித்து, நாளடைவில் கையாடவும் ஆரம்பித்துவிட்டார். சகல சொத்தையும் தான் உபயோகப் படுத்திக்கொள்ளத் தடையாயிருந்த தவமணியின்மீது, அவர் தான் சக்கிரபாணி முதலியாருக்குச் செய்துகொடுத்த வாக்குத் தத்தத்தையும் மறந்து, அசூயை கொள்ளலானார். தவமணியை மோசஞ்செய்ய எண்ணினாலும் அவனை அடியோடு ஒழித்துவிட மனம் வரவில்லை. ஆகவே, அவனை மிக்க கொடூரமாக நடத்தி, தானாகவே வீட்டைவிட்டு ஓடும்படிச் செய்துவிட்டார். இந்த நிலைமையில் தான், தவமணியை அக்கனவான் கண்டு, கோமளவிலாசத்திற்கு அழைத்துப்போனது.

சென்னையில், போலீஸ் டெபுடி கமிஷனர் கிருஷ்ணஸ்வாமி நாயுடு என்றால், போதும். வெளியில் இருப்பவர்கள் எப்படியாவது இருக்கட்டும், போலீஸ் இலாகாவிலேயே அவருடைய பெயரைக் கேட்ட மாத்திரத்தில் ஒருவித அச்சமும், விசேஷ மதிப்பும், எப்படிப்பட்டவருக்கும் ஏற்படும். இவர் சற்றேறக்குறைய ஆறடி உயரமிருப்பார். நல்ல தேகக் கட்டு வாய்ந்தவர். மகா புத்தி சூக்ஷ்மமுள்ளவர். குற்றவாளிகளைக் கூர்ந்து கவனிக்கும் போதே, அவர்கள் இவரது பார்வையைக் கண்டவுடன், உண்மையைக் கடகடவென்று ஒப்புவித்துவிடும்படிக்கான தோற்றம் அமையப் பெற்றவர்.

இவருக்கு எதிரில், சற்று எட்ட, இன்ஸ்பெக்டர் சோக்கலிங்கம் பிள்ளை மிக்க பயபக்தி வினயத்துடன் நின்றுகொண்டிருந்தார். டெபுடி கமிஷனர் தன் எதிரில் இருந்த கடிதக் கட்டைப் பிரித்து, பக்கம்பக்கமாக இப்படியும் அப்படியுமாகப் புரட்டிப் பார்த்துக்கொண்

(32-ம் பக்கம் பார்க்க)

மனோரஞ்சனி

இது ஒரு மாதாந்த நாவல் சஞ்சிகை. இராஜலக்ஷ்மி என்னும் நாவல் தொடர்ச்சியாய் வெளிவந்துகொண்டிருக்கிறது. இதன் வருட சந்தா ரூ. 1-8. மாதிரிக்காபி இனாம்!

எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்.]

ஸி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார் பி.ஏ. எழுதியது

I

பல்லவி

தெலிய லேரு, ராம! பக்தி மார்க்கமுனு, (தெ)

அனுபல்லவி

இல நந்தட திருகுத்ஸு கலுவரிஞ்சேரேகானி (தெ)

சரணம்

வேக லேசி, நீடமுனிகி, பூதிபூஸி, வ்ரேள்ள னெஞ்சி,
வெலிகி, ச்லாக னியுலே, பாகபைக மார்ஜன லோலுலை
ரேகானி, த்யாகராஜநுத! (தெ)

II

இலனு அந்தட திருகுத்ஸுனு —இந்தப் பூமி முழுவதிலும் திரிந்துகொண்டு
கலுவரிஞ்சேரேகானி —வீண்வார்த்தைகளைப் பேசுகிறார்களேயல்லாமல்
வேகலேசி —விடியற்காலையில் எழுந்து,
நீடமுனிகி —நீரில் ஸ்னானஞ்செய்து,
பூதிபூஸி —விபூதியை அணிந்து,
வ்ரேள்ளனு எஞ்சி —ஜபஞ்செய்யும்பொழுது, விரல்களில் எண்ணிக்கைகளைக் கணக்கு வைத்துக்கொண்டு,
பாகா பைகமு ஆர்ஜ்ஜனலோலுலு ஐரேகானி —நன்றாகத் தனத்தை ஸம்பாதிப்பதிலேயே நாடியிருக்கிறார்களேயல்லாமல்,
ராம! த்யாகராஜநுத பக்திமார்க்கமுலு தெலியலேரு —பக்திமார்க்கத்தை அறிய முடியவில்லை.

III

கபடபக்தியைக் கண்டிக்கும் பல கீர்த்தனங்களில் இது ஒன்று. நடசி நடசி, கலிநருலகு, நிஜமுக, கனுகொனு, எந்நாள்ளு திரிகேதி, எந்த முத்தோ, மரியாத காதுரா முதலிய கீர்த்தனங்களில்; பார்க்க, கபட பக்தர்களென்ற பதத்தை இங்கே வருவித்துக்கொள்ளவும் உண்மையான பக்திமார்க்கம், எந்தரோ மஹானு பாவுலு, கொலுவமரேகதா, அதடே தன்யுடுரா, முதலிய கீர்த்தனங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது; கபட மார்க்கத்தை, துடுகுகலவென்ற கீர்த்தனத்தில் விரிவாகக் காணலாம்.

தெலியலேரு:—அறிய வேண்டுமென்று விரும்பினாலும் அறியமுடியாது.

பக்திமார்க்கமுனு:—நாரத பக்தி ஸூத்ரம், சாண்டில்ய பக்தி ஸூத்ரம், ஸ்ரீமத் பாகவத புராணம், ஹரிபக்திஸுதோதயம் முதலிய நூல்கள் இதை வர்ணிக்கும்.

திரிகுத்ஸுனு:—இதற்கு ஸுமார் நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்பு நமது தேசத்தில் புண்யக்ஷேத்ர யாத்ரை செய்வதில் ஊக்கம் அதிகம்; ஸௌகர்யக் குறைவு அதிகம். இப்பொழுதோ ஸௌகர்யம் அதிகம். ஸ்வாமிகளுடைய காலத்தில் ஸேதுவிலிருந்து ஹரித்வாரத்திற்கும், காசிக்கும் ஓயாமல் யாத்ரை நடந்துகொண்டேயிருக்கும். அப்படிப்பட்ட ப்ரயாணிகளில் பெரும்பாலும் கபட பக்தர்களே, பெயருக்கும், ப்ரதிஷ்டைக்கும், தனத்திற்குமே, யாதரை செய்கிறவர்கள். ஸ்வாமிகள் கங்கா யாத்ரையைக் குறித்துச் செய்த த்யானமே வாமைன; நடசி நடசி, கோடினதுலு முதலிய கீர்த்தனங்களைப் பார்க்க.

கலுவரிஞ் சேரே:—நடசி நடசியென்ற கீர்த்தனத்தில் பொகடோரு, என்ற பதத்தின் உரையைப் பார்க்க.

வெலிகி:—பக்தர்களுடைய உண்மையான யோக்யதையில்லாமல், "ஸத்த பாகவத வேஸுலரி" பாகவதர்களின் வேஷத்தைத் தரித்துத் துளசிஹாரம், ருத்ராக்ஷமாலை, திருநாமம், விபூதி, கோபிசந்தனம், முதலிய வெளிவேஷத்தால் பாமரஜனங்களை மயக்கி, மோசஞ்செய்து; பணத்தைப் பறித்து, வசப்படுத்தும் அயோக்யர்களைக் குறித்துச் சொல்லப்பட்ட இந்தக் கீர்த்தனம் தற்காலத்தில் அடிமுதல் நுனிவரையில் எல்லா வகுப்பினருக்கும் பொருந்தும். கனுகொனு ஸௌக்யமுவென்ற கீர்த்தனத்தின் சரணம் இங்கே கவனிக்கத்தக்கவை.

IV

தேனுக ஆதி

(9-வது மேளராகம்—ஸம்பூர்ணம்.)

பல்லவி

தெ வி ய லே ரு | ரா ம பக் | தி மார்க் க
; ; ; ப த பம கா ; நீ | ஸா, ஸா, நீ | ஸா ரீகா மா
மு னு
பா ; பா ;

அனுபல்லவி

இ ல நந் த | ।. தி | ரு குத்
; ; ; தா தா நீதா நீ | ஸ்ா ; ; ஸ்ா | ரீ க்ாரீரீ
ஸு னு க லு வ ரிஞ் | சே ரே | கா
ஸ்ா, ஸ்ா, ஸ்ரி ஸ்ரி தா ; நீ | ஸ்ா ; ; தநி | ஸ்நி தாபாமா
னி (தெலி)
கா, மா,

சரணம்

வே க லே சி | நீ ட மு னி | கி பூ தி
; ; ; பா பா பா ; மா | தப தா ; ப த | பம கா ; ரீ
பூ ஸி வ்ரேள் ள னெஞ் சி | வெ லி கி ச்லா | க னீ யு
ஸா, ஸா, பா மா கா ; ரீ | ஸ நீ ஸ்ா, ஸா | ரீ . கா ; மா
லை
பா ; ;

(இதற்குமேல் அனுபல்லவி போன்றது.)

Broadcast

வெகு நேரம் பாடும்

வெகு அருமையாகப் பாடும்

பொது ஜனங்களால் ப்ரத்யேகமாய் கொண்டாடி விரும்பப்படுகிற
நவீன ஸங்கீதக் கச்சேரியை யொத்த
ரிகார்டுகள்

செம்பை
வைத்தியநாத பாகவதர்

R. T. 4081

சிவசிவ எனரா தா —காமவர்தனி
நின்னுசெப்பக —மாந்தாரி

G. T. 4058—G. T. 4057
R. T. 4003 & R. T. 4002

சித்தூர்
சுப்பிரமணிய பிள்ளை

R. 4059

ராமா நீ பைதனக்கு —கேதாரம்
ம்துரா நகரிலோ —ஆ பைரவி

R . 4060—R. 4006—&—R. 4004

காலஞ் சென்ற
மிருதங்க வித்வான்
தக்ஷிணாமூர்த்தி பிள்ளை
அவர்களின் கஞ்சிரா வாத்திய இனிமையை கீழ்கண்ட ரிகார்டுகளில் கேளுங்கள்.

R T 4081 | R T 4003
G T 4058 | R T 4002
G T 4057 | R 4004
G T 2067

மதுரை மிஸ், சுப்புலக்ஷ்மி.

G. R. 2383

சந்திரனே ஸ்வதந்திரனே —ஹிந்து பைரவி
தாயே ஏழைபால் —பைரவி

B.T. 2337--B.G. 2351--B G. 2352
B. G. 2068 & B. T. 2047

ஸ்வாமி பாகவதர்

B. T. 2067

பாலகோபால —பைரவி
பாகம் 1 & 2

தி மியூஸிகல் பிராடக்ட்ஸ் லிமிடெட்,
167, மவுண்ட் ரோட், மதராஸ்.

ஏஜண்ட் இல்லாத இடங்களுக்கு ஏஜன்டுகள் தேவை. ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கு மேற் குறிப்பிட்ட விலாசத்துக்கு எழுதவும்.

F. M. S. & S. S-க்கு சோல் டிஸ்டிரிபியூட்டர்கள்:—
தி இண்டியன் பிலிம் ஏஜன்சி, பிணங், சிங்கப்பூர்.

இங்கு ரிகார்டுகள் கிடைக்குமிடம்:—
ஜம்ஸ் ஸ்டோர்ஸ், 167, மவுண்ட்ரோட், மதராஸ்.

புதுமாதிரி நிட்டிங் லேஸ்

(ஸ்ரீமதி ஆ. ராஜசூடாமணி அம்மாள் எழுதியது.)

[காபிரைட்]

முதல் வரிசை:—இரண்டு முறை தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்; நிட் 4, இரண்டு முறை ௸தைக்கவும். ஊசிமேல் நூல் நிட் 1, இரண்டு முறை தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

2-ம் வரிசை:—இரண்டு முறை தைக்கவும், ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 8, 2 முறை தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

3-ம் வரிசை, 4-ம் வரிசை:—2 முறை தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம். நிட் 8, இரண்டு முறை தைக்கவும். ஊசிபேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

5-ம் வரிசை:— 2 முறை தைக்கவும் ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 4, 4 முறை தைக்கவும். ஊசிமேல் நூல் நிட் 1, 2 முறை தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

6-ம் வரிசை:— 2 முறை தைக்கவும், ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 12, 2 முறை தைக்கவும்.

7-ம் வரிசை, 8-ம் வரிசை:—2 முறை தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 12, 2 முறை தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

9-ம் வரிசை:— 2 முறை தைக்கவும், ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 5, 5 முறை தைக்கவும். ஊசிமேல் நூல் நிட் 1, ஊசிமேல் நூல் நிட் 2, 2 முறை தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.



10, 11, 12, 13, 14, 15, 16-ம் வரிசை:—இரண்டு முறை தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 18, 2 முறை தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

17-ம் வரிசை:—இரண்டு முறை தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 4, 3 தையலைச் சேர்த்து 1 பரல் உள்ளடக்கம். 4 முறை தைக்கவும், நிட் 2, 2 முறை தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

18-ம் வரிசை:—2 முறை தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம். 3 தையலைச் சேர்த்து 2 முறை பரல் உள்ளடக்கம், நிட் 4, 2 முறை மாறி மாறித் தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

19-ம் வரிசை:—2 முறை தைக்கவும். ஊசி மேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 6, 2 முறை தைக்கவும். ஊசி மேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

20-ம் வரிசை:—2 முறை தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம், நிட் 6, 2 முறை தைக்கவும். ஊசிமேல் நூல் 1 பரல் உள்ளடக்கம்.

முதல் வரிசையிலிருந்து துவங்கி மாறி மாறித் தைக்கவும்.

முக்கிய அறிவிப்பு.

அமிர்தாஞ்சன் டிப்போவின் படை மெழுகு

இதுவரையில்
ராஜா-ராணி, வியாபாரக் குறியுடன்விளங்கிய எமது வில்லியம் அண்டு கம்பெனியின் படை மெழுகு இப்பொழுது கீழ்க்கண்ட வகையில் மாற்றப்பட்டிருக்கிறது.

அமிர்தாஞ்சன் டிப்போவின் மூவர்ண 'உதய சூர்யன்'

மேற்படி தகவலையறியும்படி முக்கியமாக எமது வாடிக்கைக்காரர்களை நாம் கேட்டுக்கொள்ளுகிறோம். வியாபாரக் குறியில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதே தவிர எமது மருந்தின் தயாரிப்பில் எவ்வகை மாறுதலுமில்லையென்று உறுதி கூறுகிறோம்.

அமிர்தாஞ்சன் டிப்போ பம்பாய், மதராஸ், கல்கத்தா.

ஸ்டாக் செய்பவர்கள்:—எ. பி. பரேக், சைனா பஜார் ரோட், மதராஸ்.
ஷியாம் & கம்பெனி, பந்தர் தெரு, மதராஸ்.

வெய்யிற்காலம் வந்துவிட்டது!

பெண்மணிகள் இந்த வெய்யிற்காலத்தில்
அடுப்பண்டை இருந்து நெருப்பினால்
ஏன் வருந்த வேண்டும்?

ருக்மணி குக்கர்

ஒன்றை வாங்கிப் புது முறையைக் கைக் கொண்டால்
நெருப்பினால் வாடவேண்டியதில்லை.

குறைந்த விலை! நிறைந்த சுகம்!

1 முதல் 16 பேர்களுக்குத் தகுந்த அளவுகள்:
ரூபா 9, 12, 16, 21, 26, 32, 38.

ருக்மணி குக்கர் கம்பெனி,
ராயபுரம், (12) சென்னை.

எமது ஏஜெண்டுகள்:
நாகைப்பட்டினம்—நாகை நாஷனல் எம்போரியம் லிமிட்டெட்.
திருச்சினாப்பள்ளி:—S. முத்துக்குமாரசாமிப் பிள்ளை ஜெனரல் மோட்டார் ஸ்டோர்ஸ்.
பொன்மலை:—M. R. சாமி & பிரதர்ஸ், ஜெனரல் மர்ச்சண்ட்-
புதுக்கோட்டை:—சம்பந்தம் & கோ, லிமிடெட், கீழராஜவீதி.
காரைக்குடி:—கே. ஜி. & கோ.

ஆகார ருசிக்கும் சுவைக்கும்
சத்துக்கும் முக்கியமாய் வேண்டியது

நெய்

TRADE MARK P.K.V பிராண்டு

உத்தரவாதமான அசல் சரக்கு
சிறிய, பெரிய, பல அளவு
டின்களிற்கிடைக்கும்
P.K. வரதாச்சாரி கம்பெனி
ஜம்மலமடுகு கடப்பை ஜில்லா

ஷாஜஹானின் மயிலாஸனம்

(ஓர்த்தி ஒ. ப. தேசிகன்)

அரசாட்சியின் முக்கிய சின்னம்

தொன்றுதொட்டு இந்நாட்டையாட்சிபுரிந்து வந்திருக்கும் ஹிந்து முஸ்லீம் மன்னர்களுக்கு சிம்மாதனமே அரசாட்சியின் முக்கிய சின்னமாக விளங்கி வருகிறது. உண்மையில் மணிமுடி, செங்கோல், வெண்கொற்றம், கொடி, கவரி, முரசு முதலியவைகள் யாவும் கொற்றத்தின் சிறப்பை யுணர்த்தும் அறிகுறிகளாகக் கருதப்பட்டு வந்தபோதிலும், அவைகள் சிம்மாதனத்தைப் போன்று அவ்வளவு பிரதானமானவைகளன்று. "சிம்மாதனாதிபதிகள்" என்று தம்மையழைத்துக்கொள்வதிலேயே ஹிந்து அரசர்கள் ஓர் தனிப்பெருமை பாராட்டி வந்தனர். மேனாடுகளில் சிம்மாதனத்தைவிட மணி முடியையே அரசுரிமையின் முதன்மையான சின்னமாகக் கருதும் வழக்கம் பரவியுள்ளது. ஆனால் நமது தேசத்திலோ அரசனுக்கு எவ்வளவு உயர்வு ஏற்பட்டுள்ளதோ அத்துணை உயர்வு அவன் வீற்றிருக்கும் ஆஸனத்திற்கும் ஏற்பட்டுள்ளது. பட்டத்திற்கு வரும் அரசன் சிம்மாதன மேறிய பின்னரே மற்ற சடங்குகளைச் செய்வது மரபு.

ஹிந்துக்களின் ஆட்சிக்குப் பின் இத்தேசத்தை செங்கோல் நடாத்தும் பாக்கியம் பெற்ற முஸ்லீம் அரசர்களுக்கும் அஃதொன்றே அரசுரிமைப் பதவியின் ஏனைய உறுப்புகளைக் காட்டிலும் முதன்மை வாய்ந்து திகழ்ந்ததென்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆதலின் இச்சிம்மாதனங்களை நிர்மாணிக்கும் விஷயமாகவும், அவைகளை அழகுபெற அலங்கரிக்கும் விஷயமாகவும் மன்னாதி மன்னர்களாக விளங்கிய அவர்கள் எத்துணை சிரத்தையெடுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும் அதன் நிமித்தம் எவ்வளவு பெரும் பொருள் செலவிட்டிருக்க வேண்டுமென்பதையும் நாம் கூறத் தேவையில்லை. பாரத நாட்டின் பண்டைச் சிம்மாதனங்களில் மைசூர் அரச சிம்மாதனமும், ஷாஜஹானின் மயிலாஸனமும் உலகப்பிரசித்தி வாய்ந்திருக்கின்றன.

பம்பாயிலுள்ள பல தொழிற் சங்கங்களின் ஆதரவில் லால்பாக் மைதானத்தில் மிஸஸ் மணிபென் மூல்ஜி தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் ஸ்ரீமான் ஆர். எஸ். நிம்காருக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

இப்பூமண்டலத்தின் ஒப்புவமையில்லாப் பேரதிசயங்களில் ஒன்றாக ஒளிரும் தாஜ்மஹாலைப்பற்றிக் கேள்வியுறாதார் யார்? யமுனா நதிக்கரையில் ஆக்ரா பட்டணத்தில் அத்தகைய உலகப் பிரசித்தி பெற்ற "தாஜ்மஹாலை"க்கட்டி முடித்த ஷாஜஹான் சக்ரவர்த்தியால் அவருடைய நேர்மேற்பார்வையில் மயிலாஸனம் தயாரிக்கப்பட்டதென்பதொன்றே அதன் பெருமையை விளக்கப் போதுமானதாகும். அன்றியும் ஷாஜஹான் சக்ரவர்த்தியின் நாட்களில் முகலாய ராஜ்யம் அதனுடைய உன்னதமான தசையையெய்தியிருந்தது. அதனுடைய இறைமாட்சியும் ஆடம்பரச் சிறப்புகளும் கடல்களுக்கப்பாலுள்ள நாடுகளிலும் பரவியிருந்தது. அவர்களுடைய அரண்மனைகளில் அகண்டமான இப்பூவுலகின் ஐசுவரிய ராசிகள் அனைத்தும் குவிந்து கிடந்தன. ஆனந்த சோபிதமாய்த் திகழும் அம்மாளிகைகளில் எப்புறம் நோக்கினும் மனதிற்கும் கண்களுக்கும் இன்பமூட்டும் காட்சிகளே தென்பட்டு வந்தன—ரம்யமான உபவனங்கள்—சிங்காரத் தோட்டங்கள்—நீரூற்றுகள்—சுந்தரமான சித்திரசாலைகள்—அவற்றில் கண்ணைப் பறிக்கும் வர்ணப் படங்கள்—தேவலோக கானமோ என்று ஐயுறத்தக்க ஸ்வரஸம்யோகத்துடன் கூடிய கந்தர்வகானம்—தகதகவென ஜ்வலிக்கும் நவரத்னங்களாலாகிய ஆபரணங்களையணிந்து உலவும் அப்ஸரஸுகளை நிகர்த்த ஸ்திரீகளின் நர்த்தனம்—இன்னோரன்ன வைபோகக் காட்சிகளால் முகலாய ஸாம்ராஜ்யத்தின் தலைநகரில் எந்நேரமும் களிநடம் புரிந்து வந்தது.

ஷாஜஹான் சக்ரவர்த்தி—
அருங்கலா விநோதன்

ஷாஜஹான் பாதுஷா கலா நுட்பம் மிகுதியும் வாய்ந்தவர். அதனுடன் மகத்தான ஓர் ஸாம்ராஜ்யத்தின் முடி மன்னனாக இலங்கிய அவர், தமது செல்வப் பெருக்கையும், இறைமாட்சியையும், அழகுக் கலைகளின் வாயிலாக உலகிற்குப் புலப்படுத்த வெண்ணினார். தாம் சிங்காதனத்தின்மீதமர்ந்திருக்கும்போது, தோகையை விரித்தாடும் ஓர் மயில் தனக்கு நிழல் செய்வது போன்ற வடிவிலே ஓர் சிம்மாதனத்தை நிர்மாணிக்க வேண்டுமென அரசருக்கு ஓர் விருப்பமுண்டாயிற்று. அம்மயிலின் தலை, கழுத்து, தோகை, இறக்கை முதலிய உறுப்புகள் ஒவ்வொன்றிலும் நவரத்தினங்கள் இழைக்கப் பெற்றதாக விருக்கவேண்டுமென்று அவர் மேலும் ஆர்வம் கொண்டார்.

மயிலாஸனத்தின் தோற்றம்.

ஷாஜஹான் பாதுஷாவின் நாட்களில் உயிர் வாழ்ந்தவரும், அதைத் தயாரிப்பதற்கு உத்தரவு அளிக்கப்பட்டபோது உடனிருந்தவருமான அப்துல் ஹமீத் ஸாஹோரி என்பவரால் எழுதப்பட்ட "பாதுஷா நாமா" என்ற நூலிலிருந்து மயிலாஸனத்தைப்பற்றிய விவரங்களைக் கீழே தருகிறோம்

"வருஷக் கணக்கான விலை மதித்தற்கரிய பொன்னும் மணியும் நவரத்தினங்களும் அரண்மனைப் பொக்கிஷத்தில் வந்து குவிந்தவாறாகவிருந்தன. அவை ஒவ்வொன்றும் இரதிதேவியின் காதணிகளையாவது சூரியனின் மேகலையையாவது அலங்கரிக்கவல்ல அவ்வளவு அற்புதமான ஒளிவீசுந் தன்மை வாய்ந்தவை. ஷாஜஹான் பாதுஷா பட்டமேறியதும் நாளுக்கு நாள் அரண்மனையில் குவிந்தவண்ணமிருக்கும் அவ்வருமையான ஆபரணங்களையும் சுடரொளிவீசும் நவரத்தினங்களையும் ஒருவிதமாகத்

வலுவூட்டும் சிறந்த டானிக்

வெப்ஸ்டர்ஸ் பாஸ்பாடம்

கிருஷ்ராஜ் & கம்பெனி, மெத்தையில் ஆபீஸ்,

மருந்து வியாபாரிகள், சைனுபஜார் ரோட், மதராஸ்.

எல்லா மருந்து ஷாப்பு களிலும் கிடைக்கும்

தான் பயன்படுத்த முடியும்—அதாவது முகலாயச் சிம்மாதனத்தையலங்கரிப்பதைத் தவிர, மற்றபடி அவைகளை வேறு சிறந்த வழியில் உபயோகப்படுத்துவது உசிதமும் சாத்யமும் அன்று என்ற முடிவுக்கு வந்தார். அவ்வாறு செய்வதன் மூலம் அதைக் காண நேரும் அனைவரும் அதன் காம்பீரத்தையும் வனப்பையும் கண்டு களிப்பும் இன்பமும் எய்துவது திண்ணம். அரசர்பிரானுடைய இறைமாட்சியும் அதன்வாயிலாக மிக்க பிரகாசம் பொருந்தியதாக விளங்குமன்றோ? ஆதலின், அரண்மனைப் பொக்கிஷசாலையிலுள்ள ஆபரணங்களைத் தவிர்த்து 200 லக்ஷம் ரூபாய்கள் மதிப்புள்ள கெம்புகள், வைரங்கள், புஷ்யராகங்கள், மரகதப் பச்சைகள், ஆணிமுத்துக்கள் முதலியவை பாதுஷாவின் பார்வைக்காகக் கொண்டு வரப்படவேண்டுமென்றும், அவைகளைத் தவிர 50,000 மிஸ்கால்களுக்கு மேல் நிறையுள்ளதும் 86 லட்ச ரூபாய்களுக்கு மேலாகப்பெறுமான நகைகளும் அதன் பொருட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் அவைகளைத் தர்பார் பொற்கொல்லர்களின் அத்யக்ஷரான பேபதல்கான் என்பவர் வசம் ஒப்புவிக்க வேண்டுமென்றும் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. அன்றியும் 14லக்ஷம்ரூபாய் மதிப்புள்ளதும் 2,50,000 மிஸ்கால் எடையுள்ளதுமாகிய அதாவது லக்ஷம் தோலா நிறையுள்ள கலப்படமற்ற—அப்பட்டமான பசுந்தங்கமும்—அவரிடம் உடனே கொடுக்கப்பட வேண்டுமென்றும் ஆக்ஞையிடப்பட்டது.

“இவ்வாறு உத்தேசிக்கப்பட்ட சிம்மாதனம் 3 கஜ நீளமும் 2½ கஜ அகலமும், 5 அடி உயரமும் உள்ளதாக இருக்க வேண்டும்; கெம்புக்களும் நவரத்தினங்களும் இழைத்து அதை நகாஸு வேலைகளால் அழகுபடுத்த வேண்டும். அதனுடையவிதானத்தின் வெளிப்புறம் எனமல் வேலைப்பாடுடன் கூடியதாய் இங்குமங்கும் கெம்புகளிழைத்ததாகவிருக்க, அதனுடைய உட்புறமோ இடைவெளியின்றி சிகப்புக்களாலும், இரத்தினங்களாலும் செறிந்து விளங்கவேண்டும். இவ்விதானத்தைத் தாங்குவதன்பொருட்டுப்பன்னிரண்டு மரகதத் தூண்கள் நிறுவப்படல்வேண்டும். இக்கால்கள் ஒவ்வொன்றின் உச்சியிலும் கெம்புக்கள் பதித்த இரண்டு மயில்களும், இவ்விரு மயில்களுக்குமிடையேயுள்ள இடைவெளியில் வைரங்கள், புஷ்யராகங்கள், முத்துக்கள், மாணிக்கங்கள் முதலியவைகளாகிய விருக்ஷங்களும் சிற்பிக்கப்படவேண்டும். சிம்மாதனத்தின் மீதேறுவதற்காக முதல்தரமான மாணிக்கக் கற்களால் ஆகியதாயிருக்க வேண்டும்.

ஒரு கோடி ரூபாய் செலவு!

ஏழுவருடப் பிரயாஸை! அற்புதமான இச்சிம்மாதனத்திற்கு 100 லக்ஷம்—அதாவது ஒரு கோடி ரூபாய்-செலவாயிற்று. அரசரும் பிரமுகர்களும் அமருவதற்காக அதில் அமைத்திருந்த பதினொரு மணியாஸனங்களில் சக்ரவர்த்தி பெருமான் வீற்றிருந்த ஆஸனத்திற்கு மாத்திரம் 10 லட்சம் ரூபாய்களுக்குமேல் பிடித்தது. நக்ஷத்திரங்களைப் போன்ற வைரங்களே பெரும்பாலும் ஜ்வலித்த அவ்வாஸனத்தில் இரான் நாட்டு அரசர் ஷா—பாஸ் அரசர் அ—ஜஹாங்கிர் பாதுஷாவிற்குப் பரிசாக அளித்த சிகப்புக் கெம்புக் கல்லும் பதிப்பிக்கப் பெற்றிருந்தது. அஃதொன்று மாத்திரம் லட்சம் ரூபாய்க்கு மேலாக மதிப்புள்ளது. அதில் டைமூர்ஷா முதலாக வந்த பர்ஸிய அரசர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருந்தது அது ஷா-அபாஸின் வசத்தில் வந்ததும் அவர் தம்முடைய பெயரையும் அதில் பொறித்து வைத்தார்.

ஜஹாங்கிர் பாதுஷாவோ, தம்முறைக்கு அதில் தம்முடையவும் தம்முடைய தந்தையினுடையவும் திருப்பெயரைப் பொறித்துவைத்தார். கடைசியாக ஷாஜஹான் சக்ரவர்த்தியின் பெயரும் அதனுடன் சேர்க்கப்பட்டபொழுது அதனுடைய சிறப்பு பன்மடங்கும் உயர்வெய்தியது. அரசருடைய உத்தரவுகளுக்கிணங்க விதானத்தின் உட்புறத்தில் மரகத எழுத்துக்களில் ஹாஜி முகம்மது ஜான் என்னும் பெரியாரால் எழுதப்பட்ட பாடல் ஒன்றும் சேர்க்கப்பட்டது. ஆக்ராவிற்குத் திரும்பியதும் அரசர்பிரான் ஓர் பெரிய தர்ப்பாரைக் கூட்டுவித்து முதன் முதலாக இச்சிங்காதனத்தில் கொலுவமர்ந்தார்.

மேனாட்டு யாத்ரிகர்களின் சாட்சியம்.

கி. பி. 1634-ம் வருடத்திற்குச் சரியான ஹிஜ்ரி 1044-ம் ஆண்டு நவரோஸ் பண்டிகை தினத்தன்று (புதிய வருஷப் பிறப்பு நாள்) நவரத்னகசிதமான இச்சிம்மாதனத்தில் ஷாஜஹான் சக்ரவர்த்தி கம்பீரமாகக் கொலுவமர்ந்தார். அயல்நாடுகளிலிருந்து ஜீவனார்த்தமாக இந்நாட்டுக்கு விஜயம் செய்த ஐரோப்பிய யாத்திரிகர்களும் இவ்வொப்புயர்வற்ற ஆஸனத்தை நேரில் பார்வையிட்டுத் தமது வியப்பை வெளியிட்டிருக்கிறார்கள். டாவெர்ணியர் என்ற பிரெஞ்சு யாத்ரிகர் மயிலாஸனத்தையழகு செய்தவற்றினுள் மரகதப் பச்சைகளாலும் மற்றும் பல வகை இரத்தினங்களாலுமா

வேலைப்பாடே மிகுதியும் சிறந்து விளங்கியதாக அறிவிக்கிறார். வெர்ணியர் என்ற பெயர் வாய்த்த மற்றொருவரோ, அம்மாதிரியான இரண்டு மயில்கள் சிங்காதனத்தைப் பொலிவுபடுத்தியதாகக் கூறியுள்ளார். ஆனால், இவைகளைக் காட்டிலும் முற்கூறிய அப்து-ல் ஹமீத் லாஹோரி யெழுதியிருப்பதையே உண்மையென நினைக்க வேண்டியிருக்கிறது. சிம்மாதனத்தைத் தாங்கிநின்ற இரு தூண்களின் உச்சியிலும் இரண்டு மயிலுருவங்கள் இருந்ததாக அவர் தக்க ஆதாரத்துடன் கூறியுள்ளார். “ஒளிமலை” என்னும் பொருள் தரும் “கோஹினூர்’ என்ற வைரமும் ‘ஸைனுயிமலை’ என்னும் பொருள்வாய்ந்த ‘கோகினூர்’ என்ற வைரமும் அம்மயிலுக்குக் கண்களாக இழைக்கப்பெற்றிருந்தன. “கோஹினூர் வைரத்தின் தனிப் பெருமையைக் குறித்து எழுதுவதென்றால், இக்கட்டுரை அதற்கு இடந்தராது. அதனை

வரையப்பட்டுள்ளதென்பதொன்றே அதன் மாட்சியை விளக்கப் போதியதாகும். ஏராளமான பணச்செலவில் தயாரிக்கப்பட்ட இச்சிம்மாதனம் முகலாயர்களின் தர்பார் மண்டபமாகிய திவானி—காஸ் என்னுமிடத்தில் வைக்கப்பட்டு முகம்மதுஷாவின் காலம் வரையில் முகலாயர்களின் செல்வ மேம்பாட்டின் அறிகுறியாகக் கண்காட்சியளித்துவந்தது. அப்பால் முகலாயர்களின் கீர்த்தி சூரியன் உச்ச நிலையினின்றும் தாழ்ந்துவிட்டான். மயிலாஸனத்தில் கடைசியாக ஏறிய சக்ரவர்த்தி மகம்மதுஷா என்பவனே.

நாதிர்ஷாவின் படையெழுச்சியும் டெல்லிப் படுகொலையும்

கி. பி. 1739-ம் ஆண்டில் நாதிர்ஷா என்னும் பாரஸீக அரசன் முகலாய ராஜ்யத்தின் மீது படையெடுத்தான். அவனுடைய முக்கிய உத்தேசம் இந்நாட்டை வெற்றிகொள்ள

(27-ம் பக்கம் பார்க்க)

நீலகிரி

காப்பிக் கொட்டை

கீழ்கண்ட ரகங்களை சகல சார்ஜும் உள்பட சென்னை ராஜதானியில் அல்லது பம்பாய்க்கு தெற்கேயுள்ள எந்த ஸ்டேஷனுக்கு வேண்டுமானாலும் வி. பி. ரெயில்வே பார்சல் (Passenger Train) மூலமாய் அனுப்பப்படும்.

10 றாத்தல் எக்ஸ்ட்ரா போல்டு தட்டைக் கோட்டை	ரூபா	5	7	0
கூட்ஸ் வண்டி மூலமாக (Goods Train)				
1 × 30 றாத்தல் மூட்டை நீலகிரி “O” சைஸ்	,,	15	1	0
1 × 30 றாத்தல் மூட்டை ,, எக்ஸ்ட்ரா போல்டு	,,	13	3	0

இன்னும் இதர காப்பிப் பொடி டீ தினுசுகளின் விலை விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

யுனைடெட் காப்பி சப்ளை கம்பெனி, லிமிடெட்.,

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:-T. ஸ்டேன்ஸ் & Co. Ltd, கோயம்புத்தூர்

MINSARARASAM

நிகரற்ற தேக வலிமை
புதிய ரத்தோட்டம்
அபாரமான ஜீவசக்தி
ஆனந்தமயமான வாழ்வு

இவைகளை யடைய

மின்சாரரசம்

வேத அருமையான பொக்கிஷம்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

புட்டி 1-க்கு ரூ. 2.

மின்சார ரசம் கம்பெனி(லிட்) சேலம்.

MINSARARASAM

தென்னிந்தியப் பிரமுகர்கள்

கனம் கே. பெர்ராஜு பந்துலு காரு.

(1859—1910)

(கே. எஸ். ஆர்.)

ஆந்திர தேசத்தில் பிறந்து, இம்மாகாணப் பொதுவாழ்வில் மிகவும் ஈடுபட்டு காலஞ்சென்றவர்களுள் நாம் பிரதானமாக கஞ்சம் வெங்கடாத்னம் பந்துலு, கனம் கே. பெர்ராஜு பந்துலுகாரு, ஸர் எம் ராமச்சந்திரராவ் ஆகியோர்களைப் பிரதானமாகக் கருதலாம். இக்கோஷ்டியைச் சார்ந்தவர்களுள் ஒருவரான ஸ்ரீமான் என் சுப்பாராவ் பந்துலுகாரு நமது அதிர்ஷ்டவசமாக இன்றும் நம்மிடையே வாழ்ந்து வருகின்றார். சமூக ஊழியம் சம்பந்தமாக நாம் காலஞ்சென்ற கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலுவையும், ஸர் ஆர். வெங்கடரத்னம் நாயுடு காருவையும் முக்கியமாகக் கணக்கிடவேண்டும். கஞ்சம் வெங்கடாத்னம் பந்துலுவும், கனம் கே. பெர்ராஜு பந்துலுவும் சென்ற நூற்றாண்டின் அந்திய வருஷங்களிலேயே இம்மாகாணத்தில் சிறப்பெய்திவிட்டனர். இதை இவ்விருவர்களுடன் ஸ்ரீமான் என் சுப்பாராவ் பந்துலுவும் ...ங்குகொண்டார். இவர்க

உள்ளத்தில் வளர்ந்து வந்தது பற்றி இவர்கள் தாய் நாட்டுப் பணியை மேற்கொண்டனர்.

நில சம்பந்தமான பிரச்னைகள்

புதிதாகச் சீர்திருத்தப்பட்ட சென்னைச் சட்டசபையில் ஸ்தானம் வகித்து, கனம் கே. பெர்ராஜு பந்துலு கவர்ன்மெண்டாரின் கவனத்தை அநேக முக்கிய விஷயங்களுக்கு ஆகர்ஷித்தார். பிரதானமாக இவர் தேசிய ஸ்திதியின் உயர்வையே கருதிவந்தார். இதற்காக சதா நிலவரிப் பிரச்னைகளில் ஆழ்ந்த ஆர்வம் கொண்டு வாழ்ந்துவந்தார். ஏழைக்குடிகளின் வரிப்பளுவைப் போக்குவதிலேயே இவர் முயன்று உழைத்தார். 1893-ம் வருஷத்தில் சென்னை சட்டசபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை சட்ட மூலமாகக் கிடைத்தது. இதற்குச் சற்று முன்புதான் காலஞ்சென்ற திவான்பஹதூர் எஸ் ஸ்ரீநிவாஸ ராகவய்யங்காரின், "சென்னை ராஜதானியின் நாற்பது வருஷத்திய அபிவிரு

பிரசுரமாகியது. இப் புஸ்தகம் வெளியானதனால், விவசாயிகளுக்கும் பொதுஜன ஊழியர்களுக்கும் விசேஷ நன்மை ஏற்பட்டது. ஆந்திர தேசத்தின் தொண்டு கிழவரான ஸ்ரீமான் என். சுப்பராவ் பந்துலுவிடம் சமீபத்தில் நான் பேசிக்கொண்டிருந்தபோது, மேற்குறிக்கப்பட்ட புத்தகத்தில் காணப்படும் அரிய பொருளாதார ஸ்திதி விவரங்களும், நில சம்பந்தமான விஷயங்களும், மற்றும் இதர சமாசாரங்களும், தமக்கும் சென்னைச் சட்டசபையில் இருந்துவந்த பொது ஜனப் பிரதிநிதிகளுக்கும், கவர்ன்மெண்டாரை முக்கியமான வினாக்கள் கேட்பதற்குப் பெரிதும் உதவின என்று அவர் என்னிடம் சொன்னார். இப்புத்தகம் வெளியானதனால் அதுபரியந்தம் கவர்ன்மெண்ட் ஆபீஸ் அலமாரிகளில் அதிரகஸியமாக விருந்துவந்த சில விசேஷ விஷயங்கள் பலருக்கும் தெரிய வந்தனவென்றும் அவை பொதுமக்களுக்கு மிகவும் உபயோககரமாக விருந்தன என்றும் அப்பெரியார் அச்சமயம் சொன்னார். ஆகையால் கனம் கே. பெர்ராஜுவும் நிலத்தீர்வை விஷயங்களில் இப்புஸ்தகத்தின் காரணமாக விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டார். இவர்களுடைய கூரிய வினாக்கள் காரணமாக அரசாங்கத்தாருடைய போக்கு மனம் போனபடி இருப்பது அசாத்தியமாகியது.

கனம் கிரந்திவண்டி பெர்ராஜு பந்துலுகாரு 1859-ம் ஆண்டில் ஒரு சாதாரண பிராம்மண குடும்பத்தில் பிறந்தார். இவரது முன்னோர்கள் சர்க்கார் பிரதேசத்திலிருந்து காகிநாடாவிற்கு வந்து குடியேறியவர்கள். ஆகையால் இவரது வித்தியாப்யாஸம் காகிநாடாவில் ஆரம்பமாகி நடைபெற்றது. இவர் காகிநாடா ஹைஸ்கூலில் படித்து, மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறினார். பின்பு சட்டசாஸ்திரத்தில் விருப்பங்கொண்டு, இவர் முதலாவது கிரேட் ப்ளீடர் பரீக்ஷைக்கு ஆஜரானார். இந்த வக்கில் பரீக்ஷையில் தேறி, இவர் சன்னது பெற்றுக்கொண்டார்.

"நிகரற்ற நியாயவாதி"

இதன் பின்பு இவர் தமது சொந்த ஜில்லாவில் தமது தொழிலை நடத்துவாராயினார். இவருக்கு வக்கீல் தொழிலில் விசேஷ ஜயம் கிட்டியது எனச் சொல்ல வேண்டும். கூடிய சீக்கிரத்தில் வருவாய் விஸ்தரித்ததுடன் கக்ஷிக்காரர்களும் வலுக்க வாரம்பித்தனர். வட சர்க்காரில் இவருக்கு நிகர் ஒருவரும் இல்லை என்ற புகழ் வெகு சீக்கிரத்திலேயே இவருக்குக்

அசல் புளூ ஜாகர்
வைரங்கள்
இயற்கை முறையில்
உற்பத்தி செய்யப்பட்ட
(CULTURE)
நல்முத்துக்கள்
கிடைக்குமிடம்:
சிமன்லால் பிரதாப் சந்த்
175, சைனபஜார், மதராஸ்.

ஸ்திதியில் வாழ்க்கையை ஆரம்பித்த இவர் சில வருஷங்களுக்குள்ளாகவே ஏராளமாகச் சம்பாதித்து, பெரிய பூஸ்திதிகளை வாங்கினார். தொழிலில் இவருக்குக் கிடைத்த பிராபல்யத்திற்கு, இவரது இடைவிடாத ஊக்கமும், அசாதாரண புத்தி கூர்மையும், நம்பிக்கையான நடத்தையும் காரணங்களாவன. கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாக்களில் நிகரற்ற நியாயவாதியாக விளங்கி, இவர் தமது மரணத்திற்குச் சில வருஷங்கள் முன்பு தமது தொழிலிலிருந்து விலகிக்கொண்டார்.

பொதுவாழ்வில் ஈடுபடுதல்

சாதாரணமாக நியாயவாதத் துறை, பொது வாழ்வில் ஈடுபடுவதற்கு அனுகூலமானதாகும். இதற்கேற்ப இவருக்கும் ஆரம்ப காலத்திலிருந்தே தேசத்திற்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற அபிலாஷை ஏற்பட்டது. வெகு காலமாகவே இவர் காகிநாடா முனிசிபாலிடி அங்கத்தினராகவிருந்தார். பின்பு தமது அந்திய காலம்வரையில் முனிசிபாலிடி சேர்மனாகவும் இவர் இருந்தார். முனிசிபாலிடியின் தலைவராகவிருந்த காலத்தில் இவர் நகர நிர்வாகத்தில் அநேக சீர்திருத்தங்கள் செய்தார். இன்னும் இவரது பெயர் அங்கு விசுவாசத்துடன் பாதுகாக்கப்படுகின்றது. இவரை அடிக்கடி அண்டி வந்த ஏழைகளும் ஆர்த்தர்களும் ஒரு சமயமாவது அதிருப்திகொண்டது கிடையாது.

இவர் காங்கிரஸ் மஹாசபையைப் பூரண மனதுடன் ஆதரித்து வந்தார். இம்மஹாசபையின் கூட்டங்களுக்கும் இவர் பிரதி வருஷம் சென்று வந்தார். 1901-ம் வருஷம் நடைபெற்ற காங்கிரஸ் மஹா சபையில் இவர் தேசாபிமானி ஜி. சுப்பிரமணிய அய்யர் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார். இச்சமயம் இவர் ரெவினியூ தீர்வைகளைப் பற்றிப் பேசி, இது தேசத்தின் வறுமைக்கு எப்படி காரணமாகின்றது என்பதை எடு

வருஷத்தில் இவர் சுதேசி இயக்கத்திற்கு ஆதரவின் ஆவசியகத்தைப்பற்றிப் பலமாகப் பேசினார்; இவரது மொழிகள் மிகுந்த உத்ஸாஹத்துடன் அச்சமயம் வரவேற்கப்பட்டன.

சட்டசபையில் தொண்டு

1901-ம் ஆண்டில் இவர் சென்னைச் சட்டசபைக்கு பொதுஜனப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டார். சட்டசபையில் இவர் மற்றவிடங்களைப் போலவே உண்மையில் பொதுஜனப் பிரதிநிதியாக இருந்தார். இவர் எப்போதும் ரயத்துக்களுக்காகப் பரிந்துபேசிவந்தார்; இதனுடன் பொது மக்களின் உரிமைகளையும் விட்டுக் கொடுக்காமல் பாதுகாத்து வந்தார். காங்கிரஸ் வாதியான இவர் அநேகம் இந்தியப் பிரச்னைகளில் தமது ஆழ்ந்த கவனத்தைச் செலுத்திவந்ததுபற்றி, சட்டசபையில் தம்மைத் தேர்ந்தெடுத்தனுப்பிய வாக்காளர்களுக்கு மிகவும் உபயோகமாக விருந்து வந்தார். சட்டசபை விவாதங்களில் இவர் உத்ஸாஹத்துடன் இறங்கி, தமது விஸ்தாரமான ஞானத்தைக் காட்டி வந்தார். ரெவினியூ, விவசாயம், கைத்தொழில் ஆகிய விஷயங்களைப் பற்றி இவர் ஊக்கத்துடன் படித்து, அனுபவஞானத்தையும் அடைந்தவர். இவை காரணமாக இவர் கவர்ன்மெண்டாரைக் கேட்டுவந்த வினாக்கள், அவர்களுக்கு அதிக சஞ்சலத்தைக் கொடுத்து அவர்களது பக்கத்தைப் பிளந்தன. 1909-ம்வருஷத்திய மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் பிரகாரம் புதிய சட்டசபை ஏற்படுத்தப்பட்டபோது, இவர் அதற்குக் கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர் ஜில்லாக்களின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தனுப்பப்பட்டார். இதினின்று, ஜனங்களுக்கு இவரிடம் இருந்த நம்பிக்கை நன்கு வெளியாகின்றது. புதிய சென்னை சட்டசபை 1910-ம் வருஷம் பிப்ரவரி மாதம் கூடியது. இதன் கூட்டம் சொற்ப தினங்கள் மட்டுமே நடைபெற்றதாயினும் இவர் சும்மாயிராமல் ஜனானுகூலத்தையே நாடி வந்தார்; இவரது காரியங்கள் எங்கும் கொண்டாடப்பட்டன. இவர் பிரேரேபித்த தீர்மானங்கள், புள்ளி விவரங்களிலும் விஷய விமர்சனங்களிலும் இவருக்கிருந்த விசேஷ ஞானத்தை நிரூபித்தன. இச்சட்டசபையில் ஜனங்களின் நன்மைக்காக இவர் இன்னும் அதிகமான காரியங்களைச் செய்வதற்கு இவரது மரணம் இடையூறாகச் சம்பவித்தது. ஆகையால், தமது அந்தியகால பரியந்தம் இவர் சட்டசபை மெம்பராக விருந்து வந்தார். இவரது மரணத்திற்குப் பின்பு இவரது ஸ்தானத்தைக் காலஞ்சென்ற [illegible] மோச்சேர்லா ராமச்சந்திரராவ் ஸ்வீகரித்தார்.

தமது ஜில்லாவிற்காக ஸ்ரீமான் பெர்ராஜு பெரிதும் உழைத்தார். கோதாவரி ஜில்லாச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட நாட்களில் இவர் ஸ்ரீமான் என். சுப்பாராவ் பந்துலுவுடனும், காலஞ்சென்ற கஞ்சம் வெங்கடரத்னம் பந்துலுவுடனும் சேர்ந்துகொண்டு அதிமும்முரமாகப் பாடுபட்டு வந்தார். இச்சங்கம், ஜில்லாவின் விவசாய, பொருளாதார ஸ்திதிகளை சரிவர ஆராய்வதற்காக ஏற்படுத்தப்பட்டது.

சாத்வீகக் கொள்கைகளைப் பின்பற்றியவர்

இவர் பெருத்த தேசீயவாதி. பொது வாழ்வில் இவர் சாத்வீகமானதும் பலரும் ஒப்புக்கொள்ளக் கூடியதுமான கொள்கைகளைப் பின்பற்றினார். இவருக்கு விசால நோக்கமும், பரந்த புத்தியும் உண்டு. ஆகவே இவர் தீங்கை விளைவிக்கும் தீவிர முயற்சிகளில் நம்பிக்கை கொண்டதில்லை. இவர் பட்டம் பதவிகளில் மோஹம் கொண்டவரல்லர். இவரது வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது யாதெனில், தமது காலம் பூராவையும் இவர் பொதுஜன ஊழியனாகக் கழித்துவிட்டதுதான்; பொது மக்களும் இவரைத் தலைவராகக் கொண்டாடி இவரது வழிகளைப் போற்றிவந்தனர். ஆனால் பொது வாழ்விலாகட்டும், நியாயவாதத் துறையிலாகட்டும், தாம் எடுத்த கக்ஷியின் நியாயத்தைப் பிறர்க்கு பயப்படாமல் இவர் அஞ்சா நெஞ்சுடன் வாதித்துவந்தார்.

1903-ம் வருஷம் ஜனவரி மாதம் நடந்த டில்லிதர்பாருக்கு இவர் கவர்ன்மெண்டாரால் அழைக்கப்பட்டு சென்று வந்தார். இவர் "ஹிந்து" பத்திரிகையிலும், இன்னும் மாதாந்திரப் பத்திரிகைகளிலும் வியாசங்கள் எழுதி வந்தார். இவை பெரும்பாலும் விவசாயம், கைத்தொழில் ஆகியவற்றைப் பற்றி எழுதப்பட்டன.

கல்வி விஷயத்தில் சிரத்தை

நம்தேச மக்களுக்குக் கல்வி அவசியமானது என்பதை இவர் வெகு சீக்கிரத்தில் உணர்ந்துவிட்டார். பித்தாபுரம் மஹாராஜா கலாசாலை நிர்வாகச் சங்கத்தின் காரியதரிசியாக விருந்து, அதன் அபிவிருத்தியை சதா நாடினார். ஸ்தாபனத்தைப் பற்றின நுணுக்கமான விஷயங்களையெல்லாம் எளிதில் அறிந்துகொண்டு இவர் தமது அனுபவத்தைப் பிரயோஜனகரமாக உபயோகித்து வந்தார். கலாசாலையிலும் ஹாஸ்டலிலும் மாணாக்கர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த வசதிகளை இவர் தாமே நேரில் [illegible] பார்வையிட்டு வந்தார்; இதனால் அநீதிகள் எழும்புவது அசாத்தியமாகியது. கோதாவரி ஜில்லாவில் ராமசந்திரபுரத்தில் இவர் "நேஷனல் ஹைஸ்கூல்" என்ற பெயருடன் ஒரு பாடசாலையை ஸ்தாபித்தார். வித்யாபிவிருத்தியில் இவருக்கிருந்த மஹோன்னதமான ஆர்வத்தை இது நிதர்சிப்பிக்கின்றது. இப் பள்ளிக்கூடத்திற்காக இவர் ஒரு நிதியையும் நிறுவினார். சர்க்கார் பிரதேசத்தில் நன்கு நடத்தப்பட்டு வரும் பள்ளிக்கூடங்களில் இது பிரதானமானது. இதை நடத்துவதற்காக இவர் ஒரு திறமை வாய்ந்தவரை இதன் தலைமை உபாத்தியாயராக நியமித்தார். இதுதவிர கனம் பெர்ராஜு காகிநாடாவில் "விக்டோரியா இலவச வாசகசாலை"யையும் "விக்டோரியா சத்திர"த்தையும் ஸ்தாபித்துவைத்துள்ளார். இவரது வாசக சாலையில் முக்கியமான பத்திரிகைகளெல்லாம் வாசகர்களின் உபயோகத்திற்காகத் தருவிக்கப்படுகின்றன. சத்திரத்தில் இலவசமாக யாத்ரீகர்களுக்கு உணவும் தங்க வசதியும் அளிக்க இவரால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கனம் கே. பெர்ராஜு பந்துலு 1910-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 23-ம் தேதியன்று தமது 51-வது பிராயத்தில் காகிநாடாவில் காலமானார். இவரது மரணம் எதிர் பார்க்கப்படவில்லை. விவசாயிகள் குடும்பத்தில் பிறந்து, விவசாயிகளுக்காக உழைத்து வந்த இவரது மரணம் ஆந்திர தேசத்திற்கும் சென்னை மாகாணத்திற்கும் பெருத்த நஷ்டத்தை விளைவித்தது. அவரது அகால தேகவியோகத்தினால், இன்னும் இதர நன்கொடைகளை பொதுமக்கள் இழந்துள்ளனர். இவர் இன்னும் சிறிது காலம் ஜீவித்திருந்திருந்தால் புதிய சட்ட சபைக் காரியங்களில் விசேஷ பங்கு எடுத்துக்கொள்வதுடன், பொதுஜன இயக்கத்திற்கும் வலு இன்னும் அதிகமாகக் கொடுத்திருக்கக்கூடும்; "ஈஸ்டு அண்டு வெஸ்டு" "இந்தியன் ரெவியூ" போன்ற ஸஞ்சிகைகளில் இவர் எழுதியுள்ள வியாசங்கள் படிப்போருக்கு எந்நாளும்பயனளிப்பவைகளாவன! சர்வ கலாசாலைப் பட்டங்களையடையாமலே இவர் பொதுஜன மதிப்பில் மிக உயர்ந்த [illegible]

சிறந்த கூந்தல் ஆகாரம்

உடலுக்கு எப்படி நல்ல உணவு அவசியமோ அதே மாதிரி கூந்தலுக்கும் சிறந்த ஆகாரம் அவசியமானது. எனவே உலகப்புகழ்பெற்ற காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) உபயோகியுங்கள். கூந்தலின் ஆரோக்கிய வளர்ச்சிக்கு அத்யாவசியமான சத்துக்கள் பல சேர்ந்தது. மூளைக்குக் குளிர்ச்சி; துல்லிய மணம் நிறைந்தது.

விலை புட்டி 1-க்கு ரூ. 1.
,, 3 புட்டிகள் ரூ. 2-10.
வி. பி. சார்ஜ் தனி.

தபால் செலவுக்காக அரையணா ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு சாம்பிள் இலவசம்.

ப்ராசீன மலர்களின் சுவாசனையும், புத்தப் புதிய இனிமையும் வாழ்விற்கு மகிழ்ச்சியூட்டுபவை; இவ்வளவையும் கீழ்க்கண்டதன் வாசனையில் நன்கு அனுபவிக்கலாம்.

ஆட்டோ டில்பஹார்

(ரிஜிஸ்டர்ட்)

ஒரு சில துளிகள் பல நாட்களுக்கு அழியாத வாசனையூட்டும்; ஏனெனில் ஆட்டோ டில்பஹாரில் விரைவில் ஆவியாக மாறிவிடும் ஆல்கஹால் கிடையாது.

விலை ¼ அவுன்ஸ் ரூ. 1-4. 1 டிராம் 12 அணா.

தபால் செலவு தனி.

சோல் ஏஜெண்டுகள்:—

The Anglo Indian Drug & Chemical Co
BOMB Y 2.

வெண் குஷ்டப பெருவியாதி

எவ்வளவு கடுமையானதாயினும எவ்வளவு நாட்பட்டதாயினும் நாலே வாரத்தில் குணம். நிவர்த்திக்கு உத்தரவாதம்.

விவரங்களுக்கெழுதுக,
KAMALA WORKS (S. M.)
Parchı[illegible]a— Bengal India

நகச் சித்து

(காசினி எழுதியது.)

* * * 'என்னமோ போ, எல்லாம் விசித்திரமாகத்தான் இருக்கிறது! எங்கள் பக்கத்தாத்து மாட்டுப்பெண் இடது கை ஆள்காட்டி விரலில் ஒரு நகச் சித்து மாதிரியில் புப்பட்டது உடனேயே இதற்கு 'அயடீன்' தடவிக் கட்டவேண்டும் இல்லாவிட்டால் பழுத்துத் தொந்திரவு கொடுக்கும்' என்று கை நிறையச் செக்கச் செவேரென்று மருந்தைப் பூசிக்கொண்டு வளைய வந்தாள். அது அப்படியும் போவதாகக் காணோம். பிறகு ஒத்தடம் போட்டாள். இப்பொழுது இதைக் கீறிக்கொள்வதற்காக பட்டணம் புறப்பட்டுப் போயிருக்கிறாள். என்ன, ஒரு நகச் சித்து வந்தால் அதற்கு இத்தனை பாடா? இங்கே யாரும் சரியானபடி ஆபரேஷன் செய்யமாட்டார்களாம்; அப்புறம் விரலையே வெட்ட வேண்டி வருமாம்! மாவைக் கிளறி வைத்துக் கட்டினால் தனியே உடைந்து விடுகிறது! எதற்கும் ராஜவைத்தியம் செய்யவேண்டும் என்றால் எப்படி?' என்று நீ எழுதி இருக்கிறாய்.

நகச் சித்து விஷயத்தில் அப்படிச் சொல்லுவதற்கில்லை. நகக் கண்ணின்கீழ் சீப்பிடிப்பதினால் வேதனையும் அதிகமாக ஏற்படுகிறது; சில வேளைகளில் விரலுக்கே ஹானியும் ஏற்படுகிறது. போன வாரம் லேடி சின்னையாவின் பெண் இதேவிதமாகக் கஷ்டப்பட்டாள். என்னுடைய அத்தை 'ஒரு எலுமிச்சம் பழத்தைக் குடைந்து, அதற்குள் விரலை விட்டு, ஒரு நாள் எல்லாம் அப்படியே வைத்து வை; மறுநாள், வீக்கம், வலி எல்லாம் இருந்த இடம் தெரியாமல் போகாவிட்டால் என்னைக் கேளு!' என்றாள். எலுமிச்சம் பழத்துக்குள் விரலை வைத்ததால் ஏற்பட்ட வேதனையைத் தவிர, வேறு பலனைக் காணோம். பிறகு, கீறியே சரிப்பட்டது. 'அத்தைபட்



பாபு ராஜேந்திர பிரஸாத் சமீபத்தில் பம்பாய்க்கு விஜயஞ்செய்தபோது ஸ்டேஷனில் வரவேற்கப்பட்ட காட்சி

ஜோதிஷ மகுடவர்த்தனர்

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர்-பீமகவி-சுகர்-புஜண்டா சாஸ்திர நிபுணர் இப்பூமண்டலப் புகழுரையில் எதிர்கால பலன் கூறுவதில் "உலக சிரேஷ்டர்" என வெற்றி பாமாலையும் தங்க சன்னதங்களும் பெற்றவர்.

ஜாதகம் லக்கின நக்ஷத்திர ஸ்புடஞ் செய்து பொதுப் பலன் எழுத ரூ. 1 ஒரு தெசைக்கு புக்தி பலன் ரூ 2. அஷ்ட வர்க்கம் ஆயுள்வரை புக்தி பலன் ரூபா 7. ஜாதக குறிப்பு முன் பணம் ரூபா 2. தேவை.) 1 வருட மாதா மாதப் பலன் ரூ. 1-8. கேள்வி 5-க்கு அணா 12. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரோபஸர் N. சுப்பிரமணியம்,
(ஜோதிஷ ஆசிரமம்)
வாலாஜாபாத், S. I. R. சென்னை

கெர்ப்ப சஞ்சீவி எண்ணெ.

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்றுவலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திரக்ஷி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்புவலி, கைகால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிர் பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒருசெம்பு ஜலங்கூட தூக்கமுடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளையெல்லாம் தீர்த்து கெர்ப்பப்பை சுத்திகரிக்கப்பட்டு, கெர்ப்ப உற்பத்தியை உண்டுபண்ணும். 6-வித மலடு தீரும். கெர்ப்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளைக் கூட்டோடு வெளியிலகற்றிவிடும். திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

1 நபருக்கு 3 புட்டி வேண்டும்.

1 புட்டி ரூ. 2. 3-புட்டி ரூ. 5. சேலவு வேறு

குணம் இல்லாவிடில் ரூபா 5 வாபீஸ்

பழனி வைத்திய ஆசிரியர்

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

சித்த வைத்திய சாலை,
146, புரசவாக்கம் ஹைரோட், சென்னை
தலைமை ஆபீஸ், பழனி

என்ஜினியரது நன்மொழி.

டி. கே. ஐயாசாமி, என்ஜினியர். ஸ்ரீ வைகுண்டம், 9-3-35

என் கிருஹத்தில் கேசவர்த்தினியை வருஷத்துக்கு மேலாக விடாமல் உபயோகித்து வருகிறோம். தயாரிப்பவர்கள் அதற்கு என்னென்ன குணாதிசயங்கள் உண்டென்று பிரசுரப்படுத்தியுள்ளார்களோ, அவையெல்லாம் அதற்கு உண்டு என்பது எமது அனுபவம். அதன் உபயோகத்தால் மயிர் உதிர்வது நிற்பதுடன், வழுக்கை இளநரைகளும் தீர்ந்து, கூந்தலும் அதிசீக்கிரத்தில் கருகரு என்று வளர்கிறது. கேசத்துக்கு இதைவிடச் சிறந்தது ஒன்றில்லை என் பதைப் பிரகடனப் படுத்துவதில் எனக்குப் பரம ஸந்தோஷம்.

(கையொப்பம்) டி. கே ஐயாசாமி.

கேசவர்த்தினி விலை அணா 12; ஷாம்பு விலை அணா 12.
மேற்செலவு வேறு.

தென் இந்திய ரஸாயன சாலை,
லஸ்ரோடு, மயிலாப்பூர், சென்னை.

டும், 'எங்க நாட்களிலே நாங்கள் எலுமிச்சம் பழத்தைத்தான் நகச்சித்து இருக்கும் விரலில் கோத்துக் கொள்ளுவோம். அப்படியே சப்பிவிடும். இல்லாவிட்டால், மாவைத்துக் கட்டுவோம்; தானே உடையும். இப்போ கலிகாலம் எதற்கும் ஒரு டாக்டர். இதற்கு ஏற்றாப்போல் புண்களும் இலேசில் ஆறுவதில்லை. நகச்சித்து உங்களுக்கு வருவதே, நீங்கள் நகத்தைக் கடிப்பதினால்தான். பல்பட்டு விஷம் வைத்து விடுகிறது; அப்புறம் அது, என் இலேசில், ஆறப்போகிறது?' என்றாள்.

'இதற்குச் சரியான மருந்து கிடையாதா?' என்றும் நீ கேட்டிருக்கிறாய். வீக்கம் வாங்க அனுகூலமான மருந்துகளைப் போடலாம். சோற்றுக் கற்றாழையைக் கொணர்ந்து, சிறிய துண்டுகளாகச் செய்து, இரண்டாகப் பிளந்து, தணலில் வாட்டி, ஒத்தடம் கொடுத்துக் கட்டி வைக்கலாம். இது சீபழுத்து, உடைவதற்கு அனுகூலம் செய்யும் நகச்சித்தை சற்று ஜாக்கிரதையாகவே கவனிக்கவேண்டும் எலுமிச்சம் பழம் இதற்கு கைகண்ட மருந்து என்று அநேகம் பேர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஏனோ லேடி சின்னையா மகள் விஷயத்தில் அது பலிக்கவில்லை. உங்கள் பக்கத்தாத்து மாட்டுப்பெண் செய்த மாதிரியில், முதலிலேயே அயடீன் முதலிய மருந்துகளைப் போட்டு, நகச்சித்து அமுங்கிப் போகும்படிச் செய்யலாம். சாம்பலைச் சலித்து, ஒரு வெள்ளைத் துணியில் போட்டு, விரலைச் சுத்திக் கட்டி, கை பொறுக்கும் சூடான வெந்நீரில் விரலை வைத்துக்கொண்டிருப்பதினால், நகச்சித்து குணமாகும் என்று சொல்லுகிறார்கள். பழுத்துத் தொந்திரவு கொடுத்தால், நல்ல வைத்தியனைக் கொண்டு, கீறச் சொல்லுவதே நலம். உங்கள் பக்கத்தாத்து மாட்டுப் பெண் மாதிரியில் ஊரைவிட்டு ஓடவேண்டாம். ஆனால் அவள் அனுபவம் எப்படியோ! ஒரு வேளை அவளுக்குத் தெரிந்தவர்கள் யாராவது இது விஷயமாக மிகவும் அவதிப்பட்டிருக்கலாம். பொதுவில், நகச்சித்தை அசிரத்தையாக விடக்கூடாது என்றே கூறவேண்டும்.

குங்குமச் சிமிழ்

சில நாட்களுக்கு முன் எங்கள் சிநேகிதி பெண் ஒருத்தி எங்கள் வீட்டிற்கு வந்திருந்தாள். உள்ளே வந்தவள், "அம்மாமி, அம்மா, இந்தப் பத்து ரூபாய்களுக்கு ஒரு நோட்டு வாங்கிக்கொண்டு வரச் சொன்னாள்" என்றாள். கையில் அடுக்காகப் பத்து ரூபாய்கள் வைத்திருந்தாள். 'இதற்கு நீ இவ்வளவு தூரம் வரவேண்டுமா?' என்று கேட்டுக் கொண்டே, அவள் கையிலிருந்த ரூபாய்களை வாங்கினேன்: அடுத்த விநாடியே அது ரூபாய்கள் இல்லை என்பதை அறிந்தேன். 'இது என்னடி இது?' என்று அதிசயத்துடன் கேட்டேன். 'இது புதிய தினுசுக் குங்குமச் சிமிழ் மாமி. நன்றாக ஏமாந்தீர்களா?' என்று சொல்லிவிட்டுச் சொப்பைத் திருகித் திறந்து, 'நாளைக்கு என் அண்ணா பெண்ணுக்கு ஆண்டு நிறைவு. மத்தியானம் சாப்பாடு; சாயங்காலம் கது குத்தல்; காலையில் ஆயுஷ்-ஓமம், ஆசிர்வாதம் எல்லாத்துக்கும் அம்மா உங்களைக் கட்டாயமாக வரச் சொன்னாள்' என்று சிரித்துக் கொண்டே அழைத்தாள். இந்தக் குங்குமச் சிமிழ் பார்வைக்குச் சில ரூபாய்களை அடுக்கி வைத்த மாதிரியிலேயே இருக்கிறது. கூலி உள்பட விலை ஐந்து ரூபாய்கள் ஆச்சுது. என்று என்னுடைய சிநேகிதி சொன்னாள். 'இது பண்ணி வந்தாலும் வந்தது. இதை எடுத்துக்கொண்டு, அண்டை அயலாரை ஏமாற்றுவதே சீதைக்கு வேலையாக இருக்கிறது. நீங்கள்கூட நம்பிவிட்டீர்களாமே? என்றாள். சில்லரைக்கு நோட்டுக் கேட்க இவ்வளவு தூரம் வருவாளா என்று எனக்கு யோசனையாகத்தான் இருந்தது. இருந்தாலும், அவளும் சிரிக்காமல் கேட்டாள். பார்ப்பதற்கும் ரூபாய் மாதிரியே இருந்தது; என்று சற்றே அசட்டுச் சிரிப்புடன் சொன்னேன். உனக்கு இதுமாதிரியில் ஒன்று வாங்கி அனுப்பட்டுமா? மற்றைய விஷயங்கள் அடுத்த கடிதத்தில்.

இந்தியா கவர்ன்மேண்டில் மேடிகல் ஸன்னதுடன் வைத்தியப் பட்டம் பெற்றவரும், கவர்ன்மேண்டு இந்திய வைத்திய கவர்னிங் பாடி & ஸேண்டிரல் போர்டு மேம்பரும், கவர்ன்மேண்டு வைத்திய கலாசாலை & I. M. S. ஹாஸ்பிடல் பரீக்ஷாதிகாரியுமான

வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய

(Sastriar in Govt. Medical dress)

மஹா பில்வாதி லேகியம்

பித்தவாயு, கில் பீடிப்பு, பித்த மயக்கம், பலஹீனம், அன்னத் துவேஷம், அஜீர்ணம், மலச் சிக்கல் இவைகளைக் கண்டிக்கும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 3. வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி

குணம், ருசி, வாசனை இவைகளில் இது ஒன்றுதான் மார்க்கெட்டில் சிறந்தது. டப்பி 1-க்கு 0—2—9 ஒரு டஜன் கொண்ட பெட்டி 1-க்கு ரூபா 1—14—0. வி.பி.வேறு. எங்கும் கிடைக்கும்.

ஆனந்த பற்பசை

ஆனந்த பற்பொடியை பசை ரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. ட்யூப் 1க்கு 0-8-0 வி. பி. வேறு எங்கும் கிடைக்கும்.

மேன்மை தங்கிய ஹிஸ் எச்ஸலேன்ஸி ஸர் கே. வி. ரேட்டி நாயுடு காரு, K, சென்னை மாகாண கவர்னர் அவர்கள் எழுதுகிறார்:—

"வைத்யரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரி, D. V. S. அவர்களால் தயார்செய்யப்படும் மருந்துகளின் அபாரமான வீர்யத்திற்கு நான் நற்சாக்ஷி கொடுக்க மிகவும் ஸந்தோஷமுள்ளவனாக இருக்கிறேன். இவர் நன்றாய்ப் படித்துத் தேர்ந்த ஸம்ஸ்கிருத வித்வானாக இருக்கிறார். இவர் ஸம்ஸ்கிருதத்திலுள்ள வைத்திய சாஸ்திரங்களை நன்றாய் படித்துப் பரிசோதித்து யதோக்தமான அனேக மருந்துகளைத் தயார் செய்வதில் தமது கியானத்தை உபயோகித்து அவைகளை அனுபவத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறார். அப்பேர்க்கொத்த இவருடைய மருந்துகளை நான் உபயோகித்ததில் அம்மருந்துகள் உண்மையில் வீர்யமுள்ளவைகள் என்பதை நம்பிக்கையுடன் நான் தெரிந்துகொண்டேன்."

நேரில் வருவோருக்கு கன்ஸல்டிங் சார்ஜ் கிடையாது.

சகல ஆயுர்வேத ஔஷதங்களும் கிடைக்கும். கேட்லாக் இனம்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி,

வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார்ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

1 & 2 மேலக்கோபுர வீதி

மதுரையில்

நரசுஸ்

சுத்தமான

காபித்தூள், நீலகிரி காப்பிக்கொட்டை

தேயிலை

முதலியவைகளை விற்பனை செய்ய

12-வது கிளை ஆபீஸ் திறக்கப்பட்டிருக்கிறது.

உயர்ந்த சரக்கு! நயமான விலை !!

நாகரீக மின்சார இயந்திரங்களுடன் அமைக்கப்பட்டிருக்கிறது.

நரசுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,

மதுரை, பிராஞ்சு:

H. O. SALEM.

தென்னிந்தியாவெங்கும் கிளை ஆபீஸ்கள்:—

"ஜனனு க்ரீம்"

அற்புதமான சாஸ்திரீகசரக்கு; அநாவசியமாகக் கருதப்படும் ரோமங்களை நீக்க உயர்குடும்பங்களில் கனவான்களாலும் சீமாட்டிகளாலும், சினிமா நடிகைகளாலும் உபயோகிக்கப்படுவது. பரீட்சித்துப் பாருங்கள்.

கிடைக்குமிடம்:—

SHIVLAL & CO.,

Princess Street, Bombay 2.

நஞ்சன்கூடு சத்வைத்யசாலை

ச்யாவனப்ராச

சுவாச டானிக்

யுனைடெட் கன்ஸர்ன், பந்தர்தெரு, மதராஸ்

(குழந்தைகளுக்கு நம்பிக்கையான மருந்துகள் இடம்.)

கோலாப்பூர் வினிடோன் கம்பெனியாரின் நடிகரான மிஸ் லீலா.

கோதாவரி வினிடோன் கம்பெனியாரின் "சதி சுலோசனு" என்ற ஹிந்தி பேசும் படத்திலிருந்து ஒரு காட்சி.



பீஜப்பூரிலுள்ள ஜோட் கம்பஸ். இதற்கு அடுத்தாற்போல் இதைப்போல் மற்றொன்றிருக்கிறது. இவ்விரு சமாதிகளும் பீஜப்பூரில் முக்கியமானவை.

வலது பக்கம் மேல் படம்—பீஜப்பூரிலுள்ள ஜும்மா மசூதி.

வலது பக்கம் கீழ்ப் படம்—பீஜப்பூரிலுள்ள மலிக்—இ—மைதான் பீரங்கி. இது இந்தியாவில் செய்யப்பட்ட மிகப் பெரிய பீரங்கியாம். இந்தப் பீரங்கியின் துவாரத்தில் ஒரு மனிதன் தாராளமாக உட்கார்ந்துகொள்ளலாமென்பதிலிருந்து இது எவ்வளவு பெரியதென்று தெரிந்துகொள்ளலாம்.







சமீபத்தில் மெல்போர்னில் நடந்த சிறுவர் சைகிள் பந்தயம்.

ஹவேயில் ஒவ்வொரு சிறுமிக்கும் தேச நாட்டியமான "ஹுலா நாட்டியம்" கற்பிக்கப்படுகிறது.

ஹாஸ்யப்பகுதி

"சென்ற இரண்டு வருஷமாகக் குருவி, கூடத்தில் கூடுகட்டியிருந்தது. எனக்கும் என் மனைவிக்கும் என்னமோபோலிருக்கிறது. சாப்பாடுகூட இறங்கவில்லை."

நூதன வைத்தியம்

"பூரி"

என்னுடன் ஒரு முக்கிய விஷயமாய்ப் பேசிக்கொண்டிருந்த அண்ணாசாமி அகஸ்மாத்தாகச் சற்று தூரத்தில் எதிரிலிருந்த கோட் ஸ்டாண்டைக் கவனித்தார். உடனே அவர் முகத்தில் ஒரு பெரிய மாறுதல் தோன்றிற்று. சிரித்த முகத்துடன் இருந்த அவர் பெருத்த திகிலடைந்தவர்போல் காணப்பட்டார். கோட் ஸ்டாண்டில் எதாவது பாம்போ கீம்போ என்று எனக்குப் பயமாய்ப் போய் விட்டது.

அண்ணாசாமி 'ஒரு நிமிஷம்' என்று சொல்லிவிட்டு எழுந்து கோட் ஸ்டாண்டினிடம் சென்றார். ஒரு முனையில் மாட்டப்பட்டிருந்த பனியனையும் இன்னொரு முனையில் மாட்டப்பட்டிருந்த ஷர்ட்டையும் எடுத்தார். பிறகு அவற்றை இடம் மாற்றி மாட்டிவிட்டு வந்தார். அப்புறந்தான் அவர் முகத்தில் பழைய சுபாவமான களை தோன்றிற்று "ஒன்றும் அதனதன் இடத்தில் இருக்கிறதில்லை, ஸார்! பனியன் இருக்கவேண்டிய இடத்தில் ஷர்ட்டும் ஷர்ட்டு இருக்க வேண்டிய இடத்தில் பனியனும் இருக்கிறது. இந்த அநியாயம் எங்கேயாவது உண்டா?" என்று சொல்லிப் பிறகு விட்டுப்போன பழைய பேச்சை ஆரம்பித்தார்.

அண்ணாசாமி அக்கௌண்டண்ட் ஜெனரல் ஆபீஸ் குமாஸ்தா. பத்து வருஷகாலமாக அவர் ஒரே அறையில் ஒரேநாற்காலியில் உட்கார்ந்து உத்தியோகம் பார்த்து வருகிறார். எந்த சாமானாவது வழக்கமான இடத்தில் இல்லாவிட்டால் அவருக்கு வேலை ஓடாது. மசிக்கூடு வைப்பதற்கு மேஜையில் நான்குஎல்லை போட்டு வைத்திருக்கிறார். நண்பர்கள் யாராவது பேச்சுவாக்கில் மசிக்கூட்டைநகர்த்தி வைத்துவிட்டால் அவருக்கு என்னமோ பண்ணும். திருட்டு முழி முழித்துக்கொண்டே வேலை செய்ய முடியாமல் தயங்குவார். பிறகு மசிக்கூடு யதாஸ்தானத்துக்கு வந்த பிறகே வேலை செய்வார்.

அவர் பக்கத்தில் கிராப் தலையுடன் வேலை செய்துகொண்டிருந்த குமாஸ்தா மாற்றப்பட்டு வேறு குடுமித் தலை குமாஸ்தா வந்தாலும் ஆபத்துதான். குடுமித் தலை கண்ணுக்குப் பழக்கமாகும் வரையில் வேலை செய்ய முடியாமல் தத்தளிப்பார்.

அண்ணாசாமி மணிப்படி ஆபீஸுக்கு வந்து மணிப்படி வேலை செய்து, மணிப்படி டிபன் சாப்பிட்டு மணிப்படி வீடு திரும்புவார். சில குமாஸ்தாக்களைப்போல் பன்னிரண்டரை மணிக்கே ஒருதரம் போய் டிபன் சாப்பிடப் போகமாட்டார். அண்ணாசாமி டிபன்பாக்ஸை எடுப்பதும் மணி இரண்டடிப்பதும் சரியாயிருக்கும். அவர் அக்கௌண்டன்ட் ஜெனரல் ஆபீஸ் குமாஸ்தாவாயிருந்தும் ஆபீஸிலேயே தங்குவதுகூட இல்லையென்றால் பின் வேறென்ன சொல்வது!

அண்ணாசாமியின் பார்யை பர்வதம்மாள் மேற்கூறிய அம்சங்களில் கணவனுக்குக்கொஞ்சம் பின்வாங்கியவளல்ல. சதிபதிகளிருவரும் குடித்தனத்தை ஓர் ஆபீஸை நடத்துவது போல் நடத்திவந்தனர். அவர்கள் வாழ்க்கையில் மாறுதலென்பது சிறிதுகூட ஏற்பட்டதில்லை.

வழக்கமாக கிழக்கே உதிக்கும் சூரியன் சில சமயங்களில் மாறுதலை உத்தேசித்து வடமேற்கிலும், தென்கிழக்கிலும உதிப்பதாகக் கூறுகிறார்கள். மஹாபிரளயம் ஏற்பட்[...]

சிறிது காலத்திற்கெல்லாம் பகவான் தான்மட்டும் தனியே எத்தனை காலம் ஓய்வுடன் இருப்பது என்று கருதி, உலகத்தை மறுபடியும் சிருஷ்டி செய்வதாக வேதங்கள் சொல்லுகின்றன.

வெறும் மனிதரான அண்ணாசாமி மட்டும் எப்படி ஒரே தினுசாகக் காலங்கழித்து வர முடியும்? அவருக்கும் அவர் மனைவிக்கும் திடீரென்று உடம்பு பலஹீனமாகத் தொடங்கியது. அவர்களையறியாமல் ஏதோ ஒருவிதமான கவலை அவர்களிடம் குடிகொண்டது.

மற்றொரு சமயம் நான் அண்ணாசாமியுடன் பேசிக்கொண்டிருந்தபோது அவர் சோர்ந்து போய் உட்கார்ந்திருந்தார். என்ன உடம்பு என்று விசாரித்தேன். "அதேன் கேட்கிறீர்கள்? சென்ற இரண்டு வருஷமாகக் குருவி கூடத்தில் கிழக்கு மூலையில் கூடுகட்டி யிருந்தது. நேற்று மேற்கு மூலையில் கட்டியிருக்கிறது அதைப் பார்க்க எனக்கும் என் மனைவிக்கும் என்னமோ போலிருக்கிறது. சாப்பாடு கூட இறங்கவில்லை" என்றார் பக்கத்தில் அண்ணாசாமியின் மருமகன் சங்கரனுமிருந்தான். அவன் மெடிகல் காலேஜில் படித்துக்கொண்டிருந்தான். அவன் சொன்னான்:—"மாமா! நீங்கள் இப்படியே காலந்தள்ள முடியாது. அடிக்கடி எங்கேயாவது [...]

டும். உங்கள் காரியங்களில் ஒன்றிரண்டை மாற்றியாவது செய்ய வேண்டும். அமைதியாகவே இருந்து வந்தால் கடைசியில் பயித்தியந்தான் பிடித்து விடும்'' என்றான்.

அண்ணாசாமி தமது மனச்சாட்சிக்கு விரோதமாய் ஒரு மாதம் லீவு எடுத்துக்கொண்டு கிராமத்தில் போய் இருந்து வர ஏற்பாடு செய்தார்.

* * * *

அண்ணாசாமியும் அவரது மனைவியும் கிராமத்துக்கு வந்து ஒருவாரமாயிற்று. எட்டாவது நாள் அவருக்கு ஒரு தந்தி வந்தது. அதைப் படித்ததும் பிரமித்துப் போய் உட்கார்ந்து விட்டார். தந்தி வருமாறு:—

நாளது மறுநாள் சூப்பிரெண்டெண்ட் தங்கள் வீட்டுக்கு விஜயம் செய்வார். தயாராயிருக்கவும்.

தந்தி கொடுத்தவர் யாரென்று தெரியவில்லை. தமது அதிகாரி திடீரென்று தம்மை வந்து ஏன் பார்க்கவேண்டும் என்று எண்ணி நடுங்கினார்.

கணக்கில் இரண்டு மூன்று ஸைபரைக் கூடப் போட்டு லக்ஷக் கணக்காகத் தப்பு கிப்பு செய்துவிட்டோமோ என்று பயந்தார். தந்தி சமாசாரமறிந்த அவர் மனைவிக்குப் பேசக்கூட முடியவில்லை. இத்தனை வருஷகாலமாக அவர்கள் திடுக்கிடும் செய்தியை மனக்கிளர்ச்சியையுண்டாக்கும் செய்தியைக் கேட்டதே இல்லை. அண்ணாசாமி ஒன்றும் புரியாமல் விழித்துக்கொண்டிருக்கும்போது இன்னொரு தந்தி வந்து சேர்ந்தது.

அண்ணாசாமி கை விரல்கள் நடுநடுங்க அதை வாங்கிப் பிரித்துப் படித்தார்.. அவ்வளவுதான். தலையில் கை வைத்துக்கொண்டு கீழே உட்கார்ந்தார். தந்திவருமாறு:

“போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜான் நாளை மறுநாள் தங்களைக் கண்டு பேசுவார். பூரா விஷயங்களையும் சொல்லவும்.

அண்ணாஸாமிக்கு இன்னது செய்வதென்று புரியவில்லை. ஏதோ பெரிய தவறு செய்து விட்டோம், ஜயிலுக்குத்தான் போகப்போகிறோம் என்று எண்ணினார் அன்று மாலை கோவிலுக்குப் போய் கடவுள்மீது பெரிய பாரமாகப்போட்டு விட்டு வீடு திரும்பினார்.

தந்தி வந்த தினமும் மறு நாளும் கணவனும் மனைவியும் எண்ணாததெல்லாம் எண்ணினார்கள். அண்ணாசாமியின் வாழ்க்கையில் முதல் முதலாக செருப்பு இடம் மாறி வைக்கப்பட்டிருந்ததைக்கூட அவர் கவனித்தும் ஒன்றும் செய்யவில்லை பர்வதமமாளும் இருப்புச் சட்டி இடம் மாறிக் கவிழ்க்கப்பட்டிருந்ததைக்கூட லட்சியஞ் செய்யாமலிருந்தாள். வருஷக்கணக்காக அமைதி நிலை பெற்றிருந்த அவர்கள் மனதில் பெரிய போராட்டங்கள் நடந்து கொண்டிருந்தன.

தந்திகளில் குறிப்பிட்ட தினம் வந்தது. வருகிறவர்களை உபசரிப்பதற்கு வேண்டிய சில ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். அண்ணாசாமி வாசலில் யாரோ வரும் சப்தம் கேட்டுப் போய்ப் பார்த்தார். தபாற்காரன் ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டுப் போனான். அவர் கடிதத்தைப் படித்தபோது பர்வதம்மாள் கவலையுடன் அவர் முகத்தைக் கவனித்துக்கொண்டிருந்தாள் கடிதத்தைப் படிக்கப் படிக்க அவர் முகத்தில் ஆச்சரியமும் கோபமும் ஒருங்கே தோன்றின.

படித்து முடிந்ததும் “போக்கிரிப்பயல்'' என்று வைது கொண்டே கடிதத்தை மனைவியிடம் கொடுத்தார். அதில் எழுதியிருந்ததாவது:—

அன்பார்ந்த மாமாவுக்கு! தாங்களும் மாமியும் சவுக்கியமென்று நம்புகிறேன்.

தங்கள் நண்பரிடம் ஒரு நாள் பேசிக் கொண்டிருந்தபோது குருவிக் கூண்டைப் பற்றிப் பிரஸ்தாபம் வந்தது ஞாபகமிருக்கலாம். அப்பொழுது எனக்கு ஒரு யோசனை தோன்றிற்று. பல பேர் ஓய்வில்லாமலேயே வியாதிக்குள்ளாகிறார்கள். ஆனால் தாங்களும் மாமியும் மனக்கிளர்ச்சி எதுவுமின்றிக் காலங்கழித்துவந்ததாலேயே தேக அசௌக்கிய முற்றிருக்கிறீர்களென்று தோன்றிற்று.

அந்த மனோபாவம் போவதற்காகவே தங்களுக்கு நான் பொய்யாக இரண்டு தந்திகள் கொடுத்தேன். இதற்கு மன்னிக்கவும். தங்கள்

சங்கரன்.

Telt :—“SIMILICURE” .Box 043 CAL

வெளிவந்து விட்டன!

ஹோமியோ புத்தகங்கள்

ஹோமியோ வைத்திய முறை

தத்துவம்

தெலுங்குப்பதிப்பு விலை ரூ. 1 தான்.

M. BHATTACHARYYA & Co.

...omic Pharmacy, 84, Clive Street, CALCUTTA.

வலுவாகவும்,

நிரந்தரமாகவும், பத்திரமாகவு

மிருக்க இரும்பையே

கட்டிடங்களில் உபயோகியுங்கள்.

உயர் ரகத்திற்கு

டாடா இரும்பையே

கேளுங்கள்.

ஒவ்வொரு பட்டணத்திலும்

வியாபாரிகளும், ஸ்டாக்கிஸ்டுகளும்

இருக்கின்றனர்.

Tata Iron & Steel Co., Ltd.,

18, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்

தந்தி. “IRONCO MADRAS” போன் : 2701

சிறுவர் பகுதி

கண் இழந்த கண்ணன்

(ஆறுமுகம்)

கந்தபுரி என்ற ஊரில் கண்ணன் என்னும் ஒரு வியாபாரி வசித்து வந்தான். அவனிடம் 30 கழுதைகளிருந்தன. அவன் அவைகளின் முதுகில் வாழைப் பழங்களை ஏற்றிக்கொண்டு வாரந்தோறும் பக்கத்து ஊர்ச்சந்தைக்குச் சென்று விற்றுவருவது வழக்கம்.

ஒரு நாள் பழங்களையெல்லாம் விற்றுவிட்டுத் திரும்புகையில் ஒரு சாமியாரை அவன் சந்தித்தான். அவரைப் பார்த்ததும் கண்ணன் அவர் பாதங்களில்விழுந்து நமஸ்கரித்தான். சாமியார் அவ

னைப்பார்த்து, "இந்தக் கழுதைகளையெல்லாம் எங்கே ஓட்டிச் செல்கிறாய்" என்று கேட்டார். அதற்கு அவன், "சாமி, நான் ஓர் பழ வியாபாரி. பழங்களையெல்லாம் சந்தையில் விற்றுத் திரும்புவதற்கு நேரமாகிவிட்டது" என்று பணிவாக விடையளித்தான்.

அது கேட்ட சாமியார் அவன் மேல் இரக்கங்கொண்டு "வியாபாரியே! என்னோடு வந்தால் உனக்கு ஒரு இரகசியமான இடத்தைக் காண்பிக்கிறேன். அங்கே தங்கம், வெள்ளி, வைரம், மாணிக்கம், மரகதம் முதலிய விலையுயர்ந்த திரவியங்களெல்லாம் குவிந்து கிடக்கின்றது. உனக்கு கழுதைகள் சுமக்கு மட்டும் எடுத்துக்கொண்டு வந்து சுகமாய்க் காலம் கழிக்கலாம். இப்படிப் பழம் விற்றுக் கஷ்டப்பட வேண்டியதில்லை" என்று கூறினார்.

அதைக் கேட்ட கண்ணன் களிப்பு மிகுதியால், "சாமி, உங்களுக்குக் கோடி நமஸ்காரம் செய்கிறேன். இடத்தைக் காட்டுங்கள்" என்று கூறி அவரைப் பல முறையும் கும்பிட்டு விழுந்தான்.

சாமியாரும் அவனும் அருகிலிருந்த ஒரு பெரிய பாறைக்குச் சென்றார்கள். சாமியார் அங்கே போய் நின்றுகொண்டு பாறையைப் பார்த்து ஏதோ மந்திரம் சொன்னார். உடனே அந்தப் பாறையில் ஒரு சிறு வழி ஏற்பட்டது. அது மிகவும் இடுக்கமான வழி. ஒருவர் பின் ஒருவர் தான் செல்ல முடியும். முதலில் சாமியார் நுழைந்தார். அதன்பின் ஒன்றன் பின் ஒன்றாய் 30 கழுதைகளையும் ஓட்டிவிட்டு கண்ணனும் நுழைந்தான். பாறை மறுபடியும் முன் போல் மூடிக்கொண்டது.

அந்தக் குகைக்குள் சென்ற கண்ணன் திரும்பி வர இஷ்டப்படவில்லை. அடே அப்பா! எவ்வளவு திரவியங்கள்!! பொன்னும், மணியும், மலை மலையாய்க் குவிந்து எடுப்பாரற்றுக் கிடந்தன. அங்குள்ள செடி, கொடி, பூ, காய், எல்லாம் தங்கம். கண்ணனுக்குக் கண்கொள்ளாக் காட்சி. ஆச்சரியம் சொல்லி முடியாது. தன் கழுதைகள் மேல் தன்னால் இயன்ற மட்டும் பாரத்தை ஏற்றிக் கொண்டு வெளியில் வந்தான். சாமியாரும் வந்து மறுபடியும் ஏதோ மந்திரங்களைச் சொல்லவே பாறை மூடிக் கொண்டது.

கண்ணன் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட யத்தனித்தான். அப்பொழுது சாமியார் அவனைப் பார்த்து "உனக்கு இவ்வளவு திரவியமும் எதற்காக? என்னிடம் பத்துக் கழுதைகளை அனுப்பக் கூடாதா" என்று கேட்டார். அதற்குத் தான் சம்மதிக்காவிட்டால் ஒரு சமயம் சாமியாருக்குக் கோபம் வந்து

நரையை ஒழியுங்கள்!

இந்த ஆயிலால் தலைநரை ஒழிந்து விடும். வேரிலிருந்தே கூந்தல் கருமை பெறும்; 60-வயது வரை அப்படியே இருக்கும். பலனில்லையேல் 2 மடங்கு கிரயம் வாபீஸ். சொற்ப நரைக்கு ரூபா 3-க்கும், கால்பங்கு நரைக்கு ரூபா 5-க்கும் பாதிக்கு மேலோ அல்லது பூராவுமோ விழுந்தால் ரூபா 9-க்கும் ஆயில் வாங்குக.

கடிதங்கள் ஆங்கிலத்திலேயே எழுதப்படவேண்டும்.

BALA KALA STORES,
P. O. Kansi Simri, (Darbhanga.)

"குப்த மந்திரம்"

ரூபா 100 இனாம்.

லக்ஷம் லக்ஷமாகப் பணத்தைச் செலவழித்துச் சாதிக்க முடியாத காரியங்களை இந்த மந்திரத்தை எழு தடவை ஜபித்துச் சாதிக்கலாம். கஷ்டமெதுவுமில்லை. முன் தயாரிப்பு அவசியமில்லை. யாவரும் உங்களை நேசிப்பார்கள். இது ஓர் 'வசீகரண மந்திரம்' உங்களுக்கு அதிர்ஷ்டமுண்டாகும்; வியாஜ்யத்தில் வெற்றியும், வியாபாரத்தில் லாபமும் அளிக்கும். பலனில்லையென நிரூபிப்பவர்க்கு ரூ 100 இனாம். தபால் செலவு உள்பட ரூ 2-7.

SIDDHA MANTRA ASHRAM
No 33/6, P.O. Katrisarai (Gaya)

சரசமான விலை! பகட்டுக்கு குறைவு இல்லை!

டால்வீசும்

பாமா அவுத்த பையா கல்

SIZE No. 1	நூறுகல்லுக்கு	ரூ. 300
,, ,, 2	நூறு கல்லுக்கு	ரூ. 200
,, ,, 3	நூறு கல்லுக்கு	ரூ. 150
,, ,, 4	நூறு கல்லுக்கு	ரூ. 135
,, ,, 5	நூறு கல்லுக்கு	ரூ. 125
6-லிருந்து 10 வரை	நூறு கல்லுக்கு	ரூ. 115

இந்த பர்மா அவுத்த பையா கல் அசல் வைரங்களுக்கு இரண்டாவதாக ஒப்பிடக்கூடியது. கல் பரிசோதனை செய்யக்கூடியவர்களையும் பிரமிக்கச் செய்யும்படியான அவ்வளவு பளபளப்பும், கலரும், பட்டையும் இதற்கு அமைந்திருக்கிறது.

இந்த ஜாப்தாவில் குறிக்கப்பட்டுள்ள விலைகள் சொற்ப லாபத்துடன் ரொக்கத்திற்கு விற்கப்படும். இந்த அவுத்த பையா கல்லானது மற்ற எல்லா கற்களையும்விட அதிக மேலானதும் குன்றாத ஜோதியும் மாறாத நிறமும் வாய்ந்த உயர்வான ரகங்களாகும். அரத்திற்கும் நெருப்பிற்கும் எண்ணெய்க்கும் திராவகத்திற்கும் திறமான உத்திரவாதம் அளிக்கப்படும். மேலே காண்பிக்கப்பட்டுள்ள அளவுகளை விட பெரிய அளவுகளிலும் கல்லுகள் கிடைக்கும். வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் அனுப்பிவைக்கப்படும்.

பர்மா அவுத்த பையா கல் வியாபாரம்:—மொத்தத்திலும் சில்லரையிலும் விற்கப்படும்.

ஜே. எச். டோரஸ், 313, மங்கமாரி வீதி, இரங்கூன்

எல்லாப் பொருளையும் எடுத்துக் கொள்ளக்கூடும் என்று பயந்த கண்ணன் 'சரி' யென்று ஒப்புக் கொண்டான். அதன்படியே சாமியார் 10 கழுதைகளையும் இவன் 20 கழுதைகளையும் வெவ்வேறு திசைகளில் ஓட்டிச் சென்றார்கள்.

கொஞ்ச தூரம் சென்றதும் கண்ணன் ஏதோ நினைத்துக்கொண்டு தன் கழுதைகளை ஓர் இடத்தில் நிறுத்திவிட்டு சாமியாரிடம் ஓடிவந்து, "சாமி, உலகத்தைத் துறந்த உங்களுக்கு 10 கழுதைகள் நிறையத் திரவியம் எதற்காக வேண்டும்? ஏதோ செலவிற்குவேண்டுமானால் 5 கழுதைகளை ஓட்டிச் செல்லுங்கள். மீதியை என்னிடம் அனுப்பிவிடுங்கள்" என்றான். இவனுடைய ஆசையைக் கண்ட சாமியார் அப்படியே 5 கழுதைகளையும் அவனுக்குக்கொடுத்துவிட்டார். சிறிது நேரம் கழித்து அவன் சாமியாரிடம் வந்து, "சாமி, அந்த 5 கழுதைகள் தான் எதற்காக? உங்களுக்குத் தான் அந்தக் குகை இருக்குமிடம் நன்றாய்த் தெரியுமல்லவா? வேண்டும்போது போய் எடுத்துக் கொள்ளலாமே" என்றான். சாமியார் மீதி 5 கழுதைகளையும் கொடுத்துவிட்டார். வியாபாரி சந்தோஷமாய்த் திரும்பினான்.

திரும்பிய அவனை சாமியார் கூப்பிட்டு, "தம்பி! உனக்கு ஒரு விஷயம் சொல்ல மறந்து விட்டேன். நீ இவ்வளவு கத்திலுள்ள மற்ற அதிசயங்களை யெல்லாம் பார்க்க வேண்டாமா? இதோ என்னிடத்தில் ஒரு மை இருக்கிறது. இதை வீட்டுக்குக் கொண்டுபோய் உன் வலது கண்ணில் கொஞ்சம் தடவினால் உன் கண் முன் உலகத்திலுள்ள அதிசயமனைத்தும் தெரியும். இடது கண்ணில் மாத்திரம் தடவக்கூடாது. தடவினால் கண் இரண்டும் குருடாகிவிடும்" என்று எச்சரித்து ஒரு சிறிய சிமிழைக் கொடுத்தார்.

வீட்டிற்குச் சென்ற கண்ணன் மூட்டைகளையெல்லாம் ஒருவருக்கும் தெரியாமல் இறக்கி வைத்துவிட்டு தன்மனைவியை அழைத்து அவன் கொண்டுவந்த பொருளையெல்லாம் காண்பித்தான். அதன் பின் அவன் அவளுக்கு ஏதோ ஓர் அதிசயத்தைக் காட்டப்போவதாகக்கூறி, சாமியார் கொடுத்த அந்தச் சிமிழை எடுத்து அவள் வலது கண்ணிலும் தன் வலது கண்ணிலும் சிறிது மையைத் தடவினான்.

என்ன ஆச்சரியம்! அவர்கள் இருவரும், தங்கள் முன் உலகத்திலுள்ள எல்லாக் கண்டங்களையும், அதன் பெரிய நகரங்களையும் கண்டார்கள். ஆனந்தம் சொல்ல முடியாது. இருவரும் குதித்தார்கள். கண்ணன் நன்றாய் ஆலோசித்தான். "ஒரு கண்ணில் தடவினாலே இவ்வளவு ஆனந்தமாயிருக்கிறதே! இரண்டு கண்களிலும் தடவினால் எப்படி இருக்காது? அந்தச் சாமியார் நம்மை ஏமாற்றுவதற்காகவே இடது கண்ணில் தடவ வேண்டாம் என்று கூறியிருக்கிறார். ஒரு சமயம் இடது கண்ணில் தடவினால் அந்தக் குகை இருக்கிற இடம் நமக்குத் தெரிந்தாலும் தெரியலாம். அப்படித் தெரிந்தால் இன்னும் எத்தனை தடவை வேண்டுமானாலும் போய் பொருள்களை மூட்டை கட்டிக்கொண்டு வரலாம்" என்று நினைத்தான்.

உடனே தன் இடது

அதி அற்புத அழகு

சுகாதாரம் மிகுந்த

டில்பஹார் ஸோப்பு

(ரிஜிஸ்டர்ட்)

மூன்று கட்டிகளின் விலை

ஒரு ரூபாய் தான்

(தபால் செலவு தனி)

டில்பஹார் ஸோப்பு சிறந்தசுத்திகரிப்பைத் தரும் கிருமி நாசினி. சரும எரிச்சல் அல்லது அரிப்பை அகற்றிச் சருமத்தைப் பாதுகாக்கும் அழகை விருத்திசெய்யும்.

உங்கள் சருமத்தைப் பாதுகாருங்கள்!

ஆட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும், இதர பெண்களும் காமினியா ஸ்னோ வின் சருமப் பாதுகாப்பையும், போஷாக்கையும் பெரிதும் பாராட்டுகிறார்கள். சருமத்திற்குப் புத்துயிரும், உல்லாசமுமளிப்பது. சருமச் சுருக்கங்கள் முதலியவற்றை நீக்குவதில் சிறந்ததென சிபார்சு பெற்றது. விலை புட்டி 1-க்கு 10 அணா. தபால் செலவு தனி. தபால் செலவுக்காக 1 அணா ஸ்டாம்பனுப்புவோருக்கு சாம்பிள் இலவசம்.

சோல் ஏஜண்ட் :—

The Anglo Indian Drug & Chemical Co

285, Jumma Musjid, BOMBAY 2

ஸ்டாக்கிஸ்டுகள் : ஜே. எஸ். சேட் & கம்பெனி, 68, பைக்ராப்ட்ஸ் ரோட், — திருவல்லிக்கேணி.

ஐயோ! பாவம்!! கண் இரண்டும் பொட்டையாகிவிட்டது. எரிச்சல் எடுக்க

ஆரம்பித்துவிட்டது. கடவுளே, கடவுளே என்று கத்தினான். புரண்டான். 'ஹோ'வெனக் கூக்குரலிட்டு அழுதான். தலையில் அடித்துக்கொண்டான். என்ன பயன்?

அளவுக்கு மீறிய ஆசையால் பெரியவர் சொல்லையும் கேளாது நட

வெண்குஷ்டம், பெரு வியாதி

இம்மருந்தை உபயோகித்தால் இவ்விரு வியாதிகளும் ஒழியும். ஹக்கீம்கள், வைத்தியர்கள், கவிராஜர்களின் வைத்தியத்தில் பலனேற்படாமல் போயிருந்தால்கூட இதை உபயோகியுங்கள். பலனில்லையேல் ரூபா 500 இனாம். விலை ரூபா 2.

Vaidyaraj Akhil Kishore Ram,
(No. 32/5, P. O. Katrisarai Gaya)

வருஷப்பலன்

மாதவாரி ஒருவருஷப்பலன் எழுத ரூ. 3. வாராந்திர பலன் எழுத ரூ. 10. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1. வி. பி. செலவு 5 அணா. ஜாதக விவரம் அல்லது கடிதம் எழுதும் போதுள்ள நேரம், சுமார் வயது, பெயர் தேவை.

ஹனுமான் ஜோதிஷ ஆஸ்ரமம், திருத்தணி, S. இந்தியா

எவ்வளவு பொருள் இருந்தும் என்ன பயன்?

இதையறிந்த கள்வர்கள் ஒருநாள் இரவு அவன் வீட்டில் நுழைந்துவிட்டார்கள். அவன் மனைவியையும் நன்றாய் உதைத்து எல்லாபொருள்களையும் எடுத்துச் சென்று

ஷாஜஹானின் மயிலாஸனம்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்பதன்று. அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு போகவேண்டு மென்பதேயாகும். முகம்மதுஷா மிக்க பலவீனமான நிலைமையிலிருந்தமையால், நாதிர்ஷாவை யெதிர்த்துப் போராடுவதற்குத் தன்னால் இயலாதென்பதை யுணர்ந்து பெருந்தொகைகளையும் திரவியங்களையும் அளித்து அவனை வந்த வழியே திருப்பியனுப்பிவிடுவது மேலானதாகக் கருதினன். இச்செய்தி நாதிர்ஷாவிற்கு அறிவிக்கப்பட்டதும் அவனுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தவாருயிற்று. அவன் மிக்க சந்தோஷத்துடன் டில்லிக்குப் பயணமாகினன். மகம்மதுஷாவின் அரண்மனையில் நாதிர்ஷாவுக்கு மகத்தான ராஜோபசாரம் நடந்தது. விருந்தும் கேளிக்கையுமாக நாதிர்ஷா முகலாயர்களின் அரண்மனையைத் தமது வாசஸ்தானமாகக் கொண்டு மகிழ்ச்சியுற்றிருக்கையில், நாதிர்ஷா திடீரென்று கொலை செய்யப்பட்டு விட்டதாக ஓர் வதந்தி எவ்வாருகவோ நகரில் பரவியது. அதைச் செவியுற்ற முகலாயப் பிரஜைகள் நாதிர்ஷாவின் படையாட்களுக்கு விரோதமாக யெழும்பி அவர்களில் பலரைக் கொன்று போட்டனர். மறுநாள் நாதிர்ஷா இச்சம்பவத்தைக் குறித்து அறியவந்ததும் அவன் ஆத்திரமும், கோபமும் மிகுதியுங்கொண்டு, அரண்மனையினின்றும் வெளியேறி, நகர்முழுவதையும் ஆண் பெண், சிசு என்று பாராமல் படுகொலை புரிந்தும் சூரையாடியும் பழிக்குப்பழி வாங்குமாறு தனது ஆட்களுக்குப் பயங்கரமானதோர் உத்திரவைப் பிறப்பித்தனன்.

அவ்வளவில் நாதிர்ஷாவின் போர்வீரர்கள் ஈவிரக்கமின்றித் தம் கண்ணெதிர்ப் பட்டவர் அனைவரையும் படுகொலை புரியத் தொடங்கினர். ஆயிரக்கணக்கானவர் இவ்வாறு கத்திக்கு இரையாயினர். டெல்லியில் இரத்த ஆறு பெருக்கெடுத்தோடியது. தெருவெல்லாம் பிணங்களை காட்சியளித்தன. மர்களின் கூக்குரலும் பிரலாபமும் வானத்தையளாவின. பயங்கரமான இப்படுகொலையை நிறுத்துவதற்கு முடிவில் நாதிர்ஷா ஒருவாறு இணங்கினனெனினும் பலநாட்கள் வரையில் டெல்லியையும் அதன் சுற்றுப்புறங்களையும் சூரையாடும் வேலை தங்குதடையின்றி நடைபெற்ற வண்ணமாகவே யிருந்தது. அரண்மனைப் பொக்கிஷமனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டது. இவ்வாறு சூரையாடப்பட்ட அரிய பொருள்களில் மயிலாஸனமும் ஒன்ருகும். இக்கொள்ளையின் பயனுக நாதிர்ஷாவிற்கு எவ்வளவு திரவியம் கிடைத்ததென்று கணக்கிட்டுக் கூற இயலாது. அவனுடைய படையாட்கள் ஒருவர் பாக்கியிராமல் மூன்று மாதச் சம்பளம் தமக்குச் சன்மானமாகப் பெற்றனர். பாரஸீக ராஜ்ய முழுவதும் ஒரு வருஷ காலம் வரிசெலுத்த வேண்டியதில்லையென்று நாதிர்ஷா உத்தரவிட்டான்.

மயிலாஸனத்தின் வெளியேற்றம்

மேற்கூறிய வரலாறு ஓர்புறமிருக்க தௌஹார்—இ—ஸப்ஷான் என்னும் நூலில் முகம்மதுஷாவே தமது நட்புரிமையின் அறிகுறியாக மயிலாசனத்தை நாதிர்ஷாவிற்கு அளித்ததாகவும், வெற்றிமாலை சூடிய நாதிர்ஷா அதனைத்தனது நாட்டிற்கு ஆடம்பரத்துடன் எடுத்துச் சென்றதாகவும் அறிவிக்கிறது.

இவ்விரண்டு வரலாறுகளின் உண்மை எவ்வாருக யிருப்பினும் லக்ஷக்கணக்கான ரூபாய் செலவிட்டு ஷாஜஹான் அவ்வளவு சிரமப்பட்டுத் தயாரித்த மயிலாஸனம் பாரத நாட்டினின்றும் வெளியேறியதென்பதை மறுப்பார் ஒருவருமிலர்.

முரண்படும் விருத்தாந்தங்கள்

எட்டு வருஷங்களுக்கப்பால் நாதிர்ஷா வடகிழக்குப் பர்ஸீகத்தில் கச்சான் என்னுமிடத்தில் முகாம் செய்துகொண்டிருக்கையில், அவனது கூடாரத்திலேயே பயங்கரமான முறையில் கொலையுண்டான். உடனே குர்து வகுப்பைச் சேர்ந்தவர்கள் அவனுடைய கூடாரத்தையும் பொக்கிஷத்தையும் தமது முறைக்குக் கொள்ளையிடத் தயங்கவில்லை. அதனிடையே மயிலாஸனமும் அவர்கள் கைகளில் சிக்கியதாகக் கூறப்படுகிறது.

மயிலாஸனத்திற்கு அதற்குப் பிறகு நேர்ந்த கதியைப்பற்றி நமக்குத் தெளிவாக ஒன்றும் புலப்படவில்லை. ஐரோப்பியர்களில் பலர் பாரஸீக அரசர்களின் அரண்மனையில் அதைத் தாம் கண்டதாகக் கூறியிருக்கிருர்களாயினும், அது உண்மையில் முகலாயர்களுடைய பிரசித்திபெற்ற மயிலாஸனம் தானு என்று சந்தேகமறருசுப்பிக்கக் கூடியதாக இல்லை. பர்ஸியாவின் தலைநகரான டெஹரானில் மந்த்ராலோசனை மண்டபத்தை மயிலுருவத்தையொத்ததோர் ஸிம்ஹாஸனம் அலங்கரித்தது வாஸ்தவமே. ஆனல் அது நாதிர்ஷாவினுலே டெல்லியினின்றும் கொண்டுவரப்பட்டதுதானு என்பதைக் குறித்துஇரு விதமான அபிப்பிராயங்கள் வழங்கி வருகின்றன. ஜார்ஜ கர்ஸான் என்ற பார்லிமெண்ட் மெம்பர் தான் அதை நேரில் பார்த்திருப்பதாகவும் அதைக் குறித்து தமக்கு யாதொரு சந்தேகமுமில்லை யென்றும் உரைக்கிருர்.

அதற்கு மாருகப் பாரஸீக ராஜ்யத்தின் அன்னிய நாட்டு மந்திரியாகப் பதவியேற்றிருந்த மற்றொருவரோவெனில் டெஹரானில்இப்பொழுதுகண் காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கும் சிம்மாதனம் பத். அலி என்பவர் காலத்தில் நூதனமாகச் செய்யப்பட்டதென்றும்“தாவுஸ்—கானும்”என்ற “மயிலாசி”யை மணம் செய்து கொண்டதன் ஞாபகார்த்தமாக அவர் அதைச் செய்தாரென்றும், ஆனல், அரண்மனையிலேயே மிகப் தொன்மையான வேறொரு சிம்மாதனம் இருப்பதாகவும் குர்துக்களால் சின்னபின்னம் செய்யப்பட்ட மயிலாசனத்தின் பற்பல பாகங்களையும் ஒன்று சேர்த்து ஆகா முகம்மதுஷா என்னும் பாரஸீக அரசர் அதை சீர்திருத்திப் புதுப்பித்திருப்பதாகவும் அதுவே ஆதி ஷாஜஹானின் மயிலாஸனம் என்றும் கூறியுள்ளார்.

பின்சொன்ன வரலாற்றையொப்புக் கொள்வதாயின், இரண்டொரு சந்தேகங்களுக்குப் பதிலளியாமலிருக்க முடியாது. நாதிர்ஷா தனது படுக்கையில் கொலையுண்டு, அவனது முகாம் கொள்ளையடிக்கப்பட்டபோதுமயிலாஸனம் முரட்டுக் குர்து வகுப்பினர்களிடம் சிக்கி, அவர்களுக்குள்ளாகத் துண்டாடிப் பங்கிட்டுக் கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டதல்லவா? மயிலாஸனத்தைப் போன்ற அவ்வளவு அருமையானதும் விலையுயர்ந்ததுமான ஓர் வஸ்துவை நாதிர்ஷா தான் போகுமிடமெல்லாம் தன்னுடைய இதர கட்டுமுட்டுச் சாமான்களைப்போல் எடுத்துச் சென்றிருக்கக் கூடுமென்பது நம்பக்கூடியதா? அப்படியிருப்பினும் ஆகா முகம்மதுஷா எந்தவிதத்தில் சிதறுண்டு கிடந்த அதன் பற்பல பாகங்களையும் திருப்பவும் ஒன்று சேர்ப்பது சாத்யமாயிற்று? முகலாயர்களின் நாட்களில் உலகப் பிராபல்யத்தையதற்குத் தேடிக் கொடுப்பதற்குக் காரணமாகவிருந்த மயிலாஸனத்திற்கு நேர்ந்த கதியைப்பற்றி நினைக்குங்கால் இந்தியாவின் உண்மைப் புதல்வர்கள் ஒரு சொட்டுக் கண்ணீராயினும் வடிக்காமலிருக்கமுடியாது

ரூ. 100 இனும்

(மாந்திரீக மோதிரம்)

காதல் விஷயங்களில் வெற்றியைத் தரும். பரீக்ஷையில் தேர்ச்சி உண்டாகும், உத்தியோகம், புத்திர பாக்கியம், செல்வம் முதலியவைகளைத் தரும். வியாஜ்ஜியங்களில் வெற்றி, வியாதிகள் நீங்கும். அதிர்ஷ்டம் உண்டாகும். இதை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். விலை ரூ. 2.

BENGAL MESMERISM HOUSE,
(S. M.)Panchpota, BENGAL.

கொசு வலைகள்.



பிரத்யேக வலுவான வெள்ளை வலைகளாலானவை. நல்ல தையல். நீடித்துழைப்பவை. வெளுத்த பச்சை, நீலம், சிகப்பு, மஞ்சள் முதலிய பல கலர்களிலும் கிடைக்கும். வெள்ளையா கலரா என்பதைக் குறித்தெழுக.

நீளம்	அகலம்	உயரம்	சாதா	உயர்ந்தது	மேலனது
அடி	அடி	அடி	ரூ.	ரூ.	ரூ.
6	3½	3½	1-4	1-8	2-4
6	4	4	1-8	1-12	2-6
6½	4½	4½	1-12	2-4	2-12
7	5	5	2-4	2-12	3-4
7½	6	6	2-12	3-4	4-4

தபால் செலவு தனி. பாக்கிங் இலவசம். இலவசம் ஏககாலத்தில் மூன்று வலைகள் வாங்குவோருக்கு 6X4X4 வலை ஒன்று இலவசம்.

Bally Mosquito Net Factory,
P. O. Bally Dist. HOWRAH.

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. 1 வருஷ மாதவாரிப் பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

நஞ்சன்கூடு சத்தியவைத்தியசாலை
ஐடிஎல் மகரத்வஜம் I.D.L.
ஆரோக்ய சஞ்சீவி
புதுப்பேட்டை கன்ஸான் பஜார் தெரு, மதராஸ்

(ஒவ்வொரு சிரமத்திலும் ஸ்டாக்கிஸ்டு தேவை.)

அதிசயம் ஆனால் உண்மை

பண்டைக்காலத்துப் பள்ளிக்கூடங்கள்

(டாக்டர் உ. வே. சாமிநாதையர்)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

17. சுவடிகள்.

பிள்ளைகள் தங்கள் சுவடிகளை மிகவும் நன்ருக வைத்திருப்பார்கள். இளம் பிள்ளைகளுக்கு உபாத்தியாயர் ஓலையை வாரி ஒழுங்காக நறுக்கித் துளையிட்டுக் கயிறு கோத்துத் தருவார். ஒரு துளையிடுவதும் இரண்டு துளையிடுவதும் உண்டு. பனையேடு, சீதாளபத்திரம் முதலியவற்றில் எழுதுவது பழைய வழக்கம். அந்தக் காலத்துச் சுவடிகள் பல நூறு வருஷங்களாகியும் அழியாமல் இருந்தன. சுவடிகளின் மேலே டுகளில் பலவகையான சித்திரங்களை எழுதுவார்கள். மேலே சட்டமாகப் பனமட்டையின் காம்பை நறுக்கிச் செப்பஞ் செய்து கோப்பார்கள்; மரச் சட்டங்களையும் அமைப்பார்கள். செப்புத் தகட்டாலும் சட்டஞ்செய்து கோப்பார்கள். அந்தச் சட்டங்களின்மேல் வர்ண மையினுற் பலவகையான சித்திரங்கள் எழுதுவதுண்டு. இரட்டைத் துளையுள்ள ஏடுகளில் ஒரு துளையில் செப்புக்கம்பி அல்லது மூங்கிற் குச்சியைச் செருகிக் கட்டுவார்கள். அதற்கு நாராசமென்று பெயர்.

சில சுவடிகளின் உருவங்கள் விசித்திரமாக இருக்கும். உருண்டைக் கழிபோலச் சில சுவடிகள் இருக்கும்; சிவலிங்கத்தைப் போன்ற சில சுவடிகளை நான் பார்த்திருக்கிறேன்.

X பழக்கத்திலுள்ள சுவடிகளை அடிக்கடி கவனிப்பதோடு, தாங்கள் படித்த எல்லாச்

யன்று மாணுக்கர்கள் நன்ருகக் கட்டி ஒழுங்குபடுத்துவது வழக்கம். பலவகையான தொழில்களில் ஈடுபட்டவர்களும் வருஷத்திற்கு ஒருநாளேனும் தம்முடைய வீட்டிலுள்ள புத்தகங்களை எடுத்து ஒழுங்காகக்கட்டி பாதுகாத்து வந்தார்கள். நாம் நம்முடைய புஸ்தகங்களை அடிக்கடி 'பைண்டு' செய்கிருேமல்லவா? அதைப் போல அவர்கள் ஏடுகளுக்குப் புதுச் சட்டம், கயிறு முதலியன போடுவார்கள்; மிகப் பழையதாய்விட்டால் புதிதாகப் பிரதி பண்ணிவைப்பார்கள்; புதிதாக மையிடுவார்கள். இதனுல் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள புஸ்தகங்கள் பழுது படாமல் நல்ல நிலையிலேயே இருந்துவந்தன. அப்படிப் பிரதி பண்ணிய பின்னரே பழைய ஏடுகள் சிதிலமாக இருந்தால் அவற்றைச் சிலர் நெய்யிலே தோய்த்து விதிப்படி அக்கினியில் ஹோமம் செய்துவிடுவார்கள்; பதினெட்டாம் பெருக்கிற் சிலர் ஆற்றில் விட்டுவிடுவார்கள். பிரதி பண்ணி வைத்துக்கொண்டு, பிறகே பழைய ஏடுகளை ஹோமம் பண்ணும் இந்த வழக்கம் முதலியன மாறி நம்முடைய துரதிர்ஷ்ட வசத்தால் எல்லாச் சுவடிகளையும் ஆற்றில் விடும் நிலை பிற்காலத்தில் வந்துவிட்டது.

18. எழுத்தாணிகள்

ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணிகளுள் பல பேதங்கள் உண்டு. எழுத்தாணியை ஊசியென்றும் கூறுவதுண்டு.

தாணி, குண்டெழுத்தாணி என்பன எழுத்தாணியின் வகைகள். ஒரு பக்கம் ஓலைகளை வாருதற்குக் கத்தியும் மறுபக்கம் எழுதுவதற்கு எழுத்தாணியும் அமைந்ததைப் பார்த்தே பேனுக்கத்தியென்றபெயர் வந்ததென்று தோற்றுகிறது.

19. ஏடெழுதும் வழக்கம்

ஏட்டில் ஒரு பக்கத்தில் மிக நுண்ணிய எழுத்துக்களாக இருபது முப்பது வரிவரையில் எழுதுதற்குரிய மெல்லிய எழுத்தாணிகள் இருந்தன; சில ஏடுகளில் வரிகள் அதிகப்பட்டும் இருக்கும். எழுதுபவர்கள் எழுத்தாணியை வலக் கையாற் பிடித்துக்கொண்டு இடக்கையால் ஏட்டைப் பிடித்திருப்பார்கள். எழுதும்பொழுது இடக்கைப் பெருவிரல் நகத்திற் சிறிதளவு பள்ளஞ் செய்து அந்த இடத்தில் எழுத்தாணியைச் சார்த்திக் கொண்டு எழுதுவார்கள். நாம் இக்காலத்தில் காகிதத்தில் எழுதுவதைப்போன்ற வேகத்தோடே ஏட்டில் எழுதுவார்கள். ஏட்டில் எழுதும் வழக்கம் நம் நாட்டில் இப்பொழுது அரிதாகக் காணப்படுகிறது; சில தனவணிகர்கள் கடையில் மட்டும் இருந்துவருகிறது.

20. தூக்குப் பலகை

சுவடிகளை வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கும் உபயோகப்படும் கருவிக்குத் தூக்கு என்று பெயர். தூக்குத் தூக்கியென்ற நாடகத்தில் வரும் அரசகுமாரன் சுவடித் தூக்குக்களைத் தூக்கியதால்



சமீபத்தில் திண்டுக்கல்லில் நடந்த ஸ்ரீ அபிராமி அம்பாள் முத்துப்பல்லக்கு உத்ஸவம்

வெற்றி கிட்டியது

என மிஸ்டர்............22-6-36உ பம்பாயிலிருந்து எழுதுகிருர்.

"தங்கள் "திபேத் மூலிகை" யால் தான் நான் மெட்ரிக் பரீக்ஷையில் தேறினேன்."

"திபேத் மூலிகை"யால் கீழ்க் கண்டவை சித்தியாகின்றன; லாமா யோகியின் வரப்பிரசாதம்.

வசீகரன். ஆண் பெண் இரு பாலருக்கும் இடையில் துன்பமயமான காதலை உடனே விளைவிக்கும். இதை அணிபவர் அதன் ஆச்சரிய சக்தியை விரைவில் அறிவர். விலை ரூபா 3-8-0

2. வியாபாரமும், தொழிலும்:— நிச்சயமான. தொழிலபிவிருத்தியும், இலாபமும்சித்திக்கும். விலைரூ.3-8-0

3. வியாஜ்யங்கள்:—இதன் சக்தியால் நம்பமுடியாத எவ்விதவியாஜ்யங்களும் ஜெயமாகும். விலை ரூ. 3-8-0

4. வியாதிகள்:— முடியாதெனக் கைவிடப்பட்ட சகலவித கொடிய ரோகங்களும் அடியோடு நீங்கும். விலை ரூபா 3-8-0

5. உத்தியோகம்:—வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப்படும் இளைஞருக்கு அவரவர் ஸ்திதிக்குத் தகுந்தபடி உத்தியோகம் கிடைக்கும். சம்பள உயர்வும் உத்தியோக மேன்மையும் நிச்சயம். விலை ரூ. 3-8-0

6. பரீக்ஷைகள்:- எவ்விதப் பரீக்ஷைகளிலும் நிச்சயமாய்த் தேறலாம். விலை ரூபா 3-8-0

7. சத்ருக்களை ஜெயித்தல்:—எவ்வளவு அபாயகரமான விரோதிகளும் இதை அணிபவர் முன், முழந்தாளிட்டுப் பணிவர். விலை ரூபா 3-8-0

8. கிரஹ தோஷம்:-எல்லாவிதமான கிரஹ தோஷங்களும் சாந்தியாகும். விலை ரூபா 3-8-0

9. ஆரோக்யமும், செல்வமும்:—எளிதில் சித்திக்கும். விலை ரூ. 3-8-0

அறிவிப்பு:—இந்த சாஸ்திரங்களில் நம்பிக்கை உள்ளவர்கள் மாத்திரம் தங்கள் நோக்கம் இன்னதென்பதைக் குறித்து எழுதவும். ஒவ்வொரு நோக்கத்துக்கும் தனிப்பட்டமூலிகை அவசியம். ஒரு மூலிகையின் விலை ரூபா 3-8-0. தபால் சார்ஜு வேறு. ஒரே தடவையில் 3 மூலிகைகள் வாங்கினுல் தபால் சார்ஜ் உள்பட ரூ. 9-6-0.

BIJOYA LODGE, (S.M.W.)
P. O. SALKIA HOWRAH.

ஜோதிஷப் பலன்

ஒரு தசைக்கு மாதவாரிப் பலன் ரூ 3. அந்தர பலன் ரூ 6. ஆயுள் கணிதம் ரூ 3½ உத்தியோக பாவம் ரூ 1½. வீ. பி. செலவு தனி. ஜாதகநகலும் பிறந்த ஊரும் தேவை. தர்ம நியாயமான 5 கேள்விகளுக்கு ரூ. 1¼

வை. பிச்சு சாஸ்திரியார்
ஜோதிஷ கணிதர்
மகநகைகுளத் தெரு,
வைதீஸ்வரன் கோவில்.

சிவாஜி ஸ்டோர்ஸ்
12, அவனுசி ரோட்
கோயமுத்தூர்

ஜம்புலிங்கத்தின்

திருவிளையாடல்கள்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

டிருந்தார். இன்ஸ்பெக்டர் அவரது முகத்தையே கூர்ந்து நோக்கிக் கொண்டிருப்பதால், டெபுடி கமிஷனரின் முகத்தில். புன்முறுவல் தோன்றினால் இவர் மனம் சற்று நிம்மதி யடைகிறது. எதையாவது கண்டு முகம் சற்றே கடுத்தால், இவரது மனம் பதறுகிறது. இப்படியாக இரண்டொரு நிமிடங்கள் கழிந்தன.

டெ. கமி:—ஹூம்—பழைய கதைதான்.—நான் நினைத்தது சரிபாகப் போய்விட்டதே! நீங்கள் என்னதான் செய்கிறீர்களோ தெரியவில்லையே! உம்?

இன்ஸ்பெக்டரின் . மனம் திடுக்கிட்டது. என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. பதில் சொல்லாமலும் இருக்கக் கூடாது. தட்டுத் தடுமாறிக் கொண்டே மெதுவாய்,

"எஜமானனுக்குத் தெரியாதது—எங்களால் செய்யக் கூடியதையெல்லாம் செய்து கொண்டுதானிருக்கிறோம். ரிப்போர்ட்டில் கண்டிருக்கிறபடி எவ்வளவோ முயன்று பார்த்தும் ஒன்றும்—" என்று இழுத்தார்.

டெ. கமி:—என்ன பிரமாதமாகச் செய்துவிட்டீர்கள்? அந்தக் கட்டை எடுத்துக் குற்றத்தின் விவரங்களை நான் கேட்கப்படியும்.

இன்ஸ்பெக்டர் அவர் காண்பித்த கட்டை, பீரோவினின்றும் எடுத்துவந்து பிரித்துப் படிக்கலானார்:

"சென்ற ஏப்ரல் மாதம் 6-ந் தேதி,

டெ-கமி:—அதாவது சுமார் ஒரு மாதத்துக்கு முன்பு—உம்.

இன்ஸ்:—அன்றைய தினம், இரவில் சுமார் பன்னிரண்டு மணிக்கு, . சௌகார்பேட்டை துளஸிங்கம் முதலி சந்தில் உள்ள 16-ம் நெம்பர் வீட்டில் அகர் சந்து குலாப்சந்து, கைகால்களெல்லாம் கட்டப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டார். அதற்குமுன் அவரிடம் அவ்வளவு பொருள் இருந்தது ஒருவருக்கும் தெரியாது. அவரைச் சாதாரணமாக எண்ணியிருந்தார்கள். அக்கம்பக்கத்தில் விசாரித்ததில், அவருக்கு விரோதிகள் ஒருவரும் இருந்ததாகத் தெரியவில்லை. மோசடியாகக் கொடுத்த தொகையைப்போல இரண்டத்தனைக்குப் புரோநோட்டு எழுதி வாங்கி அநேக ஏழைக் குடிகளைச் சீர்கெடுத்திருப்பதாய் வதந்தி.

டெ. கமி:—சரி! மேலே!

இன்ஸ்:—ஒரு வாரத்திற்குப் பிறகு, ஏப்ரல் மாதம் 13-ந் [illegible] யில், சாராயக்கடை கந்தசாமி கொள்ளையடிக்கப்பட்டான். (இவன் மீது) திருட்டு நகைகளை வாங்குகிறான் என்ற புகார் வந்ததின்மேல் மோகூலிருந்து வந்தோம். அன்றைய இரவுகூட, ஏதோ ஒரு திருட்டு நகை—மிகவும் விலை உயர்ந்தது—வரப் போகிறதென்று கேள்விப்பட்டு, அவனுடைய வீட்டின்மீது கண் வைத்திருந்தோம். எப்படியோ பேர்வழி உள்ளே நுழைந்து கைகால்களைக் கட்டி ஒரு மூலையில் உருட்டிவிட்டு, இரும்புப் பெட்டியைக் காலி செய்துவிட்டுப் போய்விட்டான்.

டெ. கமி:—நீங்கள் அவ்வளவு உஷாராயிருந்திருக்கிறீர்கள்; வெட்கக்கேடு; மேலே படியும்.

இன்ஸ்:—இருபதாந்தேதி—

டெ. கமி:—இருபதாந் தேதியா? சரியாக ஒரு வாரத்திற்குப் பிறகு! வாரம் தவறாமல் நடத்தி வந்திருக்கிறான்!

இன்ஸ்:—சைனாபஜார் ரோட்டில் நகை வியாபாரம் குமாரசாமி செட்டியார் கடை கொள்ளை யடிக்கப்பட்டது! இவர் மட்ட சரக்குகளைக் கொடுத்து ஏமாற்றுவதாக வதந்தி.

டெ. கமி:—சரி! சரி! அதில் ஒன்றும் குறைச்சலில்லை. பேர்வழி, மோச வழிகளில் ஈடுபட்ட ஆசாமிகளைப் பொறுக்கி எடுத்திருக்கிறான். வயிற்றுப் பிழைப்பிற்குத் திருடுவதாயிருந்தால், ஆசாமிகளைப் பைசல் செய்தே விடுவார்கள். இவன், ஆட்களுக்கு ஒரு கெடுதியும் செய்ததாகத் தெரியவில்லை! எல்லாம் ஆச்சரியமாகவேயிருக்கிறது. இந்த ஜம்புலிங்கம் இன்ன அடையாளங்களுள்ளவன் என்று யாருக்காவது தெரியுமா?

இன்ஸ்:—அவனுடைய உண்மைத் தோற்றத்தை ஒருவராவது கண்டது கிடையாது. பலர் பலவிதமாய்ச் சொல்லிக் கொள்கிறார்கள்.

டெ. கமி:—இன்ஸ்பெக்டர்! சற்று கவனியும். இனி இம்மாதிரித் தூங்கிக்கொண்டிருப்பதில் பிரயோஜனம்ஒன்றுமில்லை. தெரிந்ததா? நீர் என்ன செய்வீரோ, எப்படிச் செய்வீரோ எனக்குத் தெரியாது. இதுவரை இந்தக் கேஸில் பிரத்யேகமாக நீர் உழைத்து வந்திருக்கிறீர். அவனைப்பற்றிய ஒரு தகவலைக்கூட நீர் அறிந்து கொள்ளக்கூடவில்லை என்பதை நினைக்க, எனக்கு இன்னது சொல்வதென்று விளங்கவில்லை. சமீபத்தில் கவுன்ஸில் கூடப்

தழும்பின்றி ரணம் ஆற்றுவது

கத்தி வெட்டுகள், சிராய்ப்புகள், புண்கள் முதலியவற்றிற்கான நேர்த்தி மிகுந்த மெழுகு.

எந்தப் புண், ரணம், அல்லது காயத்தின் மீதாவது ஜாம்-பெக் மூலிகை மெழுகைத் தடவினால் வலி மறைந்து, குணம் ஆரம்பிக்கிறது. ஜாம்-பெக் விஷக் கிருமிகளை அழிக்கிறது. விரைவில் தழும்பின்றி ரணமாற்றுவது. நமைச்சல், வண்ணாரபபுண், சொறி, சிரங்கு, வேர்க்கூர் முதலியவற்றிற்கு உபயோகியுங்கள். ஜாம்-பெக் பெட்டி 1-க்கு ரூ. 1 அல்லது ரூ. 2-4 வீதம் கிடைக்கும்.

ஏஜண்டுகள் : மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

மிருகக் கொழுப்பற்றது.

ஜாம்பெக்
Zam Buk

நீரிழிவு, மதுமேகம்

முதலிய சகல நீர் ரோகங்களுக்கு

பண்டிட் ஸ்வாமி ஸ்ரீநிவாஸய்யங்காரின்

மயூரகாய கற்பம்

ஒரு தெய்வீக சஞ்சீவி ! !

இதுவரை இதன் நன்மையைப் பிரபுக்கள் மட்டுமே பெற்று வந்தனர். இப்போது சகல ஜனங்களும் பயன்பெறவேண்டி 20 டோஸ் கொண்ட பொட்டணம் ரூ. 15-8-0 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 10 நாளைக்கு வரும். அதற்குள் கண்கூடாகக் குணங்காணும். பிரபல இங்கிலீஷ் டாக்டர்களுடையவும், குணமடைந்த பலருடையவும் உயர்ந்த உண்மை அபிப்பிராயங்கள் கொண்ட இலவசப் புத்தகத்திற்கு

இன்றே எழுதுங்கள்.

ஸ்கந்தாசிரமம்

தபால் பெட்டி, 759 : : எழும்பூர், மதராஸ்

ஸ்தாபிதம் 1910.

ரூபா 800 மதிக்கக்கூடிய ரோல்டு கோல்டு தங்க ஒட்டியாணங்கள்



கைதேர்ந்தவர்களால் தயார் செய்தது. 300 கஜ்ஜை கட்டி அசல் சவரன் பொன்னுக் கொப்பானது. 5 வருஷம் நிறம் மாறாமல் பொன்னிறமாகவேயிருக்கும். பெரியோர் முதல் சிறுவர் வரையில் அணிந்துகொள்ளலாம்; 5 வருஷம் காரண்டி. ஜாலர் ஒட்டியாணம் சிறிய சைஸ் ரூ. 5-8-0; பெரியது ரூ. 6-8-0; சாதா கெஜ்ஜை வங்கி ஒட்டியாணம் சிறியது ரூ. 2-8-0; நடுத்தரம் ரூ. 3-8-0; பெரியது ரூ. 5-8-0. தபால் சார்ஜ் வேறு.

கே. நாதமுனி அண்டு சன்ஸ்,

168, சைனாபஜார் ரோடு, மதராஸ்.

போகிறது. எவனுவது இதைப் பற்றி ஒரு கேள்வியைக் கிளப்பி விட்டால், நமது கவுரவம் என்னவாகும்? நம்முடைய செலவுகளையும், செய்கைகளையும் ஆதரிக்க கனம் ஹோம் மெம்பர் என்ன பதிலளிப்பார்? ஆயிரக் கணக்கில் நாம் செலவு செய்துகொண்டு—

இன்ஸ்:—உத்திரவு கிடைத்தால், நான் வேண்டுமானுல், டிபார்ட்மெண்டிற்குக் கெட்ட பெயர் வாராதபடி என் வேலையை—ராஜிநர்மா—'

டெ. கமி:—என்னங்காணும்! கண்மூடித்தனமாய் உளறுகிறீர். நீர் ராஜிநாமா செய்துவிட்டால் எல்லாம் ஆய்விட்டதோ? நான் அதையா சொல்லுகிறேன்? நான் சொல்வது இன்னதென்று உமக்கு விளங்கவில்லையே! இப்படித்தானே நீர் செய்யும் காரியங்களும் கண்மூடித்தனமாய்- என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே, ஒரு சேவகன், கையில் கடிதத்துடன், உள்ளே வந்து சலாம்செய்து நின்றுன். இன்ஸ்பெக்டர் கடிதத்தை வாங்கி டெபுடி கமிஷனரிடம் கொடுத்தார். சேவகன் வெளியே சென்றுன். கிருஷ்ணசாமி நாயுடு, கடிதத்தைப் பிரித்துப் படிக்கலானுர்:—

பிரியமுள்ள டெபுடி கமிஷனருக்கு,

தங்களுக்கு அறிமுகமில்லாத ஒருவன், இப்படி சிநேக முறையில் எழுதுவதற்குக் கோபித்துக்கொள்ள மாட்டீர்களென்று நினைக்கிறேன். என்னைச் சந்தித்திருப்பதாக உமக்குத் தெரியாவிட்டாலும், நான் உம்மைச் சில மாதங்களாகக் கவனித்து வந்திருக்கிறேனுகையால், தங்களைப்பற்றிய செய்திகளைத் தெரிந்துகொண்டிருக்கிறேன். இப்படித் தைரியமாக நமக்கு எழுதுவது யார் என்று அறிய இதனடியிற் குறிப்பிட்டிருக்கும் பெயரை நீர் ஆவலோடு பார்க்கும்பொழுது, ஆச்சரியமடையமாட்டீரென்று நம்புகிறேன்.

நிற்க, உமக்கு முக்கியமாகச் சொல்லவேண்டிய விஷயம். என்னவென்றுல், என்னுடைய காரியங்களில், நீரும் உம்முடைய சகாக்களும் தலையிடாதிருக்கும்படிக்கே. எங்கே என்னைப பிடித்துக் கொண்டு விடுவீர்களோ என்று உங்கள் சாமர்த்தியத்திற்குப் பயந்து இப்படிச் சொல்வதாய் எண்ணமாட்டீரென்று நினைக்கிறேன். வீண் அவஸ்தைகளுக்கு ஆளாகவேண்டாம் என்றுதன் எழுதுகிறேன். நேற்றிரவு கூட, உங்கள் கையாள் ஒருவன் ஆழந்தெரியாமல் காலிட்டுக்கொண்டான். இது முதல் தடவையாகையாலும், உம்மை எச்சரிக்காமல் ஒன்றும் செய்யக்கூடாதென்ற நியாயத்தையும் எண்ணி, அவனை ஒன்றுஞ் செய்யாமல் விடியும்வரை

வளரும் குழந்தைக்கு அதிகப்படியான — ஊக்கம் அவசியம்

பெரியவர்களைவிட குழந்தைகள் அதிகமாக ஓடி ஆடி விளையாடுகின்றன. ஆதலால் அவர்களது ஊக்கம் அதிகமாகச் செலவழிகிறது! எனவே ஆரோக்கிய வளர்ச்சிக்கு அவர்களுக்கு அதிகப்படியான ஊக்கம் தேவை. குழந்தை சோர்ந்தும் அசந்துமிருப்பதற்குக் காரணம் அவனது ஊக்கம் அதிகமாகச் செலவாகி விடுவதுதான்—இதன் விளைவு—உடல் தளர்ச்சி.

குழந்தைகளின் வளர்ச்சிக்கு அவசியமான அதிக ஊக்கத்தைத்தரும் போஷாக்கு சத்துக்கள் ஹார்லிக்ஸில் இருக்கின்றன. எடுடன் கூடிய அதன் ருசி அவர்களுக்குப் பிடிக்கிறது; காலையிலும் படுக்கைக்குச் செல்லுமுன்பும் தவருமல் சாப்பிட்டால் புதிய வலுவும், ஊக்கமும் ஏற்படும்.

ஹார்லிக்ஸ், மால்ட்டட் பார்லி, கோதுமை இவற்றுடன் பூரா எடுடன் கூடிய பசும்பாலும் சேர்ந்த சிறந்த ஆகாரம். ஸ்டார்ச் இல்லாதது.

ஹார்லிக்ஸ் அசதி அணுகாமல் காப்பது

(H 263)

காலையில் விட்டுவிடும்படிக்கான ஏற்பாட்டைச் செய்தேன். அநேகமாய், இந்நேரம் அங்கு வந்துகொண்டிருப்பான். இவ்வளவு நியாய புத்தி உள்ள நான், ஏன் இப்படிப்பட்ட காரியங்களில் பிரவேசிக்கிறேன் என்று நீர் ஆச்சரியப்படலாம். அதற்குக் காரணம், நீங்கள் அமைத்திருக்கும் சட்டப். அச்சட்டங்கள், சாமர்த்தி குற்றவாளிகளுக்குச் சாதகமாக வியாக்கியானஞ் செய்யத் தாராளமாக இடங்கொடுக்கின்றனவென்பதை, நீர் உம்முடைய நீண்ட அனுபவத்தில் அறிந்துகொண்டிருக்கலாம். உண்மையில் குற்றஞ் செய்தவன் தப்பித்துக்கொள்கிறுன்! ஒரு பாபமுஞ் செய்தறியாத நிரபராதி, 'சந்தர்ப்ப சாக்ஷியம்' என்று ஒன்றுண்டே, அதனைலோ, அல்லது, சாமர்த்திய களை அமர்த்திக்கொள்ளக்கூடாமையினுலோ, குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டுத் தண்டனையடைந்து உழல்கிறுன்! தற்போதுள்ள சட்டங்களின் வரையறைகளுக்குட்படாமல்தப்பித்துக்கொள்ளும் குற்றவாளிகளையும், பெரிய குற்றங்களைச் செய்துவிட்டுச் சட்டங்களின் மூலமாகவே, சாமர்த்திய வாதங்களினுல் தொல்பை தண்டனையின் தப்பி

களையும், அவரவர்கள் செய்த குற்றங்களுக்குத் தகுந்தபடியாக அதிகத் தண்டனையையோ, குறைந்த தண்டனையையோ அனுபவிக்கச் செய்ய வேண்டியபொறுப்பை நானே ஏற்றுக்கொண்டிருக்கிறேன். இந்த, என் நியாயமான தொழில், உமது சட்டதிட்டங்களுக்குப் புறம்பாகவும், அதைப் பின்பற்றி நடக்கும் உங்களுக்கு அநியாயமாகவும் தோன்றும் என்பதை அறிவேன். ஆனால், நடுநிலைமையிலுள்ள எவருக்கும், நான் சொல்வது நியாயம் என்று தோன்றாமல் இருக்க முடியாது. ஆகையால், ஒரு மனிதனைத் தன் நியாயமான கடமையைச் செய்வதினின்றும் தடுக்கப் பிரயத்தனிக்க மாட்டீரென்று நினைக்கிறேன்.

என்னைக்கண்டுபிடித்து, தண்டனைக்குள்ளாக்கத் தவறி, ஒருக்கால், நீர் உம் பதவியை இழக்க நேரிட்டாலும், உமக்குப் பின் அப்பதவியை ஏற்கும் எவரும், உம்மைச் சிக்கிரமாகக் கட்டாயம் பின்பற்றுவர் என்பதைக் கண்டிப்பாய் நம்பி, நீர் சற்று ஆறுதலையடையலாம்.

இப்படிக்கு,
உமது உண்மையுள்ள
ஜம்புலிங்கம்

என்று படித்தார்.

அவருக்குஇன்னதுசெய்வது என்று தோன்றவில்லை. இன்னும் திருட்டுப் பயலைக் கண்டுபிடிக்க முடியவில்லையே என்று இன்ஸ்பெக்டரை மிரட்டிக்கொண்டிருந்த சமயம், தன்னையும்கூடக் கண்டு பிடிக்க முடியாதென்ற பொருள்பட, அந்த ‘அயோக்கியப் பயல்,’ தனக்கே எழுதிய கடிதத்தைக் காண, அவருக்கு அவமானந் தாங்கமுடியவில்லை. உடம்பு முழுதும். வியர்வை ஆறுகப் பெருக்கெடுத்தது. கைகுட்டையால் துடைத்துக் கொண்டே,

“இது வீண் மிரட்டு—முடியவே முடியாது. இன்ஸ்பெக்டர், ஆர்டர்லியைக்கூப்பிடும்.”

ஆர்டர்லி உள்ளே வந்தான்.

டெ. கமி:—இது எப்பொழுது வந்தது?

ஆர்:—இப்பத்தான் எஜமான்.

கிருஷ்ணஸ்வாமி நாயுடு, கடிதத்தின் உறையைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். அதன்மேல் அது எங்கிருந்து வந்தது . என்று தெரிந்துகொள்ளக் கூடிய எவ்வித அடையாளமும் இல்லை.

டெ. கமி:—இது எப்படி வந்தது?

ஆர்:—யாரோ ஒரு ஆள் கொண்டு வந்து கொடுத்துட்டுப் போனானுங்க.

டெ. கமி:—இனிமேல் யார் கடிதங்கொண்டுவந்தாலும், நான் போகலாம் என்று சொல்லுகிற வரையில் அந்த ஆளை நிறுத்தி வை. தெரிந்ததா, போ.

ஆர்டர்லி, சலாம் செய்து வெளியே சென்றான்.

டெ. கமி:—அந்தப் பயலுக்கு எவ்வளவு தைரியம்! [இன்ஸ்பெக்டர் பக்கமாய் தன் கையில் வைத்திருந்த கடிதத்தை நீட்டினார். இன்ஸ்பெக்டர் அக்கடிதத்தை வினயமாய் வாங்கிப் படித்து முடித்தார்.] இந்த வீண் மிரட்டலுக்கெல்லாம்——”

இன்ஸ்:—அப்படி நினைக்கக் கூடாது. அது உண்மையே.

டெ. கமி:—என்னங்காணும் உண்மை?

இன்ஸ்:—அவ்விதம் கோபித்துக்கொள்ளக்கூடாது. நேற்று இரவு துப்பறியும் இலாகா ஹெட்கான்ஸ்டபிள், 321 ஐ, ஒரு ஆசாமியைப்போய் கண்டு ஏதாவது உளவு கிடைக்குமா என்று பார்த்துவர அனுப்பியிருந்தேன். அவன் இன்னும் வந்து சேரவில்லை. ஒரு வேளை அவன்தான்...”

டெ. கமி:—ஹூம்! அப்படியா? இன்னும் வரவில்லையா?

என்று சொல்லி வாய்மூடுமுன் உள்ளே ஒருவன் வந்து ஸலாம்செய்து நின்றான்.

டெ. கமி:—என்ன சங்கதி?

321:—நேற்று ராத்திரி நமக்கு வழக்கமாய்துப்புக்கொடுக்கும் முனுசாமியைக் காணப் போனேன்.

டெ. கமி:—உம்! கண்டாயா?

321:—அவன், தன் அறையில், அப்படிப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான் அவனை,‘என்னப்பா முனிசாமி’ என்று கூப்பிட்டுக்கொண்டே அறைக்குள் இரண்டடி எடுத்து வைத்தேன். அவன் என் பக்கமாய்த் திரும்பினான். பிரமித்துவிட்டேன். ஏனெனில் அவன் முனுசாமியேயல்ல. இதையறியுமுன் என் மண்டை மேல் ஒரு பலத்த அடி விழுந்தது. அப்படியே சாய்ந்தேன்.

டெ. கமி:—பிறகு!

ஒருமணி நேரத்திற்குமுன், கண்ணைத் திறந்து பார்க்கும்பொழுது, ராபின்ஸன் பார்க்கில், ஒரு பெஞ்சியின்மேல் படுத்திருப்பதாயறிந்தேன். எழுந்து மெல்ல மெல்ல வந்தேன்.

டெ. கமி.—சரி போய் டாக்டரைப் பார். 321 சலாம் செய்து வெளியே சென்றான்.

இன்ஸ்:—இந்தக் கடிதத்தை கைரேகை பரிசோதிப்பவரிடம் கொடுத்து ரிப்போர்ட் செய்யச் சொலலும்.

இன்ஸ்பெக்டர் பிழைத்தேன் என்று தனக்குள் கூறிக்கொண்டு சலாம் செய்து கடிதத்தை வாங்கிக்கொண்டு வெளியே சென்றார்.

(தொடரும்)

உயர்ந்த
வைரங்கள்
T. R.
ஜோஷி & சன்ஸ்,
Diamond Merchants
38, ஏகாம்பரேசுவரர் அக்ரஹாரம்
பி. டி. மதராஸ்.

BOERICKE&TAFEL'S
அசல் ஹோமியோபதிக் டைல்யூஷன் மருந்துகள் (உபயோகமற்றவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்டவையல்ல) டிஷ்யூ நிவாரணிகளும்-½ அவுன்ஸ் முதல் 4 அவுன்ஸ் வரையில் டிரைசுரேஷன்ஸ் & யாத்திரைகள்; அசல் சீல் வைத்த புட்டிகளில் கிடைக்கும். கேட்லாக் இனம்.

GUERNSEY'S OBSTETRICS AND DISEASES OF WOMEN AND YOUNG CHILDREN Rs. 13/-
SETT DEY & CO.,
40-A, Strand Road, Calcutta.

G. கன்னய்யா கம்பெனி
இரும்புபெட்டி வியாபாரம்.

நெ. 137, பிராட் வே, மதராஸ்


பம்பாயில் இருக்கையில்

. சௌகர்யம்—சிக்கனம் !
—இவற்றிற்கு—
முதல் தரமான சாப்பாடு; சிறந்த ஊழியம்; ஆரோக்ய ஸ்தலம்; விசாலமான அறைகள்; எல்லா சௌகர்யங்கள்; விக்டோரியா டர்மினஸுக்கு 5 நிமிஷத்தில் போய்ச் சேரலாம்; இன்னும் வியாபாரஸ்தலஙகள்தியேட்டர் முதலியவற்றிற்கும் சமீபம். மிதமான சார்ஜுகள். நீங்கள் வரும் நேரத்தைப்பற்றி முன்னதாகவே எழுதுக அல்லது தந்தி மூலம் அறிவித்து விடுக.

கீழ்க்கண்ட இடத்தில் தங்குக.

நாஷனல் ஹிந்து ஹோட்டல்
பம்பாயிலுள்ள பிரபல தென்னிந்திய ஹோட்டல்
பலார்ட் பியர் - டிராம் ஜங்ஷன்
மிண்டுக்கு எதிரில் - போர்ட் - பம்பாய்.

குழந்தைகளின் வயிற்று ஜுரக் கட்டிகளை
சந்தேகமின்றி சமனப்படுத்துவது
பால சஞ்சீவினி
இதுவேதான்
உண்மையான அசல் விஜயநகரம் மருந்து
விஜயநகர சமஸ்தான வைத்திய பாரம்பரை பிள்ளா குடும்பத்தாரால் தயார் செய்யப்பட்டது.
Dr. பிள்ளா பாபய்யா பாத்ருடு பிரதர், விஜயநகரம்.
மதராஸ் பிராஞ்சு: 98-99, பிராடீஸ் ரோட், மைலாப்பூர்.

விமலாவின் மணம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி.)

வீற்றிருப்பதையும் தான் வேறு ஒரு பங்களாவில் இருப்பதையும் கண்டு ஆச்சரியமடைந்து, தான் எப்படிப் பிழைக்க முடிந்தது, என்ன விஷயம் என்று கேட்டு கமலகாந்தன் முகத்தை நோக்கினுள்.

கமலகாந்தன், "கண்ணே விமலா! உன் தந்தைக்கு நன்ருய்ப் புத்தி கற்பிக்கவே இப்படி நாடகம் நடித்தேன். துர்கப்பிரஸாத்தாக நடித்தது நானேதான். அவன் எனக்கு வெகு நாளைய நண்பன். தனக்குக் கலியாணமென்றும் என்னை வரும்படியும் எழுதியிருந்தான். பெண் யாரென்று விசாரித்ததில் நீதானென்று கண்டுகொண்டேன். உடனே நேரில் பம்பாய் சென்று, சகல விஷயங்களையும் அவனிடம் கூறி, என்னுடைய தங்கை சாமளாவை அவனுக்கு மணம் செய்துகொடுப்பதாய் வாக்குறுதி செய்து கொடுத்து, அவனைப் போல் மாறுவேடந்தரித்து இங்கு வந்து உன்னை மணம் செய்துகொண்டேன். நான் பம்பாய் சென்றதால் நான் உன்னைக் கண்டு நேரில் விஷயங்களைக் கூறச் சமயம் வாய்க்கவில்லை. இப்படி நீ விஷயத்தை அறியாமல், உயிரைப் போக்கிக் கொள்ள விஷத்தை உபயோகிப்பாய் என்று எனக்குத் தெரியுமாகையால், உன் அந்தரங்கத் தோழி சுந்தரி மூலமாய்த்தான் நீ விஷம் வாங்கிவருவாயென யோசித்து அவள் கையில் மயக்கம் மாத்திரம் தரக்கூடிய ஒரு மருந்தைக் கொடுத்து, நீ விஷம் வாங்கி வரச்சொன்னல் இதைக் கொடுத்துவிடும்படி ஏற்பாடு செய்திருந்தேன். அதன்படியே நடந்தது. நீ மயங்கி விழுந்தவுடன் ஒருவரும் அறியாவண்ணம், முதலிலேயே ஏற்பாடு செய்திருந்தபடி உன்னை என் வீட்டிற்கு எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன். உடனே இந்த விஷயங்களை எல்லாம் விவரமாய் உன் தந்தைக்கு எழுதி அனுப்பிவிட்டேன். இனி, அவர் ஒன்றும் செய்வதற்கில்லை. துர்க பிரஸாத்துக்கு கொடுக்கவேண்டிய தொகையை உனக்காக நானே அவனுக்குக் கொடுத்துவிட்டேன். அடுத்தவாரம் துர்க பிரஸாத்துக்கும் என் தங்கைக்கும் விவாகம் நடக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளும் செய்யவேண்டும். எழுந்திரு போவோம்" என்று அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

இவ்வெதிர்பாராத சந்தோஷத்தால் வெட்கித் தலை குனிந்த விமலா, "பிராணநாதா! தங்களைத் துர்க பிரஸாத் என்று எண்ணி வாயில் வந்தபடி ஏதேதோ திட்டினேன். மன்னிக்க வேணும்" என்று அவன் காலைப் பிடித்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

கமலாகாந்தன் அவளை எடுத்துக் கண்ணைத் துடைத்து, சமாதானம் செய்து, "உன்மேல் தவறு ஒன்றுமில்லை. சந்தர்ப்பம் அப்படியிருந்தபடியால், நீ அப்படி நடக்க வேண்டியதுதான் நீ தற்கொலைசெய்துகொள்ளாமலிருப்பதற்காக, இரவு பகலாய், உன்னை, சுந்தரியும் கமலாவும் காப்பாற்றினதற்கு அவர்களுக்குத் தக்க சன்மானம் செய்யவேண்டும். சீக்கிரம் போய் உன் தாய்தந்தையர்களைச் சமாதானம் செய்யவேண்டும்" என்ருன்.

இருவரும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்து கொஞ்சிக் குலாவிவிட்டு, தோட்டத்திற்குச் சென்றனர். அங்கு இரு வேலைக்காரிகளும், விமலாவின் தாய்தந்தையரும் வந்திருந்தனர். கமலாகாந்தனும், விமலாவும் அவர்களை வணங்கினர். தயாநாதர் இருவரையும் ஆசீர்வதித்துத் தன்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டார். சுந்தரிக்கும், கமலாவுக்கும் தலைக்கு, ஐநூறு ரூபாயும், புடவையும் சன்மானம் அளிக்கப்பட்டது.

மறுவாரம் துர்கப் பிரஸாத்துக்கும், சாமளாவுக்கும் விவாகம் நிறைவேறிற்று.

கமலகாந்தன், விமலா, தயாநாதர் அவர் மனைவி சாந்தாதேவி எல்லோரும் மயிலாப்பூரிலுள்ள 'கமலபவனம்' என்னும் கமலகாந்தனின் பங்களாவில் சுகமாய்க் காலங்கழித்தனர்.

விமலா இரவுபகலாய் கமலகாந்தனைப் புகழ்ந்தவண்ணம், அவனை ஓர் தெய்வம்போல் மதித்துச் சந்தோஷ சாகரத்தில் மிதந்து வந்தாள்.

உலக முழுதலும் பெயர் பெற்ற குடிகூரா

இது கீழ் சொல்லிய தோல் வியாதிகளை

தடையில்லாமல் கட்டாயமாய் ஆற்றும் :—

கரப்பான், சொறி, பருவுகள், கட்டிகள், ரணங்கள், இன்னும் மற்ற எல்லா வேதனை செய்யும், உருவழிக்கும் தோல் வெடிப்புகள்.

குடிகூரா சோப்புக்கும் (Cuticura Soap) குடிகூரா தைலத்துக்கும் (Cuticura Ointment) அதிசயமான நோய் தீர்க்கும் வல்லமை உண்டு, ஏனென்றல் அவைகளில் புண்ணாற்றி நோய் தீர்க்கும்படியான மருந்துகள் கலந்திருக்கின்றன. இந்த மருந்துகளுக்கு நோய்தடுக்கும் சக்தி அதிகமாயிருக்கிறது.

இந்த மருந்துகள் தோல் வெடிப்புகளின் உள்ளே புகுந்து சொறியை உடனே தணிக்கும். இவை புண்ணிவிடுக்கும் கருமிப் புழுகளைக் கொன்று, நோயை வைத்திருக்கும் சிவந்தி பாஷாணங்களை நீக்கிவிடும். உறுதியாகவும் நிச்சயமாகவும் சதையைச் சுகமாக்கி, அதினல் தோல் வெடிப்பைத் தேற்றி, புதிய தோல் வளரும்படியாகச் செய்யும்.

நோயிருக்கும் பாகத்தை குடிகூரா சோப்புக்கட்டியாலும் (Cuticura Soap) வென்னீராலும் கழுவி, சுத்திசெய்து, மெதுவாய்த் துடைத்து குடிகூரா தைலத்தைத் (Cuticura Ointment) தடவ வேண்டும். இந்த உபசரணையால் உடனே வரும் சுகமும் தேற்றமும் உனக்கு அதிக ஆனந்தத்தைத் தரும்.

Cuticura

OINTMENT AND SOAP

குடிகூரா

தைலமும், சோப்புக்கட்டியும் எல்லா மருந்து கடைகளிலும், பஜார்களிலும் வாங்க அகப்படும்.

நஞ்சன்கூடுபல்பொடி

டப்பி) I. D. L. No 61. மெடிகேட்ட் (அறை 4

நஞ்சன்கூடுபல்பொடி பாக்டேரியின்

ஜிஞ்சிப்

வைடன்ஸால்



உயர் ரகத்திற்கும், சிக்கனத்திற்கும்

மைசூர் இன்ஸுலேட்டர்களை

உபயோகியுங்கள்.

திறமையான மேற்பார்வையின் கீழ் சிறந்த ரஸாயன முறையில் தயாரிக்கப்படுவது

ஒருமுறை ஆர்டர் செய்யக் கோருகிறோம்.

விவரங்களுக்கு எழுதுக:— மானேஜர்,

கவர்ன்மெண்ட் போர்ஸலீன் தொழிற்சாலை,

ஐயோ போய்விட்டதே!

(எஸ். ஏ. கணபதி பி. ஏ.)

முனியாண்டி ஒரு திருடன். ஒரு கே. டி. இதுவரை இருபது குற்றங்களில் அவன் சம்பந்தப்பட்டிருக்கிறான். அடிக்கடி அவன் போலீஸ் ஸ்டேஷனுக்கு விஜயம் செய்யும்படி நேர்ந்து வந்தது. எங்கு என்ன திருட்டு நடந்தாலும் முனியாண்டி ஸ்டேஷனில் ஆஜர் செய்யப்படுவான். அவனை விசாரித்துவிட்டு, அவன் திருடன் இல்லையென்று நிச்சயமானால்தான் போலீஸார் மேற்கொண்டு திருட்டைக் கண்டு பிடிக்கப் பிரயத்தனம் செய்வார்கள்.

ஒவ்வொரு தடவை போலீஸ் ஸ்டேஷனுக்கு வரும் போதும் அவன் தடபுடலாகக் கோபிப்பான். தன்னைத் தப்பாக அரெஸ்ட் செய்துவிட்டதாகச் சொல்வான். தன்னைக் கைது செய்து போலீஸார் வேலையைப் பாழ் பண்ணிக் கொள்கிறார்கள்; வரிப் பணத்தை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு வேலையற்றுப் போய் தன்னையே பிடிக்கிறார்கள் என்று சொல்வான்.

அவன் அப்படிப் பேசும் போதெல்லாம் போலீஸ்காரர்கள் எல்லோரும் சிரிப்பார்கள். அது அவன் பல்லவி என்று அவர்களுக்குத் தெரியும். அவர்களுக்கு ஒரு பக்கத்தில் அவன்மீது இரக்கம் இருந்து வந்தது; முனியாண்டி கைகள் மாத்திரம் பிறர் சொத்தைத் தன் சொத்துப்போல் பாவிக்கும் தன்மையுடையனவாக இருந்தனவேயொழிய, மற்றப்படி அவனும் யோக்கியன் தான்.

* * *

ஒரு நாள் ஒருவர் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தார். தம்முடைய பண முட்டையை யாரோ கையிலிருந்து பிடுங்கினதாகவும், பிடுங்கினவன் ஓடினதாகவும், அப்பொழுது தாம் அவனை நன்றாக அடையாளம் கண்டுகொண்டதாகவும் கூறினார். அவர் கூறின அடையாளங்களிலிருந்து ஆசாமி முனியாண்டிதான் என்று போலீஸாருக்குத் தெரிந்துவிட்டது.

உடனே ஒரு போலீஸ்காரன் "கருப்பையா பிள்ளை தெரு"வுக்குப் புறப்பட்டுப் போனான். முனியாண்டி சிறையில் இருந்ததுபோக மற்றக் காலங்களில் அந்தத் தெருவில் ஒரு வீட்டில்தான் இருப்பான்.

போலீஸ்காரன் "கருப்பையாபிள்ளை தெரு"வுக்கு வந்து முனியாண்டி வீட்டையடைந்து, அவன் வீட்டிலிருக்கிறானா என்று விசாரித்தான். வீட்டி போயிருக்கிறான். வர நேரமாகும்" என்றாள்.

போலீஸ்காரனுக்கு இது வழக்கமாகவரும் பதில் என்று தெரியும். கிழவிபேச்சை அவன் லட்சியம் செய்யவில்லை. பேசாமல் காத்திருந்தான்.

நடுநிசி சமயத்தில் முனியா யாண்டி வீடுவந்து சேர்ந்தான். அந்த அகாலவேளையில் போலீஸ் கொட்டடிக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்றதும் அவனுக்குக் கோபம் வந்தது. "வண்டி வைத்துக் கூட்டிக்கொண்டு போ!" என்றான் போலீஸ்காரனிடம்.

போலீஸ்காரன் சிரித்து, "பயப்படாதே. ஒருவரும் உன்னைப் பார்த்துவிட மாட்டார்கள். நல்ல மனிதர்களெல்லாம் இத்தனை நாழிக்குத் தூங்குவார்கள்" என்றான். முனியாண்டி போலீஸ் "லாக்கப்"பில் அன்றிரவு அடைக்கப்பட்டான்.

மறுநாள் பணமுட்டையைப் பறிகொடுத்தவன் வந்து முனியாண்டியை அடையாளம் கண்டுபிடித்தான். உடனே முனியாண்டி மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்பட்டான். முனியாண்டி தான் குற்றவாளி இல்லவே இல்லையென்று வெகுதூரம் வாதாடிப் பார்த்தான். மாஜிஸ்டிரேட் எத்தனையோ பேரிடம் இதேமாதிரி வாதத்தைக் கேட்டிருக்கிறார். முனியாண்டியை ஆறு மாதம் சர்க்கார் விருந்தினனாக இருக்கும்படி அவர் அனுப்பினார்.

சிறைச்சாலைக்கு முனியாண்டி வந்து சேர்ந்ததும் வார்டர் அவனைக்கண்டு சிரித்தான். "வா தம்பி சௌக்கியமா?" என்று விசாரித்தான்.

முனியாண்டி பல்லைக்காட்டினான்; கோபச் சிரிப்புச் சிரித்தான். "சத்தியமாக இந்தத் தடவை நான் குற்றவாளி இல்லை. ஒரு செம்புக்காசு நான் பார்க்கவில்லை. களி தின்ன என்னை அனுப்பிவிட்டார்கள்" என்றான்.

பதினைந்துநாள் கழித்துமுனியாண்டி, வார்டரிடம் தன்னை அநியாயமாய்ச்சிறையிட்டிருப்பதைப்பற்றி வருந்தினான். வார்டர் அதற்கு, "கிடக்கிறது முனியாண்டி! இங்கே நல்ல கட்டிடத்தில் சுகமாய் இரேன். ஊரில் மழை கொட்டி வதைக்கிறது. ஆற்றில் தண்ணீர் ஏறி விட்டது" என்றான்.

முனியாண்டி இந்த விவரங்களை மிகவும் சிரத்தையாகக் கேட்டான். மறுநாள் வார்டரோடு பேச வேண்டும் என்றான். வார்டர் வந்தான். முனியாண்டி அவனிடம் "ஆற்றில் தண்ணீர் இப்பொழுது எப்படி இருக்கிறது?" என்றான்.

"அதை ஏன் கேட்கிறாய் போ! மேல் ஊருக்குப் போகும் பாலம் இருக்கிறது பார், அது அடித்துக்கொண்டு போகப்பட்டது." என்றான்.

"அடித்துக் கொண்டு போகப்பட்டதா?" என்று முனியாண்டி அலறினான்.

வார்டர், "நீ சிறையை விட்டு வெளிக்கிளம்புவதற்குள் வேறொரு பாலம் கட்டி விடுவார்கள். பயப்படாதே!" என்றான்.

முனியாண்டி தலையில் அடித்துக் கொண்டு, "வேறு பாலம் கட்டினால் எனக்கு என்ன ஐயா? அந்தப் பாலத்தடியிலே தான் பண மூட்டையை ஒளித்து வைத்தேன்" என்று அழுதான். வார்டர் சிரித்தான்.

மகாபாரதம்

சாந்தி பர்வம்

——

(மோக்ஷ தர்மம்)

பராசரர்—ஜனகர் சம்வாதம்

“சிரேயஸுக்குக் காரணம் எது? கதியாவது எது? எதைச் செய்தால் நசியாமலிருக்கும்? எங்கே சென்றவன் திரும்பாமலிருக்கிறான்?” என்று ஜனகர் பராசரரைக் கேட்டார்.

இதற்குப் பராசரர் பதில் கூறியதாவது:— பற்றில்லாமலிருப்பது சிரேயஸுக்குக் காரணம் ஞானம் பரமான கதி. ஸத்பாத்திரத்தில் செய்யப்பட்ட தானம்போல் அனுஷ்டிக்கப்பட்ட தவமானது நசியாது எப்பொழுது ஒருவன் அதர்மமயமான பாசத்தை அறுத்து தர்மத்தில் பற்றுள்ளவனாகிருனே அப்பொழுது அவன் அபயதானத்தைச் செய்து ஸித்தியை அடைகின்றான். புத்தியுள்ளவன் விஷயங்களின் மத்தியில் வசித்தாலும் வஸிக்கின்றவனாகிறதில்லை. பற்றுதலுள்ள துர்ப்புத்தியுள்ளவன் விஷயங்களில்லாத போதம் விஷயங்களிலேயே வசிக்கிறான் அதர்மமானது தண்ணீர் தாமரை இலையைப் பற்றாததுபோல் அறிவுள்ளவனைப் பற்றுகிறதில்லை. பாவமானது புத்தியில்லாதவனை விடுவதில்லை.

யோகியானவன் தியானத்தினால் பிரம்ம தேஜஸை அடைகின்றான். மனிதன் மோக்ஷத்தில் விருப்பமுள்ளவனாகி எல்லாவற்றையும் தள்ளுகின்றபொழுது இவனுடைய புத்தியானது விஷயங்களினின்றும் விலகுகின்றது. அப்பியாஸத்தினால் குருடன் தன் வீட்டில் நடப்பதுபோல் அறிஞன் யோகத்துடன் கூடிய மனத்தால் மோக்ஷ கதியை அடைகின்றான் பிறந்தால் இறப்பதும் இறந்தால் பிறப்பதும் சொல்லப்பட்டிருக்கின்றன. மோக்ஷ தர்மங்களை அறியாதவன் பந்தத்தை அடைந்து சக்கரம் போலச் சுழலுகிறான். ஞானவழியில் சென்றவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் சுகமே. மனமானது ஆத்மாவை இழுக்கிறது. ஆத்மா மனத்துடன் சேருகிறது. அது யோகத்துடன் கூடுகிறபொழுது பரமாத்மாவைப் பார்க்கிறது. இந்திரிய விஷயங்களில் பற்றுள்ள எவன் ஆத்மாவுக்கு வேறானவைகளின் காரியத்திலிருந்துகொண்டு அவைகளைத் தன் காரியமாக நினைக்கிறானே அவன் தன் காரியக்குறைவை அடைகின்றான். பிராக்ஞனுடைய ஆத்மாவும் மற்றவனுடைய ஆத்மாவும் அவனவன் செய்த புண்ய பாபங்களாலே ஸ்வர்க்கத்தில் மேலான கதியையும் கீழான திரியக் கதியையும் அடைகின்றன. ஆத்மாவை அறியாதவன் அக்ஞானத்தால் சூழப்பட்டு ஆகாரத்திலும சிற்றின்பத்திலும் பற்றினவனாகிப் பிறவிக் குருடன் போல வழியை அடைகிறதில்லை விரிவானவைகளெல்லாம் தன்னைத்தவிர மற்றவைகளுக்கென்றும் தியாகத்தை ஆத்மஹிதத்திற்கென்றும் வித்வான்கள் அறிகின்றார்கள். தோழர்களின் கூட்டமானது சங்கற்பத்தால் உண்டாகின்றது. ஞானிகள் காரணத்தை முன்னிட்டு ஏற்பட்டவர்கள். பத்தினியும் புத்திரனும் வேலைக்காரனும் விருப்பப்படி வெளிவர விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள் தாயும் தந்தையும் எவனிடமிருந்தும் எதையும் அடைகிறதில்லை. எல்லாப்பிராணிகளும் முன்பு சுபாசுப கர்மங்களைச் செய்தமையால் கர்ப்பமுதல் தாமாகவே தம்முடைய சுபாசுப கர்மங்களைத் தவறாமல் அடைகின்றன. எல்லா மனிதனும் தனக்கு ஏற்பட்ட ஜாதி ஆசாரத்தையும் தன்னால் செய்யப்பட்ட புத்திரன்

எதிர்கால சோதிடம்.

ஒரு வருஷத்திற்கு வாரப் பலன் எழுத ரூ. 4. மாதவாரி பலன் எழுத ரூ. 2. பலன் சரியில்லாவிடில் பணம் வாபீஸ். ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.

அருட் பிரகாசர் சோதிடாலயம்.
(சு) புதுச்சேரி.

BLACKLOCK & MACARTHUR LTD., GLASGOW

வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளை தான உயர்ந்தது. வெண்மை மாறாது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டுவரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்கவேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான்மார்க்கும் இரண்டு ஈய ஸீல்களும் இருக்கிறகெக்காகப் பார்த்து வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள். செந்தூரத்தில் “மான்மார்க்” செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents:-M. R. V. AIYER & Co., 49, பந்தர் தெரு, மதராஸ்.



பண்டித ஜவஹர்லால் நேரு சமீபத்தில் பம்பாய்க்கு விஜயம் செய்தபோது ஸ்டேஷனிலிருந்து

முதலான ஸ்தாரத்தையும் நல்ல குடிப் பிறப்பையும் பொருள் சேர்ப்பதையும் தன்னல் செய்யப்பட்ட சுபாசுப கர்மத்தால் அதற்குத்தக்கபடி அடைகின்றன.

மேற்கூறியவாறு ஜனகனுக்கும் பராசரருக்கும் நடந்த சம்பாஷணையை பீஷ்மர் யுதிஷ்டிரருக்குச் சொல்லி ஜனகன் உண்மையை அறிந்து சந்தோஷமடைந்தது போலிருக்க வேண்டுமென்று சொன்னர்.

பிறகு யுதிஷ்டிரர் உலகில் வித்வான்கள் உண்மை, அடக்கம், பொறுமை, ஞானம் முதலியவற்றைப் புகழ்கிறார்களென்றும் அதில் அவருடைய அபிப்பிராயம் என்னவென்றும் பீஷ்மரைக்கேட்டார். அதற்கு அவ்விஷயமாக ஸாத்யர்களுக்கும் ஹம்ஸத்திற்கும் நடந்த ஒரு ஸம்பாஷணை இருப்பதாயும் அதைச் சொல்வதாயும் கூறிவிட்டுப் பின்வருமாறு சொன்னர்.—

ஒருகாலத்தில் பிரம்மதேவர் பொன்மயமான ஹம்ஸவேஷம் கொண்டு மூன்று உலகங்களிலும் சஞ்சரித்து வந்தார். அவர் ஒரு சமயம் ஸாத்யர்களிடம் வந்தார். ஸாத்யர்கள் ஹம்ஸத்தைப் பார்த்து "இவ்வுலகில் மனிதன் எதைச் செய்து ஸகல பந்தங்களிலிருந்தும் சீக்கிரத்தில் விடுபடுகிறானே அதைச் சொல்லவேண்டும்" என்று கேட்டனர். ஹம்ஸமும் பின்வருமாறு பதிலளித்தது:— தவம், தமம், ஸத்தியம், மனத்தை அடக்குதல் இவை செய்யத் தக்கவை. கீழ்ப்பட்டவனிடமிருந்து உயர்ந்த விஷயத்தை கிரகிக்கக் கூடாது. பிறருக்கு அச்சத்தை யுண்டாக்குவதும் அமங்களமும் நரகத்தைக் கொடுப்பதுமான வார்த்தையைச் சொல்லக் கூடாது.

வேதத்தினுடைய ரகஸ்யம் ஸத்யம். ஸத்யத்தின் ரகஸ்யம் அடக்கம். அடக்கத்தின் ரகஸ்யம் மோக்ஷம் இதுவே எல்லாருடைய உபதேசமும். வாக்கின் வேகம், மனத்தின் கோபத்தினுடைய வேகம், அதிக ஆசையின் வேகம். உதரத்தின் வேகம், காமத்தின் வேகம் ஆகியவற்றை எவன் ஸஹிப்பானே அவனையே நான் பிராம்மணனாகவும் முனியாகவும் நினைக்கின்றேன் கோபத்தை அடையாதவன் கோபிக்கின்றவனுக்கு மேலானவன். பொறுமையுள்ளவன் பொறுமையில்லாதவனுக்கு மேலானவன். மனிதன் விலங்குகளுக்கு மேலானவன். அவ்விதமே ஞானவான ஞானமில்லாதவனைக் காட்டிலும் மேலானவன். தன்னை ஒருவன் வைதாலும் தான் அவனைத்திருப்ப வைடக் கூடாது. இவ்விதம் பொறுமையுள்ளவனுடைய கோபமானது வைதவனை எரிக்கின்றது. இவனுடைய புண்யத்தையும் அவன அடைகின்றான்.

தீரனனவன் பாவங்களினின்றும் விடுபடுவது போலப் பாவங்களினின்றும் விடுபட்டுக் களங்க மற்றவனும் காலத்தை எதிர் பார்க்கிறவனுமாயிருந்து தைரியத்தினல் ஸித்தியை அடைகிறான். எவர்கள் ஸத்தியத்தையே விரதமாகக் கொண்டவர்களும் நன்றியறிவுடையவர்களும் தர்மத்தில் பற்றுளளவர்களுமாயிருக்கன்றார்களோ அவர்களோடு தேவர்கள் சுகத்தைப் பங்கிட்டடைகின்றார்கள். பேசுவதைக் காட்டிலும் பேசாமலிருப்பதைச் சிறந்ததாகச் சொல்லுகின்றார்கள் பேசினால், சத்தியமான வார்த்தையைச் சொல்ல வேண்டும்.

உலகமானது அக்ஞானத்தால் சூழப்பட்டிருக்கிறது. அது மாத்ஸர்யத்தால் பிரகாசிக்கிறதில்லை லோபத்தால் நண்பர்களை விடுகிறது. ஸங்கத்தால் ஸ்வர்க்கத்தை அடைகிறதில்லை. பிராம்மணர்களில் பேரறிவுள்ளவனே ஸந்தோஷித்துக் கொண்டிருக்கிறான். இவ்வாறு ஹம்ஸ ரூபியான பிரம்மா சொல்லி விட் ஸாத்யர்களான தேவகணங்களோடு ஸ்வர்க்கத்தை அடைந்தார்.

(தொடரும்.)

தமிழன்பர்களுக்கு ஓர் நல்விருந்து!
புதுமைக்கவி ஸ்ரீ பாரதியாரின் நூல்களைப் படித்து
ஆனந்தமடையுங்கள்.

1.	கவிதைகள் (8-பாகங்கள்)	ரூ. 2—8—0
2.	வசனங்கள் (6-பாகங்கள்)	,, 2—0—0
3.	கதைக்கொத்து	,, 0—8—0
4.	பகவத் கீதை	,, 0—8—0
5.	கட்டுரைகள் பகுதி 1 தத்துவம்	,, 0--10—0
	,, ,, 2 மாதர்	,, 0—8—0
	,, ,, 3 கலைகள்	,, 0—8—0
	,, ,, 4 சமூகம	,, 0--12—0

6. Bharathi and his works
by Mr. C. Visvanathan, Brother of Bharathi 0 4 0

பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

"அம்மா! பக்ஷணம் எனக்கென்றாள்"

சற்று முன் தான் குழந்தை ராஜம் வாசலில் விளையாடிக் கொண்டிருந்தாள் 'கம'' என்று ஒரு வாசனை உள்ளிருந்து வெளிக் கிளம்பியது. பக்ஷணங்கள் தான் தாயார் தயார் செய்கிறாளென் றெண்ணி ஓடோடியும் உள்ளே ஓடி வந்து.

"அம்மா! பக்ஷணம் எனக்கென்றாள்"

"கண்ணே! சாம்பாருக்கலலவோ தாளிக்கிறேன். தன்பண்ட மேதுமில்லையே" என்றாள்.

"அன்னையே! குழம்பிற்குத் தாளிப்பதனல் இவ்வளவு வாசனை எப்படி உண்டாகிறது' என்று குழந்தை ஆவலுடன் வினவினள்.

"செல்வமே! இது எல் ஜி. பெருங்காயத்தன் இன்பகரமான வாசனை: கடுகு முதலியவற்றுடன் அதையும கொஞ்சம போட்டு எண்ணெயில் வெடிகக விடுவதானல் வாசனை ஊரைத் தூக்குகிறது என்று அம்மையார் பதிலளித்தாள்.

அன்னையும் உடனே சாப்பிட வேண்டுமென்று ஆசைப்பட்ட குழந்தையை அணைத்து, அமுது படைத்தாள். வயிறு நிறைய உண்டபின் குழந்தை ராஜம் மகிழ்ச்சியுடன் பள்ளிக்கூடத்தற்கு ஓட்டம பிடித்தாள். எல். ஜி. தான் எல். ஜி அதற்கு ஒப்பும், உயர்வும இல்லை

லால்ஜி கோது & கம்பெனி,

பிரபல பெருங்காய வியாபாரிகள்.

பம்பாய் — சென்னை — கும்பகோணம்

ஜகப்பிரசித்தி பெற்ற
ஆர். முகம் அண்டு கம்பெனியாரின்
நெ. 1. மணிமார்க் பட்டணம்
மூக்குத் தூளை
உபயோகியுங்கள்.
TRADE MARK
1 நெ. வீசை 1-க்கு விலை ரூ 4 0
2 நெ. வீசை 1-க்கு விலை ரூ. 3 8
ஏஜண்டுகள் தேவை:—
விலாசம்: ஆர். முகம் அண்டு கம்பெனி
நெ. 5, ஓல்டு ஜெயில் தெருவு, மதராஸ்

"குஜராத்சமாச்சார்" (தினப பதிப்பு)
"பிரஜாபந்து" (வாரப் பதிப்பு)
[1898-ல் ஸ்தாபிக்கப்பட்டவை]
குஜராத்தில் பிராபல்யம் வாய்ந்தவை. ஆமதாபாத்தினின்று பிரசுரிக்கப்படுபவை.
குஜராத்தில் உங்கள் வியாபாரம் பெருக வேண்டுமானல்
இப்பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்யுங்கள்
ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதவேண்டும்.
Manager. **Gujarat Samachar & Praja Bhandhu**

கண்ணோட்டம்

ஸ்ரீமான் ஆர். பி. சேதுப் பிள்ளைக்குப் பதிலாக அண்ணாமலை சர்வகலா சாலையில தமிழ் லெக்சரராக நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீமான் அ. சிதம்பரநாதஞ் செட்டியார் பி. ஏ (ஹானர்ஸ்)



ஸ்ரீமான் ஸ்ரீநாத் எம். எஸ் ஸி. பெங்களூர் ஸிவில் அண்டு மிலிடரி ஸ்டேஷன் பிராஸிகூடிங் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் வி. ஸ்ரீனிவாஸன் புதல்வரான இவருக்கு லண்டன் கிங்க்ஸ் காலேஜில் உயர்தரப் படிப்பிற்காக இந்தியா கவர்ன்மெண்டார் உபகாரச் சம்பளம் கொடுத்திருக்கின்றனர்.



ஸ்ரீமான் வி துரைசாமி அய்யர் இவர் ராஜப்பிரதிநிதியின் அந்தரங்கக் காரியதரிசிக்கு ஸ்டனோகிரபர். சமீபத்தில் நடந்த அகில இந்திய டைப்ரைடிங் போட்டியில் நிமிஷத்திற்கு 89 வார்த்தைகள் டைப் அடித்து முதல் பரிசான தங்கப் பதக்கத்தைப் பெற்றார். சென்ற வருஷமும் இந்தப் பரிசை இவர்தான் பெற்றார்.

கும்பகோணம் டாக்டர் வி. எஸ். கோபாலசாமி அய்யரின் குமாரி ஸ்ரீமதி லக்ஷ்மிக்கும் ஹைதராபாத் ஸ்ரீமான் டி. பி. பாஸ்கர சாஸ்திரியின் குமாரன் ஸ்ரீமான் பி. ராமசந்திரனுக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது

சென்னை டெபுடி போஸ்ட்மாஸ்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீமான் கே நாராயண நாயர்.

பம்பாய் பிரபல டென்னிஸ் ஆட்டக்காரரான டாக்டர் என். ஆர். சுவர்ணவுக்கும் ஸ்ரீமதி குலாப் கால்சேகருக்கும் சமீபத்தில் விவாகம் நடந்தது.

மிஸ் சுந்தரி அய்யங்கார் லண்டன் சர்வகலாசாலையில் எம். ஏ. பரிக்ஷையில் தேறிவிட்டு, இவர் சமீபத்தில் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்தார். லண்டன் பிரிட்டிஷ் ஒலிபரப்பு ஸ்தாபனத்தின் மூலம் இவர் தமது வீணை வாசிக்கும் திறனை நன்கு காட்டியிருக்கிறார்.

செப்டம்பர் மாதம் 16-ந் தேதி முதல் வேலையிலிருந்து விலகிக்கொள்ளும் சென்னை சீப் எஞ்சினீர் ராவ்பகதூர் ஆர். நரஸிம்ம அய்யங்கார்.

மிஸ் இ. ஆல்ஸன். தஞ்சாவூர் பெண்கள் கிறிஸ்தவ உயர்தரப் பள்ளிக்கூடத்தின் அதிபரான இவர் தஞ்சை ஸ்திரீகள் சங்கத்தின் தலைவராகத்

தேவகோட்டை மெ. லெ. மெ. ஏஜண்டு ஸ்ரீமான் என். எஸ். சுப்ரமணிய அய்யர் குமாரன் கி. சுந்தரேசனுக்கும் புதூர் மிராசுதார் ஸ்ரீமான் ராமசந்திர அய்யர் குமாரி ஸ்ரீமதி ஜகதாம்

பிரமுகர்கள்



சென்ற ஜூலை மாதம் முதல் தேதி கண்ணனூரிலிருந்து புறப்பட்ட பட்டினிப பட்டாளம் இவ்வாரம் சென்னை வந்து சேர்ந்தது. சென்னையில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் பட்டாளத்தாருக்கு ஒரு உபசாரமும் பண முடிப்பும் அளிக்கப்பட்டது.

பிரபஞ்ச வர்த்தமானம்

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

யூத நர்ஸுகள் உலாவிக்கொண்டிருக்கையில் பயங்கொள்ளித்தனமான முறையில் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். பிறகு ஜாபா வாஸிகள் வெளியே வரக்கூடாதென தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. பிறகு இது ரத்து செய்யப்பட்டது.

மரணத்தை ஒத்திவைக்க யந்திரம்

மரணத்தைப் பலவருஷகாலம்வரை ஒத்திவைப்பதற்கு உபயோகமாக இருக்கக்கூடிய உபாயமொன்றைப் பிரபல விமானியான சார்லஸ் லிண்ட்பர்க்கும், நோபல் பரிசுபெற்ற விக்ஞான சாஸ்திரியான புரபஸர் அலெஸிஸ்காரலும் கண்டுபிடித்திருக்கின்றனர்.

அவர்கள் "செயற்கை ஹிருதய"மொன்றைச் சிருஷ்டித்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக அவர்கள் சென்ற பல வருஷகாலமாகச் சோதனை நடத்திவந்திருக்கின்றனர். ஒரு கண்ணாடிப் பெட்டிதான் அந்த "ஹிருதயம்". உயிரற்றுப்போன அங்கங்களை அதில் வைத்து அப்பெட்டியிலுள்ள சிறு அறைகள் மூலம் செயற்கை ஹிருதய அடிப்பால் செயற்கை ரத்தத்தையும் காற்றையும் அப்பெட்டிக்குள் செலுத்திவந்தால், அந்த அங்கங்கள் எப்பொழுதும் உயிருடனிருக்குமாறு செய்யலாம்

இவ்வுபாயத்தைக் கொண்டு, ஹிருதயநோய், புறைப்புண், காசநோய், மூத்திராசய நோய்கள், நீரிழிவு முதலிய நோய்

விக்ஞான சாஸ்திரிகள் நம்புகின்றனர்

அவ்விருவரும் யுனைடெட் ஸ்டேட்ஸில் ராக்பெல்லர் ஆராய்ச்சி நிலையத்தில், சில மிருகங்கள் இறந்து வெகுநேரமான பின் அவைகளின் அங்கங்களை எடுத்துப் பிழைக்க வைத்திருக்கிறார்கள்.

இந்தச் செயற்கை ஹிருதயம் இப்பொழுது கோபன்ஹேகன் ஆராய்ச்சி நிலையத்தில் சிறிதும் ஓய்வின்றி இராப்பகலாக வேலை செய்துகொண்டிருக்கிறது.

புரபஸர் காரல் மரணத்தை ஒத்திவைப்பதற்கான வழியைக் கண்டுபிடிப்பதில் மும்முரமாக ஈடுபட்டவர் எனினும், அவர் தமது முயற்சி வெற்றியடையுமாயின், அதனால் பெருங்கேடு விளையுமெனப் பலமுறை எச்சரித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிப்பதாவது:—

"எனது ஆராய்ச்சியின் மூலம் மனித ஆயுள் திடீரென 100 வருஷமாக அதிகரிக்கப்படுமாயின், அதனால் ஏற்படும் பொருளாதாரக் கஷ்டங்கள் நாகரீகத்தைக் குலைத்துவிடும். மரணமானது இவ்வுலகினின்றும் பலவீனர்களையும், நோயாளிகளையும், முட்டாள்களையும் அகற்றிவிடுகிறது.

மரணமே ஏற்படாதிருந்தால் நன்மையேற்படுமென்பதில் எனக்கு நம்பிக்கையில்லை.

எதியோபிய அரசரின் சொத்துக்கள் பறிமுதல்

எதியோபிய சக்ரவர்த்தியின் சொந்த நிலங்களனைத்தையும் இத்தாலிய அதிகாரிகள் பறிமுதல் செய்துவிட்டனர். அவை இத்தாலியர் குடியேறுவதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

இத்தாலியர் முதன் முதலாக அக்டோபர் மாதத்தில் சக்ரவர்த்தியின் நிலத்தில் குடியேறி விவசாயத் தொழிலைத் துவக்குவரென அறிவிக்கப்படுகிறது. இங்ஙனம் முதன் முதலாகக் குடியேறுபவர் கருஞ்சட்டைப் படையைச் சேர்ந்தவர்களாவர். அவர்கள் கிழக்காப்பிரிக்காவிலேயே நிரந்தரமாக வசிப்பதெனத் தீர்மானித்திருக்கின்றார்கள்.

இத்தாலிய பொக்கிஷ இலாகா காரியாலயமொன்றை ஏற்படுத்தும் பொருட்டு அவ்விலாகாவைச் சேர்ந்த சில அதிகாரிகள் அட்டிஸ் அபாபா சென்றிருக்கின்றனர்.

எதியோபிய பாங்கைக் கலைக்கும் வேலை செப்டம்பர் 1-ந் தேதி ஆரம்பமாகும்.

பெண் ஆணானள்

மூன்று மாதங்களுக்கு முன் வரை ஸ்திரீயாக இருந்த ஒருவர், சஸ்திர சிகிச்சை செய்துகொண்டதன் பேரில இப்பொழுது ஒரு புருஷனாகி விட்டார் அவரது பெயர் மார்க்வெஸ்டன். வயது 30. இங்கிலாந்து பிளிமவுத்துக்கருகிலுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த இவர் சர்வதேச ஸ்திரீகளின் விளையாட்டுகளில் பட்டம்பெறறவர். அப்பொழுது அவர் மிஸ் மேரி வெடித் எனப் பெயர் வைத்துக்கொண்டிருந்தார். அவர் தனது பழைய சிநேகிதி ஒருத்தியை விவாகம் செய்துகொண்டிருக்கிறார் 'லக்ஷத்தில் ஒரு பெண் என்றால் எனது மனைவிதான். 1928-ம் வருஷத்திலிருந்து எனது உடலில் மாறுதல் ஏற்பட்டு இறுதியாகப் புருஷனானேன். இவ்வளவு காலமும் அவள் எனக்கு வெகு உண்மையான சிநேகிதியாக இருந்திருக்கிறாள்" என அவர் தெரிவித்தார்.

குழந்தைக்கட்டி எனும் ஈரல் பெருக்கம்.

பாலகர்களுக்கு ஏற்பட்டு வரும் கட்டி, பாற்கட்டி, குழந்தைக் கட்டி எனும் இப்பொல்லா வியாதியை வேருடன்களைய இப்புத்தகம இன்றியமையாத பொக்கிஷம் இச்லிக் கட்டிகளின் உற்பத்தியும் அதற்குரிய காரணங்களும் தாய்மார்கள் இருக்க வேண்டிய அவசியமான முறைகளையும் பற்றி யாவரும் எளிதில் அறியும் வண்ணம் எழுதப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1—4.

சுதேசமித்திரன் புத்தகசாலை,

சென்னை.

செவிடு

"டெப்கில்லர்" செவிட்டுத் தன்மையை சாசுவதமாகப் போக்கிவிடும். இன்னும் காதில் ஏற்படும் இதர கோளாறுகளையும் அகற்றிவிடும். எவ்வளவு நாள்பட்ட செவிடாக விருந்தாலும் சரி, சிறிதும் சந்தேகமின்றி நிரந்தரமாக நிவர்த்திக்கப்படும்; செவிடர் செவ்வையாகச் செவியுறுகிறார். கால்செவிடு, அரைச்செவிடு அல்லது முழுச்செவிடு எதுவாகவிருந்தாலும் அக்கரையில்லை; நீண்டகால ஜலதோஷம், இருமல், ஜுரம், தொண்டைச் கோளாறு, மூக்குக் கோளாறு முதலிய எக்காரணங்களால் ஏற்பட்ட செவிடாயினும் சரி குணமாகிவிடும். சீழ்வடிதலும் நின்றுவிடும். ஆயிரக்கணக்கானவர்கள் குணம் பெற்றிருக்கின்றனர். விலை ரூ 5; தபால் செலவு 7-அணா

MAHAMBS TRADING COMPANY OF ASIA ndian Depot,



கவலை யொழிக்க

இந்திய தேயிலை பானம்

"துக்க நிவாரணி தேயிலையே" என்று ஒரு வேதாந்தி கூறியிருக்கிறார். அது கவியின் சாமர்த்தியமான கூற்றல்ல. தேயிலை பானம் செய்யும் ஒவ்வொருவரும் அனுபவத்தில் தெரிந்துகொண்டது. இந்தியாவில் விளையும் தேயிலையினால் தயாரித்த பானத்தை முதலில் தாம் சாப்பிட்டவர்கள் மிகவும் நேர்த்தியானதும் அதிசயமான பொருள்களைப் பார்த்தவுடன் என்ன உணர்ச்சி யேற்படுமோ அதற்கு ஒப்பிடுகிறார்கள்.

தேத் தண்ணீர் செய்யு முறை

சுத்தமான தண்ணீரை கொதிக்க வை. ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டி ஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூனும் நல்ல இந்தியதேயிலையை போட்டுகொதிக்கும் ஜலத்தை விடு. 5 நிமிஷம் கழித்துவடிக் கட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளவும்.

இந்தியாவின் சந்தோஷமும், பெருமையும் – இந்திய தேயிலை

IK 43.

Regd No. 2544.

கீர்த்திபெற்ற தீர்க்க தரிசிகளின்

சரித்திரக்கொத்து.

சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்யாயராயிருந்த கிர்த்தனுசார்ய

ஸி. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், பி. ஏ., எழுதியது

கீழ்க்கண்ட ஏழு மத ஸ்தாபகர்களின் திவ்ய சரித்திரங்கள் வெளியாயிருக்கின்றன. சிறுவர் சிறுமியர் முதல் எல்லோரும் படித்துணருமாறு எளிய தமிழ் நடையில் எழுதப் பட்டிருக்கின்றன. தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்கள்.

1. ஸ்ரீ சங்கரர்
2. ஸ்ரீ ராமாநுஜர்
3. ஸ்ரீ மத்வர்
4. ஸ்ரீ குருநானக்
5. ஸ்ரீ மகாவீரர்
6. ஸ்ரீ கௌதமபுத்தர்
7. மகமத் நபி

ஒவ்வொரு புத்தகத்தின் விலை அணா 5

7 புத்தகங்களும் ஒரே புத்தகமாக காலிகோ கிலிட் பைண்டுள்ளது. விலை ரூபா 2-8.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை,

மவுண்ட் ரோட் - - மதராஸ்.